www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

Registered as a News Paper in Sri Lanka
දිනමුරසු වාරමලර්
பக்கம் 20
18-24.7.1993
ரூபா 8/50

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 8

## முத்தமிழ் வளர்த்த விபுலானந்தர் கண்ட கனவுகள் கைப்படுமா?






கப்பல் விடு தூது
அரசியல் அலசல்

நெஞ்சை அள்ளும்
சிறுகதைகள் + புதுமைத்தொடர்

காலத்தை வென்ற
விளையாட்டரங்கு
+
ஸ்போர்ட்ஸ்

இந்தவாரம்
நலந்தானா?
ராசிபலன்

பாப்பா முரசு



பொருள் புதிது - சுவை புதிது

1-20 வரை
ஏராளமான
செய்திகள்

உழைப்பாளி
எப்படி?
சினிமா
விமர்சனம்

சினிவிசிட்



உலக ரவுண்டப்



அல்லல்படும்
அகதிகளுக்கு
விடிவு
எப்போது?

கூடு - சுவை - சுவாரசியம் அதுதான் தினமுரசு

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

# முரசம்

அன்புடன் உங்களுக்கு
வணக்கம்.
நேசத்தோடு-
நிறைகளையும்-குறைகளையும்
சுட்டிக்காட்டி
எழுதப்படுகின்ற
எழுப்பப்படுகின்ற ,
விமர்சனங்களுக்கு-எப்போதுமே
முதல் மரியாதையிருக்கிறது.

மிரட்டல்-குதித்தல்
கிள்ளிப்பார்த்தல்
எல்லாம் எனக்கே தெரியும் ரக
போதனைகள்
இறுதி மரியாதையை
உடனடியாக பெற்றுவிடுகின்றன.

சராசரி வாசகரின்
இதயங்களுக்கும்
அவர்கள் எழுதும்
மடல்களுக்கும்-தவிர
வேறெந்த புத்திஜீவித்தனங்களுக்கும்
தினமுரசு சிரம் தாழ்த்தாது.

உனக்கு என்ன தெரியும்
என்பது திமிர்,
உனக்கும் தெரியும்
எனக்கும் தெரியும்
தெரிந்தவையும் உண்டு
தெரியாதவையும் உண்டு
பகிர்ந்து கொள்வோம்
பலவீனங்களை பலமாக்கிக் கொள்வோம்
என்பது
பரஸ்பர அன்பு.
அந்த அன்பு
எங்கள் வாசகர்களிடம் உண்டு
நிறைய உண்டு.
அதற்கு என்றுமே கட்டுப்படுவோம்.

எங்கோ இருந்து
முகம் தெரியாத திலகராஜ்
முகம் தெரியாத முகமட்
முகம் தெரியாத ஷர்மிளா-வாணி
என்று-
பட்டியலிட்டால் நீண்டு கொண்டே போகும்
அவ்வாறான அன்பானவர்களுக்கு
மதிப்பும் உண்டு. மரியாதையும் உண்டு.
சராசரி வாசகர்களே
எங்கள் ஆசிரியர்கள்.

தவறுகளில் இருந்து
கற்றுக் கொண்டுள்ளோம்.
சரியானவற்றை என்றுமே
பற்றி நிற்போம்.

■

தங்கள் ஆக்கங்களை
ஏன்-இணைக்கவில்லையென்று
இனியவர்கள் சிலர்-மடல் மூலமும்
தொலைபேசி ஊடாகவும்
அன்போடு கோபித்துக் கொள்கிறார்கள்.
தாமதமானாலும்-
உங்கள் பெயர்களையும்
முரசு உச்சரிக்கும்.
உங்கள் படைப்புக்களையும்
முரசு சுமந்து வரும்.

■

மற்றவை மறு முரசில்
வாழ்த்துக்களோடு-

அன்புடன்
ஆசிரியர்.

தினமுரசு
போன்: 820265

## கவிதைப் போட்டி இல-5

— —பரிசுக்குரியவையும்— —
பாராட்டுப் பெறுபவையும்

### பரிசுக்குரிய கவிதை

எதிர்கால வாழ்க்கைக்கு
ஒத்திகை தேவைதான்.
மூளைக்கும் வேலை கொடு
விண்வெளிக்கும் போகலாம்.

எஸ். உமா
நானுஓயா.

### பாராட்டுக்குரிய கவிதைகள்

வஞ்சியரின் சொந்தம்

"வாகாய் உடுத்தியிருந்தாலும் ,
வண்ணக் கனவுகளை சுமந்திருந்தாலும்
வஞ்சியருக்கு வாய்த்த இடம்,
இந்த அடுப்படிதானே"-என்று
வண்ணச் சிறுமியவள் வந்துரைக்கின்றாளோ.......!
தினமுரசில்....!

செல்வி: ஜோதிலட்சுமி இராமச்சந்திரன்
சார்ணியா தமிழ் மகா வித்தியாலயம்-பதுளை.

பார் பாரதி

மன்னித்துவிடு
பாரதி
நீ கண்ட
புதுமைப் பெண்கள்
இதோ
மீண்டும்
அடுப்பிடம் தஞ்சம்.

செ.ஆனந்தராஜா
கொழும்பு-11

தொடரும் தொடர்கதை

மலரேயுன்
வருங்கால
வாழ்க்கை நூலுக்கு
முகவுரை எழுதுகிறாயா?
இதுபெண் வாழ்வில்,
முடிவுரையின்றி
இடைவேளையில்லா
தொடர்க்கதைத்தானே.

செல்வி. நினோஸா ஸபூர்டின்
குருநாகல்.

நியமனம்

நாளைய
நிரந்தர உத்தியோகத்திற்கு
நங்கையிவள் பரீட்சை
எழுதுகிறாள்.
சித்தி
உண்டோ-இல்லையோ-
நியமனம் நிரந்தரமே!

வே.ராஜன்
ராஜன்ஸ் எஸ்டேட்,
கலஹா.



ஆரம்பமாகிறது!

அடிமைப்பட்டுப்
போகும்
வாழ்க்கையின்
முதல்ப்படி.
"அடுப்பூதும்
பெண்களுக்கு".....
தாரக மந்திரத்தை
தன் மேல்
சுமத்திக் கொண்டவள்
எதிர்காலத்திற்குத்
தயாராகிறாள்?

இளையஅப்துல்லாஹ்
அக்குறனை.

திணிப்பு

வாழ்க்கை வண்டியின்
வருமான
எரிபொருளுக்காய்
ஒரு பூவின்
பொற்காலம்
நெருப்பில்
எரிகிறது.

ரொஸ்னி குறைஷ்
நுரைச்சோலை.

## கவிதைப் போட்டி இல-8



**மேலே உள்ள படத்தைப் பாருங்கள். உங்கள் உணர்வுக் குதிரையைத் தட்டிவிடுங்கள். வந்து விழும் வார்த்தைகளை தபாலட்டையில் பதிவு செய்து அனுப்புங்கள். வெற்றி பெறும் முதல் கவிதைக்கு பரிசு ரூபா 100/- காத்திருக்கிறது.**
**அனுப்ப வேண்டிய கடைசித் திகதி 30.7.93**

பரிமாற ஆசை

தீதான் சுட்டபோதும்
தான் செய்து பரிமாற
ஆசை கொண்ட அப்பிஞ்சு
அளவோ தெரியாமல்
அகப்பையினைக் கைக்கொண்டு,
மலர்ந்த முகத்துடனே
அடுப்பருகே அமர்ந்ததன்றோ,

க. ரமேஸ்
திருகோணமலை.

வறுமை ஒழிப்பு

தென்றல்
பருவம்
தீயிடை
அணைவது
வறுமை
ஒழிப்பிற்காக

எஸ். சண்முகதேவர்
அம்மணிவத்தை.

நிர்ப்பந்தம்

உறவு வைரங்கள்
ஒளியிழந்ததால்
ஒரு-
வானம்பாடி
சுமை
தாங்கியாகிறது!

எச்.எம்.பைரூஸ்
சிலாவத்துறை.

அன்பின் அடிபணிவோ?

செந்தணலின் சூட்டினிலே
செங்கரங்கள் வாடுவதேன். இது
அன்பின் அடிபணிவோ-அல்லது
ஆர்வத்தின் பிரதிபலிப்போ?

எம்-எம்.சும்சுன் நாபியா
புத்தளம்.

தேடல்!

உன்!
பிஞ்சு விரல்கல்
எதைத் தேடுகின்றனவோ!
இந்த அக்கினிக்
குவழையில்!

நஸார்
கனோவள்பொல.

இளந்தளிர்

பருவமடையுமுன்னே
பக்குவமாய்-சமையல்
பழகிவிட்டதில்
பன்மடங்கு
மகிழ்ச்சியோ.

க.சந்திரகலா
ஹால்கரனோயா.

சமைக்கும் முன்
சமையல் கற்கின்றால்
சாமந்தி பூ

செல்வி: சுப்பிரமணியம் சிவத்திரிச்செல்வி
ரொடுல்ல.

வியாபாரச்சந்தையில்...!
இவள் மட்டுமென்ன
விதிவிலக்கா!

கே. வாணி
வத்தளை.

# வாசக(ர்)சாலை

கடந்த ஜுன் 27 தினமுரசில் நாரதர் எழுதும் எக்ஸ்ரே ரிப்போட்டில் சிங்களவர்களின் கருணையால் தமிழர்களும், தமிழர்களின் கருணையால் முஸ்லிம்களும் வாழ நினைத்தால் அது கௌரவமான வாழ்க்கை முறையல்ல. மாறாக அடிமை நிலையாகும் என்பது நாரதரின். அரசியல் கண்ணோட்டத்திற்கு எடுத்துக்காட்டாகும்.

எம்.ஏ.முஸ்தபா
மருதமுனை-3

அரசியல் அலசல், ராஜதந்திரியின் பக்கச்சார்பற்ற துணிச்சலுக்கு பாராட்டுக்கள்.

வீ.சுப்பிரமணியம்
கண்டி.

முரசே-என்னை ஆட்சி
செய்யும் அரசே
எனதன்பின் தினமுரசே
நீ ஒரு கானமுரசே-
என்நெஞ்சின் ஒலி
முரசே
நீ ஒரு ஞானமுரசே-
உனதம்சங்கள் சிறப்பே
உன் மேல் அனுதினம்

மோகப் பிறப்பே-
தித்திக்கும் சுவையான
உன் ஆக்கம்
தொடர்ந்து சுவைக்க
வேண்டுமென்பதே என்
நோக்கம்-
வளர்க தினமுரசு

மர்லினா பறகாத்
வகமல் கொல்லாவ.

வாரம் தோறும் மலரும்
'தினமுரசு' நாள் தோறும்
மலராதா என என்னை ஏங்க
வைக்கிறது.

நிஸ்லி நியாழ்
வே-உட.

வாரம் ஒரு முறை நாட்டின் நாலா பக்கங்களுக்கும் ,பறந்து, ஆயிரமாயிரம் வாசகர் இதயங்களில் வஞ்ச மில்லாது தஞ்சம் கொண்டு விட்ட தினமுரசே!

இன்னவள் உன்னில் தித்திக்கும் தேன் சுவையினை கடந்த இரண்டு வாரங்களாகத்தான் அருந்தியது. அப்பப்பா! எத்தனை இனிமை, அத்தனைக்கும் சபாஷ்!

யூ.எல்.பானு
இறக்காமம்.

வருவாய்....வருவாய் என்றே-
வழிமேல் விழியைக் கொண்டேன்.....
காத்திருந்தேன் களைத்திருந்தேன்
கனிவுடன் வந்துவிட்டாய். வியா
மூன் அன்று....
தினமுரசுக்கு, எனது வாழ்த்து...

கலைநேசன் அந்தோணி பெர்ணாடோ
அக்கரப்பத்தனை.

சூடு,சுவை, சுவாரசியம், ஆமாம். இவற்றை வழங்கி பத்திரிகை வானில் புரட்சிப் பாதையில் புதுமை படைத்து வீறுநடை போடும் தினமுரசே உன்பணி தொடர வாழ்த்துகிறேன்.

எஸ்.எம்.ஜுனைட்
மன்னார்.

"தினமுரசு வித்தியாசமான படைப்பு" ரசிகனின் "கண்ணே மதுமிதா" சூப்பரோ சூப்பர்.

நிஸ்வா ஸலாம்
தர்கா நகர்

அருமையான-அழகான புதிய சொற்றொடர்களிலும் மற்றும், அற்புதமான கவர்ச்சியான "தலைப்பு"க் கலிலும், "தூள்" பரத்துகிறது தினமுரசு! புதிய தொடர் உட்பட, பல்வகை கதை வடிவங்களை தரும் தினமுரசுக்கு நமது விசேட பாராட்டும்; நன்றியும் உரித்தாகட்டும்!

ஆம் இம்முறை ஆறாம் "முரசு" ஒரு அசத்து அசத்தியே விட்டது! எதை முதலில் படிப்பதென்பதில் திக்குமுக்காட்டம் வேறு!

வாஸிட் ஏ.குத்தூஸ்
கோட்டை முனை.

அன்பு தினமுரசே நீ வாரத்தில்
ஒரு முறை எம் இதயத்தில்
தேனை வார்க்கிறாய் உமக்கு
எம் பாராட்டுகள்.

ரிஸ்வான்:ரிஸானா
நிஹாரா:மர்லியா
மைமுன்
பேருவளை.

வாரம் ஒரு முறை மலர்ந்து வாசக நெஞ்சங்களை அப்படியே அள்ளி விடும் அன்பான வாரமலரே தினமுரசே! உனது உடலில் ஒவ்வொரு அங்கங்களாக அடங்கியிருக்கும் அத்தனை அம்சங்களும் வளர்ச்சி பெற்று வருவதைக் கண்டு வாழ்த்தாமல் இருக்க முடியவில்லை வாழ்த்துக்கள். வளர்க உன் பணி; தொடர்க உன் சேவை.

ரதிதேவிஅருணாசலம்
நீர்கொழும்பு.

முரசே; என் இதையத்தில் நீங்கா இடம் பிடித்து விட்டாய் இனி உன் சேவை எனக்குத் தேவை மென்மேலும் வாழ்க முரசே வளர்க.

எம்.எம்.சாரூக்
நுவரேலியா.

வாசகர்களுக்கு களம் அமைத்துக் கொடுக்கும் வகையில் தினமுரசில் பல புதிய அம்சங்கள் ஆரம்பமாகி இருப்பதையிற்று உவகை அடைகிறேன். என்றாலும் ஒரு குறை தேன் கிண்ணத்தில் கவிதைகள் போதாது. இன்னும் பல கவிதைகளை சேர்த்துக் கொண்டு கவிப்பிரியர்களின் தாகத்தை தீர்த்து வையுங்கள். ப்ளீஸ்!

கவிப்பிரியா நிஷா
வெல்லம்பிட்டிய.

**தவழும் போது**

டியர் முரசே! வெள்ளி தோறும் என் கரங்களில் உன் இதழ் தவலும் போதெல்லாம் என் உள்ளம் நனைகின்றது.
உன் பணியே தனிரகம் அதை நாடுதே என்மணம் உன் வளர்ச்சிக்கு வாழ்த்துக்கள்.

நிஸா.இக்பால்
பாணந்துரை.

சிரித்து, சுவைத்து, சிந்தித்து, செயல்படு என்று ஒருங்கே தரும் ஒரே மலர் தினமுரசு.

கே.வி.சத்தியமூர்த்தி
தலவாக்கொல்ல.

அன்பு முரசே உனது ஆக்கங்கள் போல் சிறுகதை, தூரத்து நாகரீகம்-பாப்பாமுரசு, சினிவிசிட், உலகரவுண்டப் என்பன மிகவும் அற்புத மானவை. என்றும் இன்று நீ விளங்க வேண்டும்.

பி.ஜீவரட்ணம்
அக்கரப்பத்தனை.

புதிதாய் வாரத்திலொரு முறை மலர்ந்த மலரே, உன் தேன் இதழ்களில் மொய்க்கும் வண்டுகள் அருமையிலும் அருமை. பெருமையிலும் பெருமை. ஒவ்வொரு வாரமும் உன் இனிய தரிசனத்திற்காக தவம் கிடக்கிறேன்.

எம்.உமாதேவி
நீர்கொழும்பு.

தினமுரசு வாசகர் வட்டத்தை உருவாக்கி அவர்களது சிந்தனைகளையும் ஆசிரியர் குழு அலசி ஆராய்ந்து ஈழத்துப் பத்திரிகை உலகில் புதியதொரு யுகம் படைக்க வேண்டும்.

பங்கஜா-தவயோகநாதன்
நிந்தவூர்.

சி.சுகிர்தா- கொழும்பு-13, பி.ராசியப்பன்- லிந்துலை, ஆர் செல்வராஜ்- டிக்கோயா, எஸ்.சேவியர்- நானுஓயா, பதுருநிசா முபைடீன்-காத்தான்குடி, கே. தயானந்தன்-வெள்ளவத்தை, மரியம் காலித்- கண்டி, சு.வடிவேல்-கொழும்பு-13, ஜி.மோகன்-கொழும்பு-11, றிஸ்வானா கமால்-பேருவளை, ஷர்மிளா இஸ்மாயில் - கண்டி, பிரேம்-பெரியகல்லாறு, பி.சந்திரமோகன்- லிந்துலை காக்கொலை, பி.சங்கர்-பதுளை, ராபி-மாத்தலை, சி. பிரதீபன்-கொழும்பு-3, க.ம.ஹரிசந்திரன்-கொழும்பு, ஏ.ஜன்வர்-பாணந்துரை, க. சுந்தர்ராஜ்-வெல்லம்பிட்டிய, பரமேஸ்வரி-ஆல்கரனோயா, எம்.ஏ.எம். முஸ்தபா- மருதமுனை-03, எஸ்.தனா-நேபொட், நி.ரங்கன்-சிலாபம், எச்.எம்.சுஜப்- நுரைச்சோலை, அஷ்ரப்டீன்-கிண்ணியா, வ.பேரின்பராஜா-மட்டக்களப்பு, எம்.சி.நாஸர்-புத்தளம், தங்கவேல் இளங்கோ-நுவரேலியா, பூபாலரத்தினம் வேல்முருகா- கொழும்பு-13, சி.குருதேவ்- கொழும்பு-13, எஸ்.ஐ.எஸ்.முஜிபர்-புத்தளம், அன்சார்- நிந்தவூர்-06, வி.பி.சிவபாலன்- தலவாக்கலை, ஏ.பி.எம்.ஜிப்ரி- பேருவளை, எஸ்.சிவயோகம்-அக்கரப்பத்தனை, ரா.ராமலிங்கநாதன்- கொழும்பு-06, ஆறுமுகம் விஜயகுமார்-நுவரெலியா,

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

# "கரும்புலிகளின் தற்கொலைத் தாக்குதல்! பலவீன மக்களின் பலம் பொருந்திய ஆயுதம்!!"

## கரும்புலிகள் தின பிரபா உரை எழுப்பியுள்ள சந்தேக அலை

(யாழ் நிருபர் வர்மா)

சமீபத்தில் யாழ்ப்பாணத்தில் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பினரால் கரும்புலிகள் தினம் பெரியளவில் அனுஷ்டிக்கப் பட்டது.

தற்போது புலிகளின் கரும் புலிகள் தினக் கொண்டாட்டம் பற்றியும், அவற்றில் உரையாற்றி வர்கள் வெளியிட்ட கருத்துக்கள் குறித்தும் இந்திய- இலங்கை உளவு நிறுவனங்கள் ஆராய்ந்து வருகின்றன.

குறிப்பாக புலிகளின் தலைவர் திரு.வே. பிரபாகரன் கரும்புலிகள் மத்தியில் உரையாற்றியிருக்கிறார்.

படுரகசியமாக நடந்த அக்கூட் டத்தில் பிரபா ஆற்றிய உரை மறுநாள் யாழ்ப்பாண பத்திரிகை களில் பரபரப்பாக வெளியாகி இருந்தது.

கரும்புலிகள் மத்தியில் பிரபா கரன் ஆற்றிய உரை முன்கூட்டியே தயாரிக்கப்பட்ட உரையாகும்.

சென்ற ஆண்டும் கரும்புலிகள் தினக்கூட்டம் நடைபெற்றது. ஆயினும் கரும்புலிகள் மத்தியில் பிரபாகரன் ஆற்றிய உரையென்று எதுவும் அப்போது வெளியிடப்பட வில்லை.

கடந்த ஆண்டைவிட இம்முறை கரும்புலிகள் தினக் கொண்டாட் டங்களுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்பட்டதை அவதானிக்கக் கூடியதாக இருந்தது.

அரச- தனியார் நிறுவனங்களும் பாடசாலைகளும் பூரணமாக மூடப் படவேண்டும் என்று புலிகள் கூறியி ருந்தனர்.

அரச உளவு நிறுவனங்கள், அரசியல் அவதானிகள் ஆகியோர் பிரபாகரன் ஆற்றியுள்ள உரையை கவனமாக ஆராய்கின்றனர்.

அந்த உரையின் பிரதான பகுதிகள் பின்வருமாறு-

"மனிதர்களின் இருப்பைவிட மனிதர்களின் செயற்பாடே போராட்ட வரலாற்றின் தத்து வத்தை உயர்த்துகிறது.

பெயர் குறிப்பிடப்படாத கரும் புலி வீரர்கள் பலர் அனாமதேய கல்லறைகளில் உறங்கியபோதும் அவர்களது சாதனைகள் வரலாற்றுக் காவியமாக என்றும் அழியாப் புகழ் பெற்று வாழும்.



முகத்தை மறைத்து-பெயரையும் புகழையும் மறைத்து இனத்தின் விடுதலைக்காக தமிழீழ விடுதலைக் காற்றுடன் கலந்துவிட்ட சரித்திர நாயர்களை சிரம் தாழ்த்தி வணங்கு கிறோம்.

மனித தியாகத்தின் இமயத்தை தொட்டுவிட்ட அந்த இமயங்களை நாம் அறிவோம். அவர்களது நெஞ்சத்தின் பசுமையில் ஊற்றெடுத்த உணர்வுகளை நாம் புரிவோம். விடுதலை வேள்வியில் புனித யாத்தி ரையில் அவர்கள் பயணமானார்கள்.

இது கரும்புலிகளின் சகாப்தம். பலவீனமான மக்களின் பலம் பொருந்திய ஆயுதமா கவே கரும்புலிகளை உருவாக்கினேன்.

வரைபடாத சித்திரங் களாகவும் எழுதப்படாத சரித்திரங்களாகவும் எமது வாழ்வுக் காக தமது வாழ்வைத் துறந்த அந்த அற்புதமான தியாகி களை எமது நெஞ்சில் நிறுத்திப் போற்றுவோம்.

புலிகளின் தாகம் தமிழீழ தாயகம்" இவ்வாறு பிரபாகரன் தனது உரையில் குறிப்பிட்டிருந்தார்.

இவ்வுரையானது மிகத் தெளிவாக ஆனால் மறைமுகமாக மனித வெடிகுண்டு கொலை யாளிகளுக்கு கௌரவம் செலுத்து கிறது. மறைமுகமாக பிரபாகரன் உரிமை கோரியுள்ளதையும் சுட்டிக்காட்டுகிறது என்பதே உளவு நிறுவனங்களின் கண்ணோட்ட மாகும்.

கரும்புலிகளின் தாக்குதல்கள் என்று விடுதலைப் புலிகளால் நேரடியாக உரிமை கோரப்பட்ட தாக்குதல்களில் பலியான மில்லர், போக் போன்றவர்களை எழுதப் படாத சரித்திரங்கள், வரையப் படாத ஓவியங்கள் என்று கூறவேண்டிய அவசியமில்லை. பெயர்களையும் , புகழையும் மறைத்தவர்கள் என்றும் சொல்லத் தேவையில்லை.

அமிர்தலிங்கம் கொலை, ஜெனரல் ரஞ்சன் விஜேரத்தின கொலை, ராஜீவ் கொலை, கூட்டுப் படைத் நடவடிக்கைத் தலைமையக குண்டுவெடிப்பு, கடற்படைத்தளபதி கிளன்ஸி பெர்னாண்டோ கொலை, முன்னாள் ஜனாதிபதி பிரேமா கொலை, முன்னாள் அமைச்சர் அத்துலத் முதலி கொலை போன்ற வற்றுக்கு புலிகள் இதுவரை உரிமை கோரவில்லை.

ஏனையவை உரிமை கோரப் பட்டவை என்பதால் அதில் சம்பந் தப்பட்டவர்களின் பெயர்களும் கரும் புலிகள் என்ற பட்டியலில் வெளியிடப்பட்டுவிட்டன.

ஆக, புலிகளின் தலைவர் மறை முகமாக உரிமை கோரியதின் மூலம் இதுவரை இருந்த ஒரு சில சந்தேகங் களும் தீர்ந்துவிட்டன என்று இலங்கையின் உளவுப் பிரிவின் மூத்த அதிகாரி ஒருவர் தினமுரசுவுக்கு தெரிவித்தார்.

## ஆடி அமாவாசை
## அங்கிங்கெனாதபடி எங்கும் உற்சவம்

ஒவ்வொரு வருடமும் ஆடி மாத அமாவாசைத்தினத்தன்று பல சைவ ஆ[illegible]ங்களில் தீர்த்தோற்சவங்கள் நடைபெறும். யாழ்ப்பாணம், மாவிட்டபுரம் கந்[illegible]மி கோவிலில் பல சிறப்புத் திருவிழாக்களை அடுத்து அமாவாசை தினத்தன்று கீரிமலையில் தீர்த்தோற்சவம் நடைபெறும். அதேபோல் மட்டக்களப்பு அமர்தகழி மாமாங்சோப்வரர் ஆலயத்திலும் அதே தினத்தன்று ஆலயத்தின் வலது புறம் அமைந்த அமிர்தநதி எனும் குளத்தில் தீர்த்தம் நடைபெறும். இதே போன்று மட்டக்களப்புக்குத் தெற்கேயுள்ள திருக்கோவில் எனும் முருகன் திருப்பதியிலும் சமுத்திர தீர்த்தம் நடைபெறும். நேர்த்தி வைத்து, நோன்பிருந்து பல்லாயிரக்கணக்கானோர் அன்றைய தினம் தீர்த்தமாடுவார்கள்.

தந்தையை இழந்தவர்கள் அன்னாரை நினைவு கூர்ந்து பிராமணர்களுக்கு தானம் வழங்கி ஏழை எழியவர்களுக்கு இன்னமுதளித்து பயபக்தியோடு ஆலய வழிபாடு செய்வர்.

## வெளிநாட்டவர் விரும்புகிறார்கள் மல்வானை ரம்புட்டானை

(கம்பஹா நிருபர் எம்.எச்.எம்.ஹாரித்)

கம்பஹா மாவட்டத்திலுள்ள "பியகம" தொகுதியில் அமைந்துள்ள "மல்வானை [illegible] கிராமம் தித்திப்பான ரம்புட்டானுக்குப் பெயர் பெற்ற இடமாகும். இங்கு விளையும் ரம்புட்டான் பழங்கள் இன்சுவை யிலும்-தரத்திலும் உலகப் புகழ் பெற்றவை.

தற்போது உலகின் பல்வேறு நாடுகள் இந்த ரம்புட்டான் பழங்களைப் பெருமளவில் கொள்வனவு செய்ய விருப்பம் தெரிவித்துள்ளதைத் தொடர்ந்து "மல்வான ரம்புட்டான்" உற்பத்தியை மேலும் அதிகரிக்க அரசு ஏற்பாடு செய்து வருகிறது. ஏற்கெனவே "பியகம" தொகுதியில் 290 ஏக்கர் நிலத்தில் "ரம்புட்டான்" விளைகிறது. மேலும் 120 ஏக்கர் நிலத்தில் மொத்தம் (6000) ஆறாயிரம் ரம்புட்டான் கன்றுகளை நாட்டுவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

"மல்வானை ரம்புட்டான் பழம் ஒன்று ஸ்பெயின் நாட்டில் 30 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுவது குறிப்பிடத்தக்கது.

## நகரசுத்தி தொழிலாளர்களும் மனிதர்தான்!

(திரு மலை நிருபர்)

திருகோணமலை 'அண்ணாநகர்' குடியிருப்பில் நகர சுத்தி தொழிலாளர்கள் வெளியேற்றப்பட்டனர். வைத்தியசாலை விஸ்தரிப்புக்கு காணி வேண்டும் எனக் கூறிய நகரசபை நிர்வாகம் அவர்களை வெளியேற்றியது.

மலைக்காட்டுக் காணிகளில் போய் குடியேறுமாறு நகரசபை கூற தொழிலாளர்கள் முடியாது என்று மறுத்துவிட்டனர்.

முன்னர் பாவனைக்கு உதவாத குளமாக இருந்து இப்போது குப்பைபோட்டு நிரப்பப்பட்டுள்ள 'மனையாவழிக் காணியை' தங்களுக்குப் பிரித்து தரும்படியும், பலகாலமாக நிரந்தரமின்றி வேலைசெய்யும் 58 ஊழியர்களில் ஆகக்குறைந்தது 20 பேரையாவது நிரந்தரமாக்கும் படியும் தொழிலாளர்கள் கோரிக்கை விடுத்தனர்.

[illegible]ரிக்கை மறுக்கப்பட்டால் தொழிலாளர்கள் வேலைநிறுத்தம் செய்ய முடிவு செய்துள்ளனர்.

## கதிர்காமக் கந்தன் உற்சவம் திரண்டுவரும் பக்தர்களுக்கு நிறைவான ஏற்பாடுகள்!

(மா[illegible]றை நிருபர்)

கதிர்க[illegible]ற்சவம் இம்மாதம் 19ந் திகதி ஆரம்பமாகி ஆகஸ்ட் மாதம் 3ந் திகதி முடிவடையும்.

19ந் திகதி இரவு முதலாவது பெரஹறா ஊர்வலம் வீதி வலம் வரும். இரண்டாவது பெரஹறா ஊர்வலம் ஜுலை 31ம் திகதி வீதி வலம் வரும். ரந்தோலி பெரஹறா ஊர்வலம் ஆகஸ்ட் 2ந் திகதி இரு தடவைகள் வலம்வரும்.

ஆகஸ்ட் 3ந் திகதி அதிகாலை யில் மாணிக்க கங்கையில் நடைபெறும் தீர்த்தோற்சவத்துடன் உற்சவம் முடிவடையும்.

கதிர்காம உற்சவத்திற்கு இம்முறை பெருந்தொகையான பக்தர்கள் வருவார்களென்று எதிர் பார்க்கப்படுவதால், பாதுகாப்பு, சுகாதார நடவடிக்கைகளை கிரமமாக மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளன.

இந்த வருடம் ஆயிரம் பொலிசார் கடமையிலீடுபடுத்தப் படவிருக்கிறார்கள். கதிர்காம யாத்திரையை மேற்கொண்டு கொழும்பிலிருந்து புகையிரத மார்க்கமாக மாத்தறைக்கு வரும் பிரயாணிகளின் நன்மை கருதி மாத்தறை-கதிர்காமம் விஷேட பஸ் சேவைகள் மாத்தறை புகையிரத நிலையத்திலிருந்து மேற் கொள்ளப்படும்.

வழமையைப் போலவே சுகாதார வசதிகளும் மேற் கொள்ளப்பட்டுள்ளதாக கதிர் காமம் பஸ்நாயக்க திரு. எச். எம். குணபால ஹேரத் அறிவித் துள்ளார்.

## வெற்றிடங்களை நிரப்ப விரைவான நடவடிக்கை

மாத்தறை மாவட்டத்திலுள்ள தமிழ் முஸ்லிம் பாடசாலைகளில் இருந்து வரும் அதிபர் வெற்றி டங்களை நிரப்புவதற்கு மாத்தறை மாவட்ட கல்வித் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

ஹுனந்தாவ தமிழ் வித்தியாலயம், பெவர்லி தமிழ் வித்தியாலயம், ஹண்ட்பேர்ட் தமிழ் வித்தியாலயம், அல்மினா மகா வித்தியாலயம், கப்புவத்தை அந்நூர் மகளிர் மகா வித்தியாலயம், வெலிபிட்டிய ஸாஹிரா மகா வித்தியாலயம், கந்தறை முஸ்லிம் வித்தியாலயம், மின்ஹாத் கனிஷ்ட வித்தியாலயம், மின்ஹாத் மகா வித்தியாலயம் ஆகிய வித்தியாலயங்களில் தற்போது உள்ள அதிபர் வெற்றிடங்களே நிரப்பப்படவிருக்கின்றன.

இந்த வித்தியாலயங்களில் தற்போது தற்காலிக அதிபர்களாக கடமைபுரிபவர்களின் சேவை விபரங்களை கல்வித் திணைக்களம் திரட்டியுள்ளதுடன், இவர்களின் கல்வித் தரத்தை கவனித்து பாடசாலைகளின் நிலைக்கேற்ப அதிபர் பதவிகள் வழங்கப்பட விருப்பதாக கல்வி அதிகாரி யொருவர் முரசுவுக்கு தெரிவித்தார்.

## தபாலகத்தின் பரிதாபகரம்!

(நிந்தவூர் நிருபர்)



நிந்தவூர் பிரதம தபாலகம் இயங்கும் கட்டடம்

படத்தைப் பார்த்ததும் புராதன காலத்துக் கட்டடம் ஒன்று இது என முடிவு செய்து விடாதீர்கள்! கிழக்கிலங்கையைச் சேர்ந்த நிந்தவூர் பிரதம தபாலகம் பல்லாண்டு காலமாக இயங்கிவரும் கட்டிடம் தான் இது! ஓட்டை, உடைசல்களுடன் என்று இடிந்து விழுமோ என்ற நிலையிலிருக்கிறது. தனியார் ஒருவருக்குச் சொந்தமான இக்கட்டிடம் முதலாம் வகுப்புத் தரத்தில் அமைந்த மேற்படி தபாலகத்திற்கென, நிந்தவூர் ஜும்ஆ பள்ளிவாசலுக்குச் சொந்தமான நிலத்தில் நிரந்தரக் கட்டிடம் ஒன்றை 20 இலட்சம் ரூபா செலவில் அமைத்துத் தருவதற்கு வர்த்தக வாணிபத்துறை அமைச்சர் ஜனாப் ஏ.ஆர்.எம். மன்சூர் முன்வந்துள்ளார். ஆனால் தபாலகக் கட்டிடம் அமைப்பதற்கு பள்ளிவாசல் காணி பயன்படுத்தப்படக்கூடாது என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் அல்ஹாஜ் எம்.எச்.எம்.அஷ்ரஃப் (எம்.பி.) ஆட்சேபம் தெரிவித்துள்ளார்.

இந்த இழுபறி நிலைக்கு மத்தியில் "தபாலகத்திற்கென நிரந்தர கட்டடம் ஒன்று மிக,மிக அவசியம்" என்ற கருத்தையே முதன்மைப் படுத்தி நிற்கிறார்கள் பெரும்பாலான நிந்தவூர் மக்கள்.

## கோடையால் விளையும் கேடு

(எமது புத்தளம் நிருபர்)

தற்போது நிலவும் கோடை காரணமாக புத்தளம் பகுதியிலுள்ள கிணறுகள், குளங்கள் என்பன வற்ற ஆரம்பித்துள்ளன.

புத்தளம் நகரிலுள்ள பிரதான குளங்களில் ஒன்றான நெடுங்குளம் முற்றாக வற்றிவிடும் கட்டத்தை அடைந்துள்ளது.

இப்பகுதியிலுள்ள ஏராளமான மக்கள் இக்குளத்திலேயே நீராடி வருவது வழக்கம். குறிப்பாக பெண்கள் நீராடுவதற்கு இக்குளத்தையே நம்பியிருந்தனர்.

குளம் வற்றிவிட்டதால் பக்கத்திலுள்ள அதாவது நான்கு அல்லது ஐந்து மைல்களுக்கு அப்பாலுள்ள ஆற்றுக்கு செல்ல வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது.

இந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி இக்குளத்தை ஆழமாக தோண்டினால் எதிர்வரும் காலங்களில் ஏராளமான நீர் சேகரிக்கப்பட்டு அதிக காலத்திற்கு பொதுமக்களுக்கு பயன்படும்.

எனவே அக்கறையுள்ள இளைஞர் கழகங்கள், முற்போக்கு சங்கங்கள், அபிமானிகள் கூடிய முயற்சி மேற்கொண்டு இக்குளத்தைத் தோண்ட அரசை வற்புறுத்த வேண்டுமென ஏராளமான பொதுமக்கள் "தினமுரசு" மூலமாக கோரிக்கை விடுத்துள்ளார்கள்.

விளம்பரப் பகுதி

## ரைஸ் மில், கிரைண்டிங் மில்

உரிமையாளர்களுக்கு ஒரு மகிழ்ச்சியான செய்தி.

உங்களுக்குத் தேவையான தரமான நெல், மிளகாய், அரிசி தானியங்கள் சம்பந்தப்பட்ட சகலவிதமான—

இயந்திரங்களுக்கும்,


தரமான அசல் உதிரிப் பாகங்களுக்கும்.

இந்தியா, சைனாவில் இருந்து தருவிக்கப்பட்ட டீசல் இஞ்சின்கள், மோட்டார்கள், நீர்ப்பாசன, இயந்திரங்கள், பைப்புகள், *TOOLS, BEARINGS* மற்றும் எந்தவிதமான தொழிற்சாலை உபகரணங்களுக்கும். இன்றே—

தொடர்பு கொள்ளுங்கள்

INTERNATIONAL MARKETING CENTRE
312, SRI SANGARAJA MAWATHA,
COLOMBO-12. T.P: 432956 - 432007 - 432028


## உதவும் கரங்களே!



அளவெட்டி வடக்கைச் சேர்ந்த கா. மனோகரன் (சுட்டி) 35 வயது. 2 சிறுநீரகங்களும் பாதிப்பு அடைந்துள்ளதால் வைத்தியர் அவரை இந்தியா சென்று சிறுநீரக மாற்று சிகிச்சை செய்ய பணிக்கின்றார். அதன் செலவு 6 இலட்சம் சத்திர சிகிச்சையின் பின் 3 வருடத்திற்கு மாதமொன்றிற்கு 10,000/- மருந்து செலவு அதன்பின் ஆயுட்காலம் வரை 1,000/- மருந்து செலவு.

தயவு செய்து இவருக்கு நிதி உதவுபவர்கள் இவரின் தாயாரான திருமதி ச. காத்திகேசுவின் சேமிப்பு வங்கி இலக்கம் 100370181335ற்கு பம்பலப்பிட்டிக்கு அனுப்பவும்.

ச.கார்த்திகேசு
28, ஜானகி லேன்
பம்பலப்பிட்டிய.


## ஆயுர் வேத மனோதத்துவ மருத்துவம்

செய்ய முடியாததை செய்து காட்ட, நினைத்ததை அடையும் ரகசியத்தை தெரிந்திட, விலை மதிக்க முடியாத உங்கள் தனிப்பட்ட தன்மைகளை அறிந்திட, துன்பம் உங்களை அழித்திடமுன் துன்பங்களை நீங்கள் அழித்திட, பணம் உங்களைத் தேடிவர, உலகளாவிய தமிழ் பேசும் மக்களது நம்பிக்கையைப் பெற்ற மனோதத்துவ சித்தாயுர் வேத டாக்டர் வி.ரி.ஜே. நாதனைச் சந்தித்து சிந்தனைத் தெளிவு பெறுக.

Dr. V.T.J. Nathan
Peoples Park inn
163/1, 5th Cross Street,
Colombo-11
**Phone: 421090**

உள்நாட்டு வெளிநாட்டுத் தொலைத் தொடர்புகள், FAX வெளிநாட்டு தந்திகள், ஆங்கில டைப்பிங் ஆகியவற்றிற்கு பொலன்னறுவையில் ஒரே இடம்.

**Quick Communications**
Kaduruwela,
Polannaruwa.
T.P. 027/2063,
FAX: 0094-27-2063
உங்கள் அபிமான 'தினமுரசு வாரமலர்' எம்மிடம் கிடைக்கும்.

மலையகப் பகுதியிலிருந்து முன்னனுபவமுள்ள நிருபர்கள் தேவை.

முற்பணம் செலுத்தக் கூடிய முகவர்கள் தொடர்பு கொள்ளவும்.
போன்: 820265

உங்கள் இல்லங்களில் சமையலுக்கு உகந்த பலசரக்கு பொருட்களை பெற்றுக் கொள்ளவும் மற்றும் போத்தல், பக்கெட்டுக்களில் அடைக்கப்பட்ட பால், பால்மாவு பிரியாணி சம்பந்தமான சாமான் வகைகளுக்கும் எங்களிடம் தொடர்பு கொள்ளுங்கள்.

**A TO.Z. GROCERIES**
**MILK BAR**
**A.G.3, SAMAGIPURA FLATS,**
**GRANDPASS.**


## குறுக்கெழுத்துப் போட்டி இல—07

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 | | | | ■ | 2 | |
| | 3 | 4 | ■ | | | 5 |
| 6 | | | | ■ | | |
| | | | ■ | 7 | ■ | 8 |
| | ■ | | 9 | | | ■ |
| | | ■ | | | | 10 |
| ■ | 11 | | | | ■ | 12 |

### இடமிருந்து வலம்

1. இடியோடு கூட வருவது துண்டு.
2. குரல் வளத்தைப் பெருக்குமென்று சிலர் சொல்லுவார்கள்.
5. தும்பு இதற்கு மூலப் பொருள் (வலமிருந்து இடமாக உள்ளது)
6. குருவுக்குக் கொடுப்பது.
9. படையையும் நடுங்க வைக்கும்.
10. முயற்சியுண்டானால் காரியத்தில் வெற்றியடைவது இப்படியாகத்தான் இருக்கும். (வலமிருந்து இடமாக இருக்கிறது)
11. வீடு கட்டுவதற்குப் பயனுள்ளது.

### மேலிருந்து கீழ்

1. இசையோடு சம்பந்தப் பட்டது.
2. ஆங்கிலேயர் கொண்டு வந்து இலங்கைக்குத் தந்தவர்கள்.
3. பொருட்களைப் போட்டு வைப்பதற்கு ஏற்றது.
4. வேதனையின் வெளிப் பாடாக வருவது.
7. இது முன்றேற்றத்தின் எதிரி.
8. முன்னாள் மாமன்னவன் (கீழிலிருந்து மேல் நோக்கி உள்ளது)
11. நீர் ஊற்ற வளரும். (தலைகீழாக இருக்கிறது)
12. மனித உருவாக்கத்தின் ஆரம்பப்படி நிலைகளில் ஒன்று (கீழிலிருந்து மேல் நோக்கி உள்ளது)

**இதற்கான சரியான விடையைக் கூப்பனில் நிரப்பி அஞ்சலட்டை ஒன்றில் வெட்டி ஒட்டி 24.07.93 ற்கு முன்னர் எமக்குக் கிடைக்கும்படி அனுப்பிவையுங்கள். அனுப்ப வேண்டிய முகவரி:**

**குறுக்கெழுத்துப் போட்டி இல-07**
**தினமுரசு வாரமலர்**
**88/14, சோமாதேவி பிளேஸ்,**
**கிருலப்பனை**
**கொழும்பு-05.**

**சரியான விடையை எழுதி அனுப்பும் பத்து அதிஷ்டசாலிகளுக்கு பரிசுப்பணம் ரூபா 500/- பகிர்ந்தளிக்கப்படும்.**

## குறுக்கெழுத்துப் போட்டி இல-05 இற்கான சரியான விடைகள்

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 ம | னோ | 2 க | ரா | ■ | 3 வி | ல் |
| ந் | 4 சி | வ | 5 கா | சி | ■ | யி |
| தி | 6 வ | ரி | வி | ல | க் | 7 கு |
| ரி | ப் | மா | ■ | 8 தி | ■ | ■ |
| ■ | 9 பு | ன் | ன | கை | ■ | 10 மு |
| டு | ■ | ■ | 11 பை | ப் | ல | க |
| ம 12 | ன் | னி | ப் | பு | ■ | ம் |

**குறுக்கெழுத்துப் போட்டி 05 வெற்றி பெற்ற அதிஷ்டசாலிகள்**

1. திருமதி. சாந்தி ராதாகிருஷ்ணன் கம்பளை.
2. திருமதி. ஜெஸீமா இஸ்மாயில் கட்டுகஸ்தோட்டை.
3. வை. ரகுநாதன் கொழும்பு-11.
4. பி.கணேசன் ஹட்டன்.
5. எம்.பி.எம்.நிஸாம் களனிய.
6. எஸ். சர்வலோகநாதன் திருமலை.
7. செல்வி ஷைலஜா பார்த்திபன் பரகடுவ
8. எம்.எம். சம்சுன் நாபியா புத்தளம்.
9. எம்.எஸ்.மோகன் அவிசாவளை
10. ஜி.கே. விஸ்வநாதர் கொழும்பு-8

இந்த அதிஷ்டசாலிகளுக்கு பரிசுப்பணம் ரூபா 500/- பகிர்ந்தளிக்கப்படும்.

## புகார் பெட்டி

புகார் பெட்டி புகார் பெட்டி

### தமிழில் அழகாக எழுதலாமே!

1987ம் ஆண்டு செய்து கொண்ட உடன்படிக்கையின் படி தமிழ் மொழி அரசகரும மொழியாக்கப்பட்டுள்ளது நாம் அனைவரும் அறிவோம். அப்படி அங்கீகரிக்கப்பட்டும் இன்னும் அது சரியாகப் பயன்படுத்தப்படாமை வேதனைக் குரிய ஒன்றாகும். இந்த வரிசையில் அரச போக்குவரத்துச் சேவை பஸ்களில் மக்கள் மயப்படுத்தப்பட்டதும் இரு மொழிகளிலும் எழுதப்படுகின்றது. வடகிழக்கு பகுதி பஸ்களில் இரு மொழிகளிலும் அழகாக எழுதப்படுகின்றது. நாட்டின் ஏனைய பகுதிகளில் சிங்களத்திலே எழுதப்படுகின்றது.

மலையகப்பகுதி பஸ்வண்டிகளில் சிங்கள வாசகத்தையே தமிழில் எழுதப்பட்டிருக்கின்றது. சீ/ச ஜனதா பிரமாஹன சேவய ஏன் இந்த அநியாயம் மட்/மக்கள் மயப்படுத்தப்பட்ட போக்குவரத்துச் சேவை என அழகாக எழுதப்படாமை வருத்தத்திற்குரிய ஒன்றாகும். தமிழ் மொழிக்கு கிடைத்துள்ள அந்தஸ்த்து இது தானா? என்ற கேள்வி எழும்புகின்றது.

வாசகன்.

### பரிதாபத்துக்குரிய பாடசாலை

அனுராதபுர மாவட்டத்தில் கம்பிரிகெஸ்வெவ எனும் முஸ்லிம் கிராமத்தில் அமைந்துள்ள அ/மனாருள் உலூம் மா.வி. என்ற பாடசாலை இப்போது அரசினாற் கைவிட்டாற் போன்று கட்டிட, தளபாட, ஆசிரிய வசதிகள் இன்றி மகாவித்தியாலயம் சாதாரண வித்தியால யத்தை விட தரம் குன்றி பாடசாலை நிர்வாகமும் சீர் கேடாசி தோற்றமளிக்கின்றது.

சம்மந்தப்பட்ட அமைச்சு இதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு பெற்றோர்கள் கேட்டுக்கொள்கின்றார்கள்.

எ.எம்.மிஸ்ருள்லாபி
கம்பிரிகெஸ்வெவ.

### மட்டுநகரில் இசைத்துறையில் கண்டும் காணாதவை

மீன்பாடும் தேன்நாடாம் மட்டுநகரில் இசையை வளர்ப்பதில் பெரும் பாடுபட்டு உழைத்து வருவது விபுலானந்த இசை நடனக் கல்லூரியே.

ஆனால் இங்கு 4 வருட கற்கை நெறியை முடித்து பட்டம் பெற்ற மாணவர்கள் தொடர்ந்தும் தம் வாழ்வை வீணாக்க வேண்டிய நிலையிலேயே உள்ளனர்.

ஏனெனில் இங்கு பட்டம் பெற்று வெளியேறும் மாணவர்கட்கு வேலை வாய்ப்பு வழங்கப்படுவதில்லை. இந்து கலாச்சார அமைச்சினால் பல வாக்குறுதிகளை அழிக்கப்பட்ட போதிலும், இது வரை 90ஆம் ஆண்டு தொடக்கம் வெளியேறிய மாணவர்கள் தொடர்ந்தும் தம் வாழ்வை வீணாக்க வேண்டியே உள்ளது. இங்கு கற்கை நெறியை பூர்த்தி செய்ய நான்கு வருடம் செலவிடும் மாணவர்கள் வேலை வாய்ப்பு இன்றி மூன்று நான்கு வருடம் எல்லாமாக எட்டுவருடங்கள் வரை வீணாக்க வேண்டி உள்ளது. ஓர் சமுதாயத்தை கட்டி எழுப்புவதற்காக தமக்கான எல்லா அமையச் செலவுகளையும் செய்து படிக்கும் மாணவர்களும், படித்து வெளியேறிய மாணவர்கட்கும் படிக்க உத்தேசித்து இருக்கும் மாணவர்கட்கும் சலிப்பை ஏற்படுத்தி இருக்கும் என்பதில் வியப்பில்லை.

இன்றைய அரசாங்க எல்லா வசதிகளும் செய்யும் இவ்வேளையில் அவர்களுடன் பேசி இது உரை வெளியேறிய மாணவர்கட்கான வேலை வாய்ப்பினையும் இனிமேல் அவ்அவ் ஆண்டுகளில் வெளியேறும் மாணவர்கட்கு அவ் ஆண்டு களிலேயே நியமனம் வழங்கப்படுவது அவசியமாகும்.

எமது மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் உட்பட இசைத் துறையில் ஆர்வம் கொண்ட அனைவரும் இதற்காக தங்களது பங்களிப்பை அளித்து இசைத்துறை மட்டு நகரில் வளர்ந்து சிறக்க ஆவணை செய்யுமாறு பணிவுடன் கேட்கிறேன்.

பி.பி. இசையழகன்
மட்டக்களப்பு.

### அதிகாரிகள் செவிசாய்க்க விவசாயிகளின் கோரிக்கை!

புத்தள மாவட்டத்தில் சின்ன வெங்காயம் உற்பத்தியில் கல்பிட்டி உதவி அரசாங்கப்பிரிவின் ஏத்தாலைப் பகுதியில் சுமார் 3000 ஏக்கர் பகுதியில் சின்ன வெங்காயச் செய்கை பெருமளவில் உற்பத்தியாக்கப்படுகின்றது. சின்ன வெங்காயம் விதைத்து சுமார், நான்கு வாரம் அல்லது ஐந்தாம் வார அளவில் ஒரு விதமான பூஞ்சன நோய் (அழுகல் நோய்) ஏற்பட்டு இச்செய்கையை பாதிப்புக்குள்ளாகின்றது. இது சம்மந்தமாக விவசாய உயர் அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டோம். ஆனால் இதுவரையில் எந்த விதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. ஆகவே இவ்விடயம் சம்மந்தமாக கமநல சேவைப்பிரிவின் உயர் அதிகாரிகளின் ஆலோசனையை எதிர்பார்க்கின்றோம்.

ஏ.சீ.எம்.அன்வர் பளீல்
திகழி-ஏத்தாலை.

### தொலைபேசி வசதி இன்றி மக்கள் கஷ்டம்

நுவரெலியா மாவட்டத்திலுள்ள டயகம பகுதிக்கு கடந்த 10 வருடங்களுக்கு மேலாக தொலைபேசி வசதி இல்லை. இதனால் தோட்டப்புர மக்கள் பெரும் கஷ்டங்களுக்கு ஆளாகின்றனர். ஆகையினால் இம்முறை மாகாண சபையில் வெற்றி அடைந்த உறுப்பினர்கள் இதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இவ்விடயத்தில் தலையிட்டு மக்களின் குறைகளைத் தீர்க்க வேண்டும்.

ஆர். நவநீதராஜா, யரவல்.
டயகம.

### பாதையின் சிரமம்

பேருவலை நகர சபைக்குட்பட்ட பிரதேசங்களான மகொட, மரதான , மகொட ஸாவியாவீதி, ,இது போன்ற இன்னும் சில இடங்களில் மழை பொழிந்தால் சுமார் 1 1/2 அடிக்கு மேல் நீரும் சேறுமாய் இருக்கின்றது. சம்பந்தப் பட்ட அதிகாரிகள் இக்குறையை போக்க வேண்டும்.

ஹறிஸ் மொகமட்
பேருவளை.

### நுளம்புத் தொல்லை

நீர்கொழும்பு கம்மல்துறைப் பகுதியில், நுளம்புத் தொல்லை ஒரு முக்கிய பிரச்சனையாக உருவெடுத்துள்ளது. நாளுக்கு நாள் அதிகரித்து வரும் இந்நுளம்புகளினால் பலவித நோய்கள் பரவி வருகின்றன. இதனால் இப்பகுதி மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். சுமார் இரண்டு மாதகாலமாக இருந்து வரும் இப்பிரச்சனையைத் தீர்க்க சுகாதார திணைக்கள அதிகாரிகள் ஆவன செய்ய வேண்டும்.

எம்.டி.எம்.சைலாஸ்.

### பாதை, தபால் சரிவருமா?

பாணந்துறை பிரதேசத்தில் இருந்த சரிக்கமுல்ல வழியினூடாக வரும் இச்சிறிய கிராமம் ஆர்டன் பொரஸ்ட் மழைக் காலத்தில் பாதையில் நடக்க முடியாத அளவு நீர் தேங்கி நிற்கின்றமையால் பாடசாலை செல்லும் மாணவர்களும் மக்களும் பெரும் கஷ்டத்துக்கு உள்ளாகிறார்கள். பாதணிகளை கையில் எடுக்க வேண்டிய நிலை. இக் காலத்தில் தபால் சேவை வருவதில்லை. தபாற் கந்தோருக்கு சென்று கடிதங்களை பெற வேண்டியுள்ளது. இந்த நிலைமை நீங்குவதற்கு யாரும் முன்வர மாட்டார்களோ?

ரிஸ்னா ஜெயனுதீன்
ஹேனமுல்லை
பாணந்துறை.

# கனேடிய மண்ணில் தமிழர்கள் மீதான தாக்குதல்!
# நம்மவர் தரப்பிலும் தொடரும் தவறுகள்

## எக்ஸ்ரே

## ரிப்போர்ட்

## அல்லல்படும் அகதிகளுக்கு விடிவு எப்போது?



கனடாவில் இனவெறித் தாக்குதலுக்கு இலக்கான கணேசமூர்த்தி விக்கினேஸ்வரமூர்த்தி

இனப்பிரச்சனை உள்ளவரை அகதிகள் பிரச்சனையும் இருந்து கொண்டுதான் இருக்கும்.

உள்நாட்டிலும் - உலகிலும் இலங்கை அகதிகள் இல்லாத இடம் ஏது? நாடேது?

இனவாதமும் -அதை தொடர்ந்த யுத்தமும் இலங்கைத் தமிழர்களை அகிலமெங்கும் அகதிகளாக விதைத் திருக்கிறது.

முன்னர் அகதிகளுக்காக கதவு களைத் திறந்துவைத்திருந்த நாடுகளில் இப்போது அகதிகள் பிரச்சனை ஒரு சுமையாக மாறியிருக்கிறது.

இலங்கை அகதிகள் மீது மட்டு மல்லாமல் பொதுவாகவே வெளிநாட்டு அகதிகள் மீது வெறுப்பான கண்ணோட்டம் வெளியுலகில் ஏற்பட்டு வருகிறது.

மண்ணின் மைந்தர்களாகத் தாம் இருக்க அந்நியர் வந்து தமக்கு சேரவேண்டியதை அனுபவிப்பதோ என்று ஜெர்மனியில் உள்ள மொட்டைத் தலையர்கள் போர்க்கொடி உயர்த்தியிருக்கிறார்கள்.

கொடி உயர்ந்ததோடு மட்டும் நின்று விடாமல் கொடிய காரியங்க ளிலும் ஈடுபட்டிருக்கிறார்கள்.

இரவில் வீதியில் இறங்கவே அச்சமாக இருக்கிறது என்று ஜெர்மனியில் உள்ள நம்நாட்டவர்கள் சொல்கிறார்கள்.

இலங்கையின் உள்நாட்டுப் பிரச்சனையால் வெளிநாடுகளுக்கு சென்று அங்கொரு உள்நாட்டுப் பிரச்சனையை உருவாக்குமளவுக்கு இலங்கைத் தமிழ் அகதிகள் விவகாரமும் விசுவரூப மெடுத்துக் கொண்டிருக்கிறது.

எப்போது திருப்பி அனுப்பப் படுவோமோ என்ற அங்கலாய்ப்பு அகதிகள் மத்தியில் பரவலாகி யிருக்கிறது.

எதிர்வரும் செப்டெம்பர் மாதத்தில் சுவிஸ் ஒரு பகுதி அகதிகளை விமானத்திலேற்றி அனுப்பப்போகிறது.

அதன்பின்னர் வேறுசில நாடுகளும் சுவிஸ் முன்னுதாரணத்தை பின்பற்றக் கூடும்.

தமது கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளுக்கு அவர்களை அனுப்புமாறு புலிகளும், இலங்கையில் அமைதி நிலவுவதாக அரசும் சொல்லிவிட்டன. இருதரப்புமே தமது கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் அமைதியும்-சகஜ நிலையும் பூத்துக் குலுங்குவதாக சொல்வதால் அகதிகளை திருப்பி அனுப்ப வேண்டுமென்று சொல்ல முடியாது.

புலிகளுக்கு இதில் சாதகமும் உண்டு. பாதகமும் உண்டு.

அகதிகள் திரும்பிவரத் தொடங்கினால் இலங்கையில் அமைதியான நிலை ஏற்பட்டுவிட்டதாக அர்த்தப்படும். பிறகேன் யுத்தம் என்ற கேள்வி வரும். இலங்கை அரசுக்கு மேலும் கடனுதவி வரும்.

அதே சமயத்தில் வடக்கு-கிழக்கில் இருந்து பெருந்தொகையானோர் வெளியேறுவதும், வெளிநாடுகளில் இங்கிருப்போரைவிட உத்தரவாதமான சூழலில் வாழ்வதும் மேலும் வெளியேற்றத்தை துரிதப்படுத்தும்.

புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் இருந்து வெளியேறுவோர் இராணுவக் கெடுபிடிகளால் தாம் வெளியேறியதாக கூறமுடியாது. வேண்டுமானால் விமானக் குண்டுவீச்சைச் சொல்லலாம். ஷெல் அடிபற்றிச் சொல்லலாம். ஆனால் பெரும்பாலானோர் புலிகளாலும் தாம் பாதிக்கப்பட்டதாகவே அடைக்கலம் தேடும் நாடுகளில் புகார்கள் கூறியுள்ளனர்.

கனடாவில் இருந்து பிரசுரமாகும் புலிகளின் 'உலகத் தமிழர்' பத்திரிகை அவ்வாறு புகார்கள் கூறக்கூடாது என்று மறைமுகமாக எச்சரித்து ஆசிரியர் தலையங்கமும் தீட்டியிருந்தது.

எனவே புகார்கள் கூறப்படுவதும், தமது கட்டுப்பாட்டில் உள்ள சனத்தொகை குறைவதும் புலிகளுக்கு பாதகமான விசயம்தான்.

அதனால் தான் அகதிகளை அனுப்புவதனால் தம்மிடம் அவர்களை ஒப்படைக்க வேண்டும் என்று புலிகள் கூறியுள்ளனர்.

அதன்மூலம் தமது கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் பாதுகாப்பு உண்டு. பிரச்சனை இல்லை என்று கூறுவதற்கான சாதகம் உண்டு.

ஆனால் திரும்பிவரும் அகதிகள் கொழும்பில் இருக்கவே விரும்புவர். அதிலும் பலர் கொழும்புக்கு வருவதாக புலிகளிடம் பாஸ் வாங்கி வந்து வெளிநாடு சென்றவர்கள். இப்போது புலிகளிடம் சென்றால் மரியாதை எவ்வாறனதாக இருக்கும் என்பது அவர்களுக்குத் தெரியும்.

அரசும்-புலிகளும் தமது தரப்புக்களை நியாயப்படுத்தவும் தமது கரங்களைப் பலப்படுத்தவும் ஏற்ற அணுகுமுறைகளை வகுத்துக் கொள்வதில் குறியாக இருக்கின்றன.

ஆனால் அகதிகளோ தமது தலைவிதியை நொந்து கொண்டிருக்கிறார்கள்.

இன்றைய தேதியில் வெளிநாடு செல்வதென்பது சுலபமான காரியமல்ல. காணியை வித்து பூமியை வித்து, கடனை வாங்கி வட்டிச் சுமையைத் தாங்கி வெளிநாடு சென்றவர்கள் திருப்பி அனுப்பப்பட்டால் நடுத்தெருவில் நிற்பதைத் தவிர வேறு வழியில்லை. பட்ட கடனை அடைக்க என்ன வழி?

திருப்பி அனுப்பப்படும் ஒவ்வொரு வரும் அவர்களது குடும்பத்தினரும் அதனை நினைத்துத்தான் ஏங்கிக் கொண்டிருக்கிறார்கள்.

கனடா போன்ற நாடுகளில் பிரச்சனைகள் ஏற்படாதென்று ஒரு நம்பிக்கை நம்மவர் மத்தியில் உண்டு.

குறிப்பாக கனடா ஒரு பல்லினநாடு.

கனடிய முன்னாள் பிரதமர் மல்ரோனி கூட ஒரு வெளிநாட்டவர்தான்.

என்றாலும் சமீபகாலத்தில் கனடாவிலும் தோல் தலையர்கள் என்றொரு அமைப்பு முகம் காட்டியிருக்கிறது.

நாடாவை வெட்டி திறப்புவிழா நடத்துவதற்குப் பதிலாக, சிவராஜா வினாசித் தம்பி என்னும் இலங்கைத் தமிழர் மீது போத்தலால் குத்தி கொல்ல முயன்று தனது உருவாக்கத்தை வெளிப்படுத்தியிருக்கிறது.

செய்வதையும் செய்து விட்டு "என் இனம் குறித்தும், நாடு பற்றியும் பெருமைப்படுகிறேன்" என்று வேறு திமிரான வாக்குமூலமும் கொடுத்திருக்கிறான்.

அவனவன் இனத்தின் பெருமையைக் காட்டவும், பலத்தைக் காட்டவும் தமிழன் தான் வசதியான ஆளாகத் தெரிகிறானோ என்று வருத்தமும் வருகிறது.

ஆனாலும் ஒரு விசயத்தை மறந்துவிடக் கூடாது. கனடாவில் பல்வேறு நாடுகளைச் சேர்ந்தவர்கள் இருக்க இலங்கைத் தமிழர்கள் மட்டும் தாக்கப் பட்டது ஏன்?

தவறு நம் பக்கமும் இருக்கிறது. இயக்கவாதம்-ஊர்வாதம்-சாதி-மத வாதம் அனைத்தையும் இங்கே மூட்டை கட்டிவைத்துவிட்டுப் போகாமல் மறக்காமல் அங்கும் கொண்டுபோய் இருக்கிறார்கள்.

மறக்காமல் இருப்பதில் இன்னொரு முக்கியமான விசயம் துப்பாக்கிக் கலாசாரம்.

எல்லோரும் தமிழர்கள் மீது தம் பலத்தை பரிசீலித்துக் கொண்டிருக்கிறார்கள். தமிழர்களோ தங்களுக்குள் பலப்பரீட்சை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். அபாயகரமான பலப்பரீட்சைகள் தமிழர்களின் பலத்தையே முறித்துப் போட்டிருக்கின்றன.

கனடாவில் ஏற்பட்ட கோஷ்டி மோதல்கள் அங்குள்ள பத்திரிகைகளில் பிரசுரமானபோது வெட்கம் பிடுங்கித் தின்றது.

போதாக்குறைக்கு கனடிய அரசின் காதில் பூச்சுற்றும் வேலையாக கனடிய போலிக் கடவுச் சீட்டுக்கள், விசாக்கள் தயாரிக்கும் இல்லமொன்றை கனடிய பொலிசார் கண்டுபிடித்தார்கள்.

அங்கிருந்து தப்பிஓடி பின் மாட்டிக் கொண்டவர் முன்னாள் போராளி. யாழ்மேயர் துரையப்பா கொலை வழக்கில் கைதாகி, சட்டையில் உதயசூரியன் இலட்சினையோடு நீதிமன்றத்தில் ஆஜரானவர். புலிகளுக்காகவே அவர் கனடாவில் செயல்பட்டதாகக் கூறப்படுகிறது. தவிர அந்த இல்லத்தில் கனடிய புலிகளின் கிளையான உலகத் தமிழர் இயக்க ஆவணங்களும் கண்டெடுக்கப்பட்டன.

சமீபத்தில் கனடாவில் நடந்த மோதல் ஒன்றில் இரு தமிழ் பிரிவுகள் துப்பாக்கிகளை தாரளமாக உபயோகித்ததில் இடையில் சிக்கிய வெள்ளையருக்கும் படுகாயம்.

மறுபுறம் இயக்க சண்டித்தனங்கள். தமக்கெதிராக செய்தி வெளியிடும் கனடாவின் 'தாயகம்' என்ற பத்திரிகை ஒன்றின்மீது புலிகளின் தொடர் மிரட்டல்கள்.

தாயகம் விற்பனை செய்தால் பிரச்சனை வரும் என்ற அச்சுறுத்தல்கள்.

இதற்கிடையே கனடாவின் மற்றுமொரு தமிழ் பத்திரிகையான 'செந்தாமரை' பத்திரிகை ஆசிரியரும் தாக்கப்பட்டார்.

யாவற்றுக்கும் முன்னர் இலங்கையைச் சேர்ந்த அறிவிப்பாளர் சிவசோதியின் வீட்டின்மீது புலிகள் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். இவ்வாறு பல்வேறு வழிகளாலும் இலங்கைத் தமிழர்களின் பெயர் கெட்டுக் கொண்டிருக்கும் போது கனடிய இனவாதிகளின் பார்வையும் திரும்பியிருக்கிறது.

பானுப்பிரியாவையும், சுமிதா வையும் கூப்பிட்டு இடுப்பழகையும், துள்ளிக் குதிக்கும் மார்பழகையும் ரசிக்கும் 'உன்னத கலைவிழாக்களிலும்' நமது தமிழர்கள் சிலர் வீரத்தைக் காட்ட நினைப்பதுதான் இன்னும் சோகம்.

அந்தக் கலைவிழாக்களுக்கு அனுமதிச்சீட்டு விற்பதிலும் இயக்க பலமும் வழக்கமான மிரட்டல்களும் நம்மவர்களையே வெறுப்பேற்றுகின்றன.

ஆன, மொத்தத்தில் அகதிகளாய் சென்ற இடத்தில் எமது பல்லுகளை நாமே குத்திக்காட்டாமல் இருக்க வேண்டும்.

"எங்களை வெளியேற்றுங்கள்" என்று அடம்பிடிப்பது போன்ற அத்துமீறல்களால் சாதாரண மக்களே பரிதவிக்க வேண்டி இருக்கிறது.

கனடா போன்ற நாடுகளில் கூட இலங்கைத் தமிழர்கள் மீது வெறுப்பான பரவலான கண்ணோட்டங்கள் ஏற்படுமானால் ஜெர்மன், பிரான்ஸ் போன்ற நாடுகளில் நிலைமை எவ்வாறு இருக்கும் என்று சொல்ல முடியாது.

நமது கௌரவங்களை நாமும் பாதுகாக்க வேண்டும். மரியாதை கொடுத்து மரியாதை வாங்கு என்பது ஒரு பழமொழி. அது கொஞ்சம் நினைவில் இருந்தால் நல்லது.

அகதிகள் என்ற அந்தஸ்து ஒன்றும் கௌரவமான பட்டமல்ல. சொந்த மண்ணைப் பிரிந்து, உறவுகள் துறந்து அந்நியர் கட்டளைக்கு பணிந்து வாழ்வது ஒன்றும் சுகமானதல்ல.

அந்த சிறுமை போக்க சிந்திப்பதை விடுத்து, இருக்கின்ற பெருமைகளையும் தொலைப்பது என்ன நியாயம்? யோசிக்க வேண்டும்.

வரும் வாரம் இங்கே உள்நாட்டில் உள்ள தமிழ் பேசும் அகதிகள் பற்றியும் அவர்கள் அவலங்கள் பற்றியும் பார்க்க வேண்டும். கூடவே கொஞ்சம் தலைநகர நிலவரத்தையும் எட்டிப் பாக்கலாம்.

## அதிரடி அய்யாத்துரை



உயர்ந்த இடத்தில் இருப்பவர் உடைந்து போனவர்களுக்கு அழைப்பு விடுத்திருக்கிறார். மறுபக்கத்தில் இருந்தும் பாராட்டுக்கள் ஏவப்படுகிறது. பாதுகாப்பு பொறுப்பிலதான் பிரிந்த அணி கண்வைத்திருக்கிறதாய்க் கேள்வி. அதைக் குடுக்கிறதாய் இல்லையாம். இணைப்பு முயற்சிகளுக்கு பச்சை வட்டாரங்களில் வரவேற்பும் உண்டு. மறுப்பும் உண்டு. பொறுத்திருந்து பார்க்கலாம். தெரியும் இரண்டில் ஒன்று.

வடக்கு-கிழக்கு பிரிப்பா. நாங்கள் யாவரும் எதிர்ப்பு எண்டு தமிழ் கட்சியள் ஒரே குரலில் சொல்லுறது பெரும்பான்மையோர் மத்தியில வியப்பு. அடடே கண்படப்போகுதே திருஷ்டி சுத்திப்போட வேண்டாமோ என்கிற நல்ல நோக்கத்தில புதுசா ஒரு கோஷ்டி கம்மிங். என் பிரிவாம். அது என்ன பிரிவோ இழவோ தமிழ்நாட்டு பாணியில புதுக்கடை திறந்திருக்கினம். நல்ல விசயங்களை பின்பற்றுங்கோ. பின்பற்ற பிரிவு விசயமே கிடைச்சது. யாரும் அந்தக் கோஷ்டியைக் கவனிக்கப் போறதில்லை எண்டாலும் வடக்கு-கிழக்கு பிரிவுக்கு பச்சைக்கொடியை மறைமுகமாக காட்டுற விசயம் பிரிக்க வேணும் எண்டு நிற்கிற பெரும்பான்மைக் கட்சியளுக்கு அவல் கொடுக்கிற விசயம்தானே. ஒன்றுபட்ட மாகாண சபையில இருந்து அடிக்க வேண்டியதை எல்லாம் அடிச்சுப் போட்ட இரண்டுபேர்தான் இனிப் பிரிக்கலாம் எண்டு சொல்லி அங்கை இங்கை வாங்கப் பார்க்கினமாம். சோக்கான வியாபாரம்.

இரண்டெழுத்துக்காரர் அரசாங்கத்திடம் யூரியா கேட்டவையெல்லோ. கேட்ட யூரியா கப்பலில் போய் கரையில இறங்கி-பிறகு திரும்ப ஏறி வேறுகரைக்கு போனது கைக்கு எட்டினது வாய்க்கு எட்டேல்ல எண்டமாதிரிப் போச்சு. இதிலை இன்னொரு விசயம்; யூரியா கோரிக்கை விவசாயிகளுக்கு பூரிப்பை கொடுக்கேல்லையாம். வந்தாலும் தங்கள் கைக்கு வராது எண்டு அவைக்குத் தெரியுமாம். இரண்டெழுத்தார் யூரியா கேட்டது நிலத்திற்கு உரம்போட இல்லையாம். தங்கட குண்டுப்பலத்திற்கு உரம்போடவாம்.

கொழும்பில இரண்டெழுத்தாருக்கு அடைக்கலம் கொடுத்தா வீடு பறிமுதல். இரண்டெழுத்து எண்ட சந்தேகத்தில அப்பாவியளும் உள்ளே இருக்கிறது பெரிய பரிதாபம். ஆனால் அதில பாருங்கோ யாழ்ப்பாணத்தில முக்கிய அரச அதிகாரியே இரண்டெழுத்தாருக்கு பூரண சப்போட். அவற்ற மோளுன்ர கலியாணமும் இரண்டெழுத்தார் பொமிசனோட கல-கலவாய் நடந்தது. பொறுக்காம யாரோ கண்டிச்சுப் போஸ்டர் போட அதையும் இரண்டெழுத்தார் கிழிச்சுப்போட்டவை. அப்படியொரு பாச உறவு. அந்த அதிகாரி மாதம் முடிய சம்பளமும் எடுக்கிறார். கொழும்புக்கு வந்தும் போறார். அப்பாவியளை வெளியில விட்டுப்போட்டு அவரை பிடிச்சு உள்ளுக்கு போடலாம். எல்லா வழியாலையும் சனம்தான் கஷ்டப்படுங்கள். பிழைக்கத் தெரிஞ்சவை மட்டும் எல்லாப் பக்கத்திலையும் நல்ல பேர் எடுத்துக்கொண்டு திரிவினம்.

இலங்கை வானொலி தமிழ் சேவையில் பொதுவான ஒரு குறை பரவலாகப் பேசப்படுகிறது. போதிய தமிழ் பேசும் ஊழியர்கள் இல்லையாம். கூட்டுத்தாபன புதிய தலைவர் அக்கறையோட நிலைமையை புரிஞ்சுகொண்டாலும் உரிய கமிட்டி பாராமுகமாய் இருக்குதாம். தாராளமாய் இருந்தால் நல்லது.

அயல்நாட்டு விளையாட்டு அணிக்கு எக்கச்சக்கப் பாதுகாப்பு. பந்துக்கு பதிலா பாம் வருகுதெண்ட பயத்தில அவையை மட்டையைப் போட்டிட்டு ஓட வைக்காமல் இருந்தாச் சரி.

இரண்டெழுத்தார் வசமுள்ள சீருடையினர் மீண்டும் உண்ணாவிரதமாம். அதென்னவோ தெரியேல்ல, பெரும்பான்மை இனக்காரர் விசயத்தில இரண்டெழுத்தார் தாராளமான ஜனநாயகம்தான் கொடுக்கினம். எங்கட தமிழ்ப் பொலிஸ்காரர்தான் பாவங்கள்.

பிள்ளையைச் சமாளிக்கிறதே எங்கட முன்னாள் பிரதமருக்கு பெரிய பாடாய்ப் போச்சுது. ஏரிக்கரை பேப்பருகளுக்கு அந்த மனுசனும் மலர்ந்த முகத்தோட பேட்டி குடுத்து தாய் முகத்தை வாட வைக்கிது. என்னதான் சொன்னாலும் சந்திரமானவருக்குத்தானாம் உள்ளே மதிப்பு. வாக்குச்சீட்டு அறுவடைக்கு அவரால் மட்டும்தான் முடியும் எண்டதுதான் பொதுவான கொமண்ட்.

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

# உலக ரவுண்டப்

## சூடானில் தொடரும் சோகம்
## குழு மோதல்கள் ஒரு புறம் பட்டினி சாவுகள் மறுபுறம்!




ஆபிரிக்காவின் மிகப் பெரிய நாடு சூடான்.

மக்கள் தொகை 2 1/2 கோடி. அத்தனை கோடிப் பேரும் வறுமையின் எல்லைக் கோட்டில் நிற்கிறார்கள்.

1956இல் சூடான் சுதந்திரம் பெற்றது.

சுதந்திரம் பெயரளவில் தான். 1956இல் தொடங்கி 1972 வரை உள்நாட்டுப்போர் சூடானை சோகத்திற்குள் சுருட்டிப் போட்டது.

அதற்கு பின்னர் கடந்த பத்தாண்டுகளாக சூடானின் வடபுறத்திலுள்ள இஸ்லாமிய போர் வீரர்களும், தெற்கேயுள்ள கிறிஸ்தவ போராளிகளும் கடுமையாய் மோதிக் கொண்டனர். மாபெரும் இழப்பாக 6 இலட்சம்பேர் மாண்டனர். 10 இலட்சம் பேர் அகதிகளாயினர்.

சூடானில் மக்கள் விடுதலைப் படை என்று ஒரு அமைப்பு இருக்கிறது. அது இப்போது பல துண்டுகளாக உடைந்து, உடைந்த குழுக்கள் தமக்கிடையே மல்லுக்கட்டி நிற்கின்றன. விளைவு பேரழிவுகள்.

தற்போதைய புள்ளிவிபரப்படி 8 இலட்சம் மக்கள் பட்டினியால் வாடுகின்றனர்.

உலக உணவு நிறுவனம் உணவுப் பொருட்களை கொண்டு செல்லும் வீதிகளில் குழுச் சண்டைகள் தடை போடுகின்றன. ஒன்றாய் இருந்து பிரிந்தவர்கள் மோதுகிறார்கள். பாவம் சூடான் மக்கள் பட்டினியால் பரிதவிக்கிறார்கள்.

இன்னும் இரண்டொரு மாதங்களில் சூடான் மற்றொரு சோமாலியாவாகக் கூடும் என்று கூறப்படுகிறது.

## இளம் பெண்கள் கடத்தல் வெளியே செல்வதில் சங்கடம்!

கடந்த (ஜுன்) மாத ஆரம்பத்தில் இஸ்ரேலியர்களால் ஆக்கிரமிக்கப்பட்ட மேற்குக் கரைப்பிரதேசத்தில் திடீரென பத்து இளம் பெண்கள் காணாமல்போய்விட்டனர். இவர்களில் சிலரை தனிப்பட்ட வாகனங்களில் வருபவர்கள் சவாரிக்கு அழைத்துச் செல்வதாகக் கூறி வண்டியில் ஏற்றுவதைக் கண்டவர்கள் சிலர் பலவிதமான கதைகளைக் கூறுகின்றனர். இவர்கள் வண்டியிலேற்றப்பட்டதும் ஒரு வகை மயக்க மருந்தை அவர்கள் சுவாசிக்க வைக்கப்படுவதாக அவர்கள் தெரிவித்தனர். இவ்வாறு கடத்தப் பட்டவர்களின் கதி என்னவென்று தெரியவில்லை.

மற்றுமொரு சந்தர்ப்பத்தில் ஒரு பெண்ணைக் கடத்தியவர்களுக்கு 5,600 டொலர் தருவதாக அவளின் பெற்றார் வாக்களித்துள்ளனர். பணத்தைப் பெறுவதற்காக கடத்தல்காரர்கள் குறிப்பிட்ட இடத்துக்கு வந்த போது பாலஸ்தீனக் கண்காணிப்பாளர்களிடம் இவர்கள் வகையாக மாட்டிக் கொண்டனர். இதன் பின்னர் அவர்களின் கதி என்னவானது என்று தெரியவில்லை. இஸ்ரேலிய பொலீசாருக்கு இப்பெண் கடத்தல் பற்றி எதுவும் முறையிடப்படவில்லை. இங்கெல்லாம் பெண்கள் பாலியல் ரீதியில் தாக்கப்பட்டால்-கெடுக்கப்பட்ட செய்தி பரவினால் அவர்களுக்கு அதன் பின்னர் சமூகத்தில் ஏற்படும் இழிவுதான் இதனை வெளியிடாமலிருப்பதற்கான காரணமாகும். கற்பழிப்பு நோக்கங்களுக்காகவே இவர்கள் கடத்தப்படுகிறார்கள் என்று நம்பப்படுகிறது.

## கணவர் கற்பழித்தாராம்! மனைவி கொடுத்த தண்டனை!!

அமெரிக்கத் தலை நகரான வாஷிங்டனில் சுவையான -ஆனால் ஆண்களைக் கிலியடைய வைக்கும் சம்பவமொன்று நடந்துள்ளது. தனது விருப்பத்துக்கு மாறாக தனது கணவர் தன்னைக் கற்பழித்துவிட்டார் என்ற கோபத்தில் கணவர் உறங்கும் சமயம் பார்த்து அவருடைய ஆண்குறியின் மூன்றில் இரு பகுதியை மனைவி வெட்டி விட்டார். அத்துடன் மட்டுமல்லாமல் வெட்டிய துண்டை தனது மோட்டார் வண்டியில் எடுத்துச் சென்று தெருவிலும் வீசிவிட்டார். நல்ல வேளையாக வெட்டுண்டதுண்டைத் தேடிய பொலீசார் அதனைக்கண்டு பிடித்து ஐஸ் பெட்டியில் போட்டு மருத்துவ மனைக்கு எடுத்துச் சென்றனர். இதனை ஏனைய பகுதியுடன் வெற்றிகரமாகப் பொருத்துவதற்கு மருத்துவர்களுக்கு 9 1/2 மணி நேரம் தேவைப்பட்டது. வேண்டுமென்றே கணவனைக் காயப்படுத்திய குற்றச்சாட்டில் மனைவி தண்டனையை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்.

## அடி மேல் அடி

இங்கிலாந்து விளையாட்டுத்துறையில் தோல்விக்கு மேல் தோல்வியைத் தழுவிக் கொண்டு வருகிறது. உதை பந்தாட்டக் குழுவினர் நோர்வே ஆட்டக்காரரிடம் தோல்வி அடைந்தனர். அதனைப் பார்க்கிலும் அமெரிக்காவிடமும் படு தோல்வி அடைந்தனர். ஏழு சர்வதேச கிறிக்கட் போட்டிகளில் தோல்விகண்ட இங்கிலாந்து கிரிக்கட் அணியினர் அவுஸ்திரேலிய அணியிடமும் அடிபட்டனர். அதுமட்டுமல்லாமல் நியூஸிலாந்தின் சாதாரண மாகாண அணியுடன் றக்பி ஆடிய இங்கிலாந்து விளையாட்டாளர்களும் மண்கவ்வினர். விம்பில்டன் ரென்னிஸ் ஆண்களின் தனி ஆட்டப்பிரிவில் கிறிஸ் பெய்லி வெற்றி பெறுவார் என்று பலரும் எதிர்பார்த்தனர். ஆனால் அதுவும் தப்புக் கணக்காகிவிட்டது.

## பழிக்குப் பழி பாகிஸ்தான் பதிலடி


ஐ.நா. படைகளை எதிர்த்தாக்குதல் நடத்துவதற்கு பொஸ்னியாவோ கம்போடியாவோ தூண்டவில்லை. சோமாலியாவின் போர் வெறியரான ஜெனரல் மொகமட் ஃபாரா ஐடிடே இதனைத் தூண்டிவிட்டவராவார். தலை நகரான மொகாதிஷுவின் தென்புறத்தே ஜுன் 5ம் திகதி ஐ.நா. அமைதிப் படையைச் சேர்ந்த பாகிஸ்தான் துருப்புகள் இருபிரிவாகப் பிரிந்து செயலில் இறங்கினர். ஒரு பிரிவினர் உணவு வழங்கலில் ஈடுபட்டிருந்த வேளை மற்றக் குழுவினர் அங்குள்ள வானொலி நிலையத்தை அணுகினர். அங்கிருந்து தான்ஜெனரல் மொகமட் ஐ.நா.வுக்கெதிரான பிரசாரங்களைச் செய்து கொண்டிருந்தார். அவரைத் தேடியே அவர்கள் வானொலி நிலையத்தைச் சுற்றி வளைத்துத் தேடுதல் வேட்டை நடத்தினர். மொகமட்டின் ஆயுத பாணிகள் இவ்வீரர்களை எதிர்த்துத் தாக்கத் தலைப்பட்டனர். தாக்குதல் முடிந்தபின்னர் 23 பாகிஸ்தான்வீரர்கள் கொல்லப்பட்டிருந்தனர். தவிர 60 வீரர்கள் காயமுற்றுக் கிடந்தனர்.

சோமாலியாவில் பணிபுரியச் சென்ற பன்னாட்டு (ஐ.நா) அமைதிப்படையின் மொத்தம் 18,000 பேரில் 4,750 போர் வீரர்கள் பாகிஸ்தானைச் சேர்ந்தவர்கள். தங்கள் வீரர்கள் படுகொலை செய்யப்பட்டமைக்குப் பழிக்குப் பழி வாங்க வேண்டும் என்று பாகிஸ்தான் வீரர்கள் துடிக்கிறார்கள். இதற்கு அனுமதி கிடைத்துவிட்டது. முழுமையான தாக்குதல் நடத்துவதற்கு ஐ.நா. அதிகாரம் அளித்துவிட்டது. போராளியான மொகமட்டின் நிலைகளை ஐ.நா. படைகள் தொடர்ந்து மூன்று நாட்கள் தாக்கின. முதல் நாள் பாகிஸ்தானின் இரு பிரிவு வீரர்கள், சோமாலிய போராளிகள் மீது தாக்குதல் நடத்தியதில் 20 பேர் கொல்லப்பட்டனர். 50 பேர் காயமுற்றனர்.

மொகமட்டின் வீரர்கள் சாதாரண பொதுமக்களை கேடயமாகக் கொண்டு ஐ.நா. வீரர்கள் மீது தாக்குதலை நடத்தினர். பொதுமக்கள் தாக்கப்படுவர் என்று தான் இத்தந்திரத்தை மேற்கொண்டனர். பழிவாங்க வேண்டும் என்ற துடிப்புடன் இருந்த அமைதிப்படையினரை அமைதியாக இருக்கும்படி எதிர்பார்க்க முடியாத நிலை அது.

# பேனா நண்பர் அரங்கம்


பெயர்: இரத்தினசபாபதி இராஜ்மோகன்.
வயது: 21
வாசிப்பது: பத்திரிகை.
விரும்புவது: கதை எழுதுதல், வானொலி கேட்டல்.
முகவரி: உடபாகை எஸ்டேட், மத்திய பிரிவு, பொரலங்கொட, தெஹியோவிட்ட.




பெயர்: எஸ். துளசிதாசன்
விரும்புவது: கவிதையைக் காதலித்தல், கற்பனையில் உறவாடுதல்.
முகவரி: விகாரை வீதி, அக்கரைப்பற்று-9



பெயர்: எஸ்.ஐ.எஸ். முஜிபர்
வயது: 20
வாசிப்பது: கதைப்புத்தகம் வாசித்தல், பத்திரிகை படித்தல்.
முகவரி: 12/2, ஆறாவது இலக்க ஒழுங்கை, புத்தளம்.




பெயர்: கலைநேசன் ஜவாத்
வயது: 24
விரும்புவது: இயற்கை அழகை ரசித்தல், புகைப்படப் போட்டியில் பங்குபற்றல்
முகவரி: 10, முஸ்னி அன் பிரதர்ஸ் குரனாகல் வீதி, புத்தளம்.



பெயர்: முகம்து நிஜாம்
வயது: 23
விரும்புவது: கதை, கவிதை எழுதுதல், ரி.வீ. பார்த்தல், கிரிக்கட் விளையாடுதல்
முகவரி: 23/1 கும்புக்கந்துறை, தெல்தெனிய, கண்டி.

பெயர்: தஃலீமா எம். தாஸீம்
வாசிப்பது: பத்திரிகை, வானொலி தையல், சமையல்.
முகவரி: 473, கய்னாக, கய்காவல, ரத்தோட்ட.




பெயர்: ஆர். சற்குணராஜா
வயது: 20
வாசிப்பது: பத்திரிகை வாசித்தல், புத்தகம் படித்தல்.
முகவரி: சீ.ஜீ.4, வேலுவனராம வீடமைப்புத்திட்டம், வெள்வத்தை, கொழும்பு-6.



பெயர்: இஸ்ஸதுல் மக்சுமா
வயது: 25
வாசிப்பது: பத்திரிகை வாசித்தல், வானொலி கேட்டல், தொலைக்காட்சி பார்த்தல்.
முகவரி: 5/1, அத்துல பிளேஸ், கிருலப்பனை, கொழும்பு-5.




www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்



# கப்பல் விடு தூது

## அலசுவது—இராஜதந்திரி



வடபகுதிக்கான பொருளாதாரத் தடையில் மாற்றங் கொண்டுவரப்பட்டு, அங்கு கொண்டு செல்லப்படுவதற்குத் தடை விதிக்கப்பட்டிருந்த பொருட்கள் மீதான தடை நீக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப் பட்டதையடுத்து, வடபகுதியில் ஒருவித பூரிப்புத் துளிர்விட ஆரம்பித்திருந்தது.

பொருட்கள் மீதான தடை அகற்றப்பட்டுள்ளது என்ற செய்தியைவிட, இந்த நடவடிக்கையின் மூலம் அரசாங்கத்துக்கும், தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமிடையே ஒரு புரிந்துணர்வு ஏற்படுவதற்கான சூழ்நிலை உருவாகும் என்ற எண்ணத்தின் விளைவாகவே குடாநாட்டில் அப்பூரிப்பு ஏற்பட்டிருந்தது.

ஆனால் யாழ் குடாநாட்டினுள் கொண்டு செல்லப்படுவதற்கான பொருட்கள் மீதான தடைநீக்கம் முழுமையாக அமுல்படுத்தப்படு முன்னரே அரசுக்கும், புலிகளுக்குமிடையே ஏற்பட்ட உடன்பாட்டில் முறிவு ஏற்பட்டிருந்தது.

வடபகுதிக்கான பொருளாதாரத் தடை நீக்கம், மற்றும் புலிகளின் பிடியிலுள்ள போர்க் கைதிகளின் விடுதலை என்பன குறித்து அரசாங்கத்துக்கும், புலிகளுக்குமிடையே இடம்பெற்ற சந்திப்பு, இரு சாராருக்கு மிடையே எதிர்காலத்தில் இடம் பெறக்கூடிய விரிவான பேச்சு வார்த்தைகளுக்கு அடித்தளமிடும் என்றே அரசியல் அவதானிகள் எதிர்பார்த்தனர்.

ஆனால் அரசாங்கமும், புலிகளும் கடந்தகாலங்களில் தம்மிடையே இடம்பெற்ற சந்திப்புக்களின் போது பரஸ்பர விசுவாசத்தை வெளியிடத் தவறியிருந்ததுடன், இரு சாராரும் ஒருவரையொருவர் சந்தேகக் கண்கொண்டு பார்த்த நிலையிலேயே பேச்சுக்களையும் நடத்தியிருந்தனர்.

அரசாங்கத்தின் பிரதிநிதியாக பிரிகேடியர் ஆனந்த வீரசேகரா வடபகுதிக்குச் சென்று தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தைகளை நடத்தியிருந்தார். புலிகளின் தரப்பில் அவர்களின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்டன் பாலசிங்கம் பேச்சுக்களில் பங்குபற்றியிருந்தார்.

போர்க்கைதிகளின் விடுதலை தொடர்பாக பிரிகேடியர் ஆனந்த வீரசேகரா புலிகளுடன் பேச்சு வார்த்தை நடத்தியது இது முதல் தடவையல்ல.

சுமார் எட்டு வருடங்களுக்கு முன்னர் யாழ்ப்பாணம் டச்சுக் கோட்டையில் இலங்கை இராணுவம் குடியிருந்த போது பிரிகேடியர் ஆனந்த வீரசேகராவே கோட்டை இராணுவப் பொறுப்பதிகாரியாக இருந்தார். அப்போது அவர் ஒரு கேர்ணல் (Colonel) தரத்திலேயே இருந்தார்.

அச்சமயம் 'கிட்டு' என்றழைக்கப்பட்ட சதாசிவம் கிருஷ்ணகுமார் புலிகளின் யாழ்குடா நாட்டுத் தளபதியாக இயங்கி வந்தார்.

கிட்டுவின் காலப்பகுதியில் கோட்டையில் இருந்த இராணுவம் வெளியே தலைகாட்டமுடியாத நிலை காணப்பட்டது. கோட்டையின் அனைத்துப் புறங்களையும் புலிகள் இரவு பகலாக சுற்றி வளைத்திருந்ததுடன், இடையிடையே ஷெல் வெடிக்ளையும் கோட்டைக்குள் ஏவிய வண்ணமிருந்தனர்.

அத்துடன் கிட்டுவின் காலப்பகுதியிலும் இராணுவ வீரர்கள் சிலர் போர்க்கைதிகளாக புலிகள் வசம் பிடிபட்டிருந்தனர்.

இந்நிலையில் கோட்டை இராணுவப் பொறுப்பதிகாரியாகவிருந்த கேர்ணல் ஆனந்த வீரசேகரா புலிகளின் வடபகுதித் தளபதியாக இருந்த கிட்டுவுடன் ஒருவாறு தொடர்புகளை ஏற்படுத்தி தமது சக அதிகாரிகள் சிலருடன் கோட்டைக்கு வெளியே வந்து கிட்டுவுடன் பேச்சுக்களை நடத்தியிருந்தார்.

## புரிந்துணர்வை ஏற்படுத்துவதிலும் ஒருவருக்கொருவர் விசுவாசமற்ற நிலை!

அத்துடன் யாழ்குடாநாட்டின் பிரபல உதைபந்தாட்ட வீரராக விளங்கிய தமது நண்பரான முன்னாள் பரமேஸ்வராக் கல்லூரி அதிபர் திரு.ஈ.கனகலிங்கத்தையும் புலிகளுடன் சென்று பிரிகேடியர் ஆனந்த வீரசேகரா சந்தித்திருந்தார்.

இது தவிர மறைந்த நடிகரும், அரசியல்வாதியுமான விஜய குமாரணதுங்க, புலிகளின் வடபகுதித் தளபதியாக இருந்த கிட்டுவைச் சந்திப்பதற்கான சந்தர்ப்பத்தையும் பிரிகேடியர் வீரசேகராவே அன்று ஏற்படுத்திக் கொடுத்திருந்தார்.

எனவே புலிகளைப் பொறுத்தவரை பிரிகேடியர் ஆனந்த வீரசேகரா ஒரு புதிய வரவல்ல. அன்று கிட்டு பிரிகேடியர் வீரசேகராவைச் சந்தித்திருந்தார். இத்தடவை புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்டன் பாலசிங்கம் அவரைச் சந்தித்திருந்தார்.

பிரிகேடியர் ஆனந்த வீரசேகராவின் யாழ் விஜயமும், புலிகளுடனான அவரது சந்திப்பும் அரசியல் வட்டாரங்களினால் மிகவும் அக்கறையுடன் அவதானிக்கப்பட்டிருந்தன.

1990ம் ஆண்டு அரசுக்கும்-புலிகளுக்குமிடையே இடம்பெற்ற பேச்சுக்கள் முறிவடைந்ததையடுத்து, அரசாங்கத்தின் விசேட பிரதிநிதியாக ஆனந்த வீரசேகரா இத்தடவை புலிகளைச் சந்தித்திருந்தார்.

புலிகளுக்கும்- அரசுக்குமிடையிலான உறவுகள் முறிவடைந்து சரியாக மூன்று வருடங்கள் பூர்த்தியடைந்த நிலையில், புலிகளின் தற்போதைய நிலைப்பாடு எத்தகைய கோணத்தில் இருக்கின்றதென்பதனை நாடிபிடித்தறியும் ஒரு சந்தர்ப்பமாகவே பிரிகேடியர் வீரசேகராவின் யாழ் விஜயம் அமைந்திருந்தது.

ஆனால் பிரிகேடியரின் சந்திப்புக்கு புலிகளுடன் எந்த வகையிலும் காத்திரமான ஒரு உடன்பாட்டை எட்டத் தவறியிருந்தது.

புலிகளின் பிடியிலுள்ள கைதிகளின் விடுதலை, வட பகுதிக்கான பொருளாதாரத் தடை நீக்கம் என்பன குறித்து ஆரம்பத்தில் இரு தரப்பினரும் சாதகமான கருத்தொருமிப்பை எட்டியிருந்தனர்.

இதனையடுத்து அரசாங்கம் வடக்கே கொண்டு செல்லப் படுவதற்கு இதுவரை காலமும் தடை செய்திருந்த பொருட்களை ஏற்றிய ருகுணு என்ற சரக்குக் கப்பலையும் வடக்கிற்கு அனுப்பி வைத்திருந்தது.

இக்கப்பலின் பயணம் மிக முக்கியத்துவம் வாய்ந்ததொன்றாகவே கருதப்பட்டது.

வெறுமனே தடைநீக்கப்பட்ட பொருட்களை ஏற்றிச் செல்லும் கப்பலாக மட்டும் ருகுணு நோக்கப்படவில்லை. புலிகளுக்கும்-அரசுக்குமிடையே ஏற்பட்ட உடன்பாட்டையடுத்து, இருசாராருக்குமிடையே எதிர்கால உறவுகளை விஸ்தரிப்பதற்கான ஒரு மறைமுகத் தூதாகவே ருகுணுவின் பயணம் கருதப்பட்டிருந்தது.

ஆனால் ருகுணு கொண்டு சென்ற பொருட்கள் தரை இறக்கப்படுமுன்னரே 'வேதாளம் மீண்டும் முருங்கையில் ஏறியதைப்' போன்று புலிகளுக்கும் அரசுக்குமிடையே ஏற்பட்டிருந்த உடன்பாட்டில் முறிவு ஏற்பட்டிருந்தது.

இதனையடுத்து போர்க் கைதிகளை விடுதலை செய்வது என்ற முடிவையும் புலிகள் வாபஸ் பெற்றனர். அரசாங்கமும் தடை நீக்கப்பட்ட பொருட்களை வடபகுதிக்கு அனுமதிப்பதற்கான முடிவில் ஸ்தம்பிதத்தைக் கொண்டு வந்தது.

1990ம் ஆண்டு முதல் வடபகுதிக்குக் கொண்டு செல்லப் படுவதற்கான பொருட்கள் பலவற்றின் மீது அரசாங்கம் தடைகளை விதித்துள்ளமை அனைவரும் அறிந்ததே.

புலிகள் பலமடைவதைத் தடுக்கும் வகையிலேயே அரசாங்கம் வடபகுதிக்குக் கொண்டு செல்லப்படுவதற்கான பண்டங்கள் மீது தடைகளை விதித்திருந்தது.

எனவே புலிகளைக் குறிவைத்தே அரசாங்கம் தடைகளை விதித்துள்ள போதிலும், வடக்கில் உள்ள பொதுமக்களே இத்தடைகளினால் பெரிதும் பாதிக்கப் பட்டவர்களாகக் காணப்படுகின்றனர்.

வடபகுதிக்கான பொருளாதாரத்தடை புலிகள் மீது எதுவித தாக்கத்தையும் ஏற்படுத்தாத சூழ்நிலையே காணப்படுகின்றது. அவர்கள் தமக்குரிய பொருட்களை எந்தவகையிலும் பெற்றுக் கொள்ளக்கூடியவர்களாகவே காணப்படுகின்றனர்.

இந்நிலையில் பொதுமக்களே தொடர்ந்து பாதிப்புக்களை எதிர் நோக்கும் சூழ்நிலை காணப்படுவதுடன், வடக்கு-கிழக்கு நெருக்கடி தொடர்பாக தீர்வு ஒன்றினை எட்டும் சந்தர்ப்பமும் எட்டாக்கனியாகவே இருக்கின்றது.

புலிகளுக்கும், அரசுக்குமிடையே போர்க்கைதிகளின் விடுதலை, வடபகுதிக்கான பொருளாதாரத் தடைநீக்கம் என்பன குறித்து ஏற்பட்ட உடன்பாட்டில் தோன்றிய முறிவு, இருசாராரும் பரஸ்பர விசுவாசத்தைக் கட்டியெழுப்பத் தவறியிருப்பதையே சுட்டிக் காட்டுவதாக இருக்கின்றது.

நேருக்கு நேராக முகத்துக்கு முகம்பார்த்து திறந்த மனத்துடன், தீவிரப் போக்கைக் கைவிட்டு பேச்சுவார்த்தைகளில் பங்கு பற்றும் சூழ்நிலையே இன்று அவசியம் தேவைப்படுகின்றது.

அரசாங்கத் தலைவர்கள் புலிகளுடன் பேச்சுவார்த்தைகளை நடத்த விருப்பம் தெரிவித்து வருவதுடன், புலிகளையும் அரசியல் நீரோட்டத்தில் பங்கு பற்றுமாறு வேண்டுகோள்களை விடுத்து வருகின்றனர்.

ஆனால் ஒரு புதிய புரிந்துணர்வைக் கட்டியெழுப்பக் கிடைத்த சந்தர்ப்பத்தை நழுவவிட்டவர்களாகவே இருசாராரும் தற்போது காணப்படுகின்றனர்.

வடபகுதிக்குக் கொண்டு செல்லப்படுவதற்குத் தடை விதிக்கப்பட்டிருந்த பொருட்கள் மீதான தடை நீக்கப்பட்டது குறித்து அறிவிக்கப்பட்டிருந்த போது, அத்தடைநீக்கம் குறித்து சில தென்னிலங்கைப் பத்திரிகைகள் கடுமையான கண்டனத்தையும் வெளியிட்டிருந்தன.

ஆனால் இந்த விமர்சனங்கள் யாவும் மிகவும் குறுகிய கண்ணோட்டத்தைக் கொண்டதாகவே காணப்பட்டன.

ஒரு சில புரிந்துணர்வுகள் ஏற்படுவதற்கு தாராளமான மனப்போக்கும் இருக்க வேண்டியது மிகவும் இன்றியமையாததாகவே இருக்கின்றது.

எனவே புலிகளும், அரசாங்கமும் உண்மையிலேயே பேச்சு வார்த்தைகளை நடத்துவதில் ஆர்வங் கொண்டிருந்தால் அவர்கள் விட்டுக்கொடுக்கும் மனப்பான்மையுடன் தாராள சிந்தையைக் கொண்டிருக்க வேண்டியது மிகவும் அத்தியாவசியமாகின்றது.

வடக்கு-கிழக்குப் பகுதியில் இதுவரை பூரண அமைதி நிலை ஏற்படாத இத் தருணத்தில், தென்னிந்தியாவின் தமிழ் நாட்டிலிருந்து இலங்கைத் தமிழ் அகதிகளைஇலங்கைக்குத் திருப்பி அனுப்பும் நடவடிக்கைகள் குறித்து தமிழக அரசு தீவிர அக்கறைகாட்டி வருகிறது.

வடக்கு-கிழக்கில் தோன்றிய விபரீதமான சூழ்நிலைகள் காரணமாகவே இலங்கைத் தமிழ் அகதிகள் தமிழ் நாட்டில் தஞ்சம் புகுந்திருந்தனர்.

ஆனால் தமிழ்நாட்டில் தற்போது தோன்றியுள்ள நெருக்கடிநிலை இலங்கைத் தமிழ் அகதிகளை மிகவும் பாதிப்படையச் செய்துள்ளது.

கடந்த சில வருடங்களாக தமிழ்நாட்டில் ஏற்படுத்தப்பட்டுவரும் அச்சுறுத்தல்களைக் காரணம் காட்டியே தமிழக அரசு இலங்கைத் தமிழ் அகதிகள் மீது கடும் போக்கைக் கடைப்பிடிக்க ஆரம்பித்துள்ளது.

1983ம் ஆண்டு இனக்கலவரம் ஏற்பட்டதையடுத்து இலங்கை அகதிகளுக்குப் புகலிடம் வழங்கிப் பாதுகாப்பதில் இந்தியா பெரும் பங்கு வகித்திருந்தது.

கொழும்பில் பாதிக்கப்பட்டு நிர்க்கதிக்குள்ளான தமிழ்மக்களை வடபகுதிக்குக் கொண்டு செல்வதற்கும் 'எம்.வி. சிதம்பரம்' என்ற ஆடம்பரக் கப்பலை கொடுத்துதவியிருந்ததுடன், தமிழகம் வந்திருந்த இலங்கைத் தமிழ் அகதிகளையும் பல்வேறு அகதி முகாம்களில் வைத்துப் பராமரிக்க இந்தியா முன் வந்திருந்தது.

ஆனால் ராஜீவ் காந்தி கொலையுண்டதையடுத்து, அக் கொலை தொடர்பாக தமிழீழ விடுதலைப்புலிகள் மீது இந்திய அரசு சந்தேகம் கொள்ள ஆரம்பித்ததையடுத்தே, இலங்கைத் தமிழ் அகதிகள் மீதும் தமிழக அரசு கடும்போக்கைக் கடைப் பிடிக்க ஆரம்பித்துள்ளது.

வடக்கு-கிழக்கு மாகாணங்களில் சுமுக நிலை ஏற்படாதிருப்பதால் அப்பகுதிகளிலிருந்தும் தப்பி ஓடுவதிலேயே தமிழ் மக்கள் தற்போது ஆர்வங்காட்டி வருகின்றனர்.

அண்மைக்காலங்களில் கூட வவுனியாவுக்கு அப்பால் வடக்கேயிருந்து நூற்றுக்கணக்கான மக்கள் பாதுகாப்புப் படையினரால் விடுவிக்கப்பட்ட



## விட்டுக் கொடுக்கும் மனப்பான்மையும் தாராளப் போக்குமே இன்றைய தேவை!

பிரதேசங்களுக்குள் பிரவேசித்தனர்.

ஆனால் விடுவிக்கப்பட்ட பகுதிகளினதும் புனரமைப்பு வேலைகளில் துரிதம் காணப்படவில்லை. அப்பகுதிகளில் செயல்படும் தமிழ் அமைப்புக்கள் அது தொடர்பாக அரசோடு பேசி வருகின்றன.

எனவே இந்தியாவிலுள்ள ஆயிரக்கணக்கான இலங்கைத் தமிழ் அகதிகளை இலங்கைக்குத் திருப்பி அனுப்புவது குறித்து இந்தியா நிதானப் போக்கைக் கடைப்பிடிக்க வேண்டியது அவசியமானதாகின்றது.


www.padippakam.com

நன்றி - நூலகத்திட்டம்

அறிந்து கொள்ளுங்கள் – ஆரோக்கியம் பெறுங்கள் – ஆனந்தமாய் வாழுங்கள்

# மருத்துவ + விந்தைகள்

## ஹவுஸ் புல் கருவறை



தொடர்ந்து 30 நாட்கள், கரு உற்பத்தி வளத்தைப் பெருக்குவதற்காகப் பயன்படுத்தப்படும் மருந்தினை உட்கொண்டாள் ஒருபெண். இதன் விளைவாக இன்று 12 குழந்தைகளை தன் வயிற்றில் சுமக்கிறாள்.

ஆனால் இவரைப் பரிசோதித்த மருத்துவர்கள், இத்தனை குழந்தைகளையும் உயிருடன் பிரசவிக்க வைக்க முடியாதென்றும் இவற்றில் சிலவற்றை கருச்சிதைவு செய்தால் ஏனையவற்றை சுகமாகப் பிரசவிக்க வைக்க முடியும் என்றும் கூறிவிட்டனர். அவ்வாறு சிதைக்கப்படுவதனால் ஏனைய குழந்தைகள் காயமின்றி சுகமாக வளர முடியும் என்றும் டாக்டர்கள் கூறுகின்றனர்.

"எந்தப் பெண்ணும் 12 குழந்தைகளை ஒரே தடவையில் பெற்றெடுக்க முடியாது" என்று இஸ்ரேலின் தலைநகரான ரெல் அவிவுக்கு அருகேயுள்ள ரெல் ஷோமெர் மருத்துவமையத்தைச் சேர்ந்த டாக்டர் இஸ்ரேல் மீஸ்னெர் கூறிகிறார். இரண்டு மாதக் கர்ப்பிணியாக இந்தத் தாய் இருக்கும் போது டாக்டர்கள் நடத்திய பரிசோதனைகளின் பின்னரே ஒரு கருப்பையினுள் 12 குழந்தைகள் கருத்தரித்திருப்பது கண்டு பிடிக்கப்பட்டது. இவர் கருத்தரிப்பதற்கு முன்னர் இவருக்கு 30 நாட்கள் தொடர்ந்து தாது விருத்திக்கான ஹோமோன் மருந்துகள் கொடுக்கப்பட்டன.

கருப்பையில் முட்டைகள் விருத்தி செய்வதைத் தூண்டுவதற்காக, கடந்த 15 வருடங்களுக்கு மேலாக குறிப்பிட்ட ஹோர்மோன்கள் கொடுக்கப் படுவதுண்டு என்று டாக்டர் மீஸ்னெர் தெரிவித்தார். ஏற்கனவே அவுஸ்திரேலியப் பெண் ஒருத்தி ஒரே சூலில் 9 பிள்ளைகளை ஈன்றெடுத்தார். இதுவே உலக சாதனையாகும். இவற்றில் 6 குழந்தைகள் இன்னும் உயிருடன் உள்ளன. ■

## ஒளி விளக்கின் கீழ் படிப்பவரா நீங்கள்? இதைப் படியுங்கள்!



### எச்சரிக்கை!

உப்பினியுடன் கூடிய மின் ஒளி உமிழ் விளக்கின் ஒளியில் படிப்பது சுலபமாக இருக்கலாம். ஆனால், இப்பொழுது அதிர்ச்சியூட்டும் தகவல்கள் வெளிவருகின்றன. அண்மையில் நடத்தப்பட்ட ஆய்வுகளின்படி இவ்வொளி சருமப் புற்றுநோய்க்கும் காரணமாகலாம் என்று தெரிய வருகிறது. படுக்கையில் கிடந்து வாசிப்பதற்காக சிறிய மின்விளக்குகளைப் பாவிக்கிறோம். இவை நேரடியாகவே ஒளியை வெளியேற்றுகின்றன. நமது உடம்பில் ஏதோ ஒரு பாகத்தை இவ்வொளி தொடர்ந்து பட்டுக்கொண்டிருக்கும். இதன் தாக்கம் நமக்கு உடனடியாகத் தோற்றுவதில்லை. இவ்வொளியில் வெளியேறும் ஊதாக்கதிர் வீச்சு அந்தக் குறிப்பிட்ட உடல் பரப்பில் பாய்வதனால் அப்பகுதியில் சருமப்புற்றுநோய் தோன்ற வாய்ப்பு ஏற்படுகிறது. இதனால் இத்தகைய உப்பினி மின் விளக்குகள் பாவிக்கப்படும் போது கதிர் வீச்சைக் கட்டுப்படுத்தும் கண்ணாடி பாதுகாப்பு அடுக்குகளை விளக்கின் மீது பொருத்த வேண்டும் என்று விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.

இத்தகைய மின் விளக்குகளை உற்பத்தி செய்யும் நிறுவனங்களுக்கும் ஊதாகதிர்வீச்சைக் கட்டுப்படுத்தும் கண்ணாடிகள் பொருத்தும் வண்ணம் கோரிக்கை விடுக்கப்படுகிறது.

சாதாரண மின் விளக்குகள் அதிக அபாயம் தரத் தக்கனவல்ல. உப்பினி விளக்குகளுக்கு ஸ்படிகம் பொருத்தப்படுகிறது. இதனால் அதிக உஷ்ணம் வெளியேற்றப்படுகிறது. ஸ்படிகம் பயங்கரமான கதிர்வீச்சை வெளியிடுகிறது. ஹலோ-ஜென் எனப்படும் உப்பினி மின்விளக்குகள் பாவிக்கப் படும் போது கதிர்வீச்சை கட்டுப்படுத்த இரட்டைக் கண்ணாடித் தடுப்புகள் ஏற்படுத்துவதனால் அபாயத்திலிருந்து காத்துக் கொள்ள முடியும். இத்தகைய ஒளி விளக்குகளை உங்களுக்கு மிக அருகில் வைக்க வேண்டாம். அதிக நேரம் அதன் ஒளி உங்கள் உடம்பில் படுவதையும் தவிர்த்துக் கொள்ள வேண்டும் என்று ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

## முடி உதிரும் பெண்களுக்கு!



மோகன் பெயர்சைல்ட் அலை போலச் சுருண்ட தலைமுடி கொண்ட அழகி. இவருக்கு ஏற்பட்ட அமுக்கமான சூழ்நிலை காரணமாக இவருடைய தலைமுடி உதிரத் துவங்கியது. ஆனால் மோகன், மாயம் போன்ற தியான முறைகளினால் அமுக்க நிலையிலிருந்து விடுபட்டு, முடியுதிர்வதையும் கட்டுப்படுத்திக் கொண்டார்.

"நான் மிகக் கடுமையாக-அளவுக்கு மீறி உழைக்க வேண்டியிருந்தேன். இதனால் எனக்காக ஒரு வாழ்க்கை உண்டு என்ற நிலையையும் இழந்து போனேன். இதனால் எனது அழகான தலை முடிகூட கற்றை கற்றையாக உதிரத் தொடங்கியது." என்று 42 வயதான அழகி மோகன் பெயார்சைல்ட் கூறுகிறார்.

"எனது வேலையினால்ஏற்பட்ட அமுக்கப்பழுவை குறைப்பதற்காக என்னை மயக்க நிலையில் வைப்பதற்கு எனது மருத்துவர்கள் விரும்பினார்கள், ஆனால் நான் அதற்கு உட்பட மறுத்து விட்டேன்" என்று மோகன் கூறுகிறார். மனதை ஒரு நிலைப்படுத்தும் ஹிப்னாடிச முறை மூலமும் தியானத்தின் மூலமும் தனது அழுத்த நிலையிலிருந்து விடுபட்டதுடன் தலை முடி உதிர்வதிலிருந்தும் காத்துக் கொண்டார். அத்துடன் தலையில் அழுத்தப்பிடி (மசாஜ்) முறைகளையும் மேற்கொண்டார். இனி மேல் எத்தகைய அமுக்கத்தையும் தன்னால் சமாளித்து விட முடியும் என்கிறார். ●

## லேடீஸ் ஸ்பெஷல்



குழந்தைகளுக்கு தாய்ப்பால்தான் சிறந்த உணவு என்பதை தாய்மார்கள் தெரிந்திருந்தாலும், குழந்தைகளுக்கு எப்படி பால் கொடுப்பது என்பது சில பெண்களுக்கு தெரியவில்லை.

முறையாக- சரியாக பால் கொடுத்தால் தான் தாய்க்குத் தங்குதடையின்றி பால் சுரக்கும். குழந்தைகளுக்கு வயிறு நிறையும்.

குழந்தை பிறந்தவுடன் குழந்தைக்கு தாய்ப்பால் கொடுப்பதற்கு தாய் தனது முலைக்காம்பை குழந்தையின் வாயில் வைத்து சப்ப வைக்க வேண்டும். ஒரு வேளை பிறந்த குழந்தைக்கு உடனே தாய்ப்பால் குடிக்க விருப்பம் இல்லாமல் இருந்தால் கூட அதற்காகத் தாய் கவலைப்படக்கூடாது. ஏனென்றால் சில குழந்தைகளுக்குப் பசி எடுக்க சில மணி நேரம் ஆகலாம்.

பிறந்தவுடன் குழந்தை தாய்ப்பால் குடிக்கவில்லையென்று சர்க்கரைத் தண்ணீரை கொடுக்கக்கூடாது. குழந்தைக்கு காய்ச்சல், பேதி, சளி போன்ற நோய்கள் வரலாம். குழந்தை பிறந்ததும் தாய்ப்பால் கொடுக்காவிட்டால் தாய்க்குப் பால் சுரக்கும் உந்துதல் குறைந்து, காலதாமதமாகப் பால் சுரக்கலாம். சில நேரம் இதுவே குறைந்த பால் சுரக்கும் தன்மையோ அல்லது பாலே சுரக்காமல் கூடப் போகும் நிலையோ வரலாம். குழந்தை பிறந்தவுடன் எவ்வளவுக்கு எவ்வளவு சீக்கிரமாகப் பால் குடிக்கத் தொடங்குகிறதோ அவ்வளவுக்கு அவ்வளவு அதிகமாகவும் பால் சுரக்கும். தொடர்ந்து பால் கொடுக்க தேவையான அளவு பால் சுரக்கத் தொடங்கிவிடும்.

குழந்தை பிறந்த சில நாட்களுக்கு குறைந்தது மூன்று மணி நேரத்திற்கு ஒரு தடவை பால் கொடுக்க வேண்டும். அல்லது குழந்தை பசியால் அழும்பொழுது, குழந்தைக்கு பால் கொடுக்கலாம். குழந்தை பால் குடிக்க விரும்பாத நேரத்தில் வற்புறுத்திக் கொடுக்கக் கூடாது.

குழந்தை பால் குடித்த மூன்று மணி நேரம் வரை அழாமல் இருந்தாலும், அதன் எடை சரியான விகிதத்தில் கூடிக்கொண்டு வந்தாலும் சிறுநீர் அடிக்கடி கழித்துக் கொண்டிருந்தாலும் குழந்தை சரியானபடி பால் குடிக்கிறது என்று எடுத்துக் கொள்ளலாம்.

நன்றாக தாய்ப்பால் குடிக்கும் குழந்தைகள் பத்து நாட்கள் எடைகூடித் தெரியும். ஒரு நாளைக்கு 25 கிராம் வீதம் 12 வாரங்களில் படிப்படியாக எடை கூடிக்கொண்டே வரும். பகல், இரவு நன்றாக தூங்கும் குழந்தை நன்றாகத் தாய்ப்பால் குடிக்கிறது என்று அர்த்தமாகும்.

முலைக்காம்புகளில் புண்கள் இருந்தாலோ, மடிந்த முலைக்காம்பு இருந்தாலோ, முலையில் சளிக்கட்டி இருந்தாலோ, மலேரியா போன்ற தொத்து நோய்களால் தாய்பாதிக்கப்பட்டாலோ குழந்தைக்கு அலற்சியிருந்தாலோ பால் கொடுப்பதை நிறுத்த வேண்டும்.

தாய்ப்பாலில் தேவையான அளவு நீர்ச்சத்து இருப்பதால் தாய்ப்பால் குடிக்கும் குழந்தைக்கு தண்ணீர் கொடுக்க வேண்டியதில்லை. தாய்மார்கள் தண்ணீர் நிறைய பருக வேண்டும். பழங்கள், காய்கறிகள் ஆகியவற்றை உணவோடு அதிகமாக சேர்த்துக் கொண்டால் பால் அதிகமாகச் சுரக்கும்.

குளிக்கும் போதும், மாலையிலும் முலைகளை சோப்புப் போட்டு சுத்தப்படுத்த வேண்டும். குழந்தைக்குத் தாய்ப்பால்கொடுக்கும் முன் ஒவ்வொரு தடவையும் முலைகளைச் சுத்தப்படுத்த வேண்டிய அவசியமில்லை. முலைக்காம்புகளில் எண்ணெய் போன்ற வழுவழுப்பான திரவங்களைப் பூச வேண்டிய அவசியமும் இல்லை.

குழந்தைக்கு அதிக நேரம் சரியான நிலையில் உட்காராமல் பால் கொடுத்தாலோ மடிந்த காம்புகளில் குழந்தை கஷ்டப்பட்டுப் பால் குடித்தாலோ, பால்தரும் பொழுது மார்புக் காம்புகளில் வலி இருந்தாலோ பால்சுரப்பது தடைபடும். ஆதலால் தாய்மார்கள் இதைக் கவனிக்க வேண்டும்.

குழந்தைக்கு ஐந்து முதல் ஆறு மாதம் வரை தாய்ப்பால் உணவே போதுமானது. ஐந்து மாதத்துக்குப் பிறகு குழந்தைகளின் வளர்ச்சிக்குத் தாய்ப்பால் மட்டும் போதாது. ஆகையால் ஐந்து மாதம் முடிந்தவுடன் திரவம் கலந்த உணவைக் கொடுத்துப் பழக்கப்படுத்த வேண்டும். முதலில் கிச்சடி, பால், அரிசி, மாவு கலந்த உணவையும் கொடுக்கக் கூடாது. கரண்டி கொண்டு உணவை கொடுக்க வேண்டும். உணவின் அளவை சிறிது சிறிதாக அதிகப்படுத்தலாம். பிசைந்த வாழைப்பழம், பப்பாளி, கனிந்த மாம்பழம் போன்றவற்றைக் குழந்தைக்கு ஊட்டலாம். ஒன்பது மாதத்திலிருந்து ரொட்டி, சப்பாத்தி சுவையோடு தயாரித்து குழந்தைகளுக்கு ஊட்டலாம். ஒரு ஆண்டு ஆகியவுடன் தாய் உண்ணும் எல்லா உணவுகளையும் குழந்தைக்கும் கொடுக்கலாம்.

தொகுப்பு: கிளாமர் கிங்.

## சித்த மருத்துவத்தில் நோய் கணிப்பு!

ஒரு கண்ணாடிக் குவளையில் விடியற்காலையில் சிறுநீர் எடுத்து அதில் ஒன்று இரண்டு துளி எண்ணை விட்டால் அதில்-

1. எண்ணைத் துளி வளைந்து பாம்பு போல் காணப்பட்டால் வாதநோய்; மோதிரம் போல் இடைவிட்ட வட்டமாக இருப்பின் பித்தநோய்; முத்துப் போல் நின்றால் கபநோய் என அறிந்து கொள்ளலாம்.
2. எண்ணைத் துளி வேகமாகப் பரவினால் விரைவில் நோய் குணமாகும். மெதுவாகப் பரவினால் குணமடைய காலதாமதம் ஆகும். எண்ணைத்துளி அப்படியே இருந்தால் நோய் தீராது. எண்ணைத் துளி சிதறினாலோ அல்லது அமிழ்ந்து விட்டாலோ மரணம்.

இத்தகைய முறைகள் வேறு எந்த மருத்துவ முறையிலும் இல்லை என்பது சித்த மருத்துவத்தின் தனிச் சிறப்பு ஆகும்.

## வயிற்று வலி

உஷ்ணம், வாயு, அஜீரணம் மற்றும் பல காரணங்களால் வயிற்று வலி ஏற்படுகிறது. உஷ்ண வயிற்று வலிக்கு நல்ல மோராக ஒரு டம்ளர் எடுத்து சிறிது உப்புச் சேர்த்துக் கலந்து பருகவும். அரைத் தேக்கரண்டி சீரகத்துடன் சிறிது உப்பைச் சேர்த்து கைகளிலேயே கசக்கி வாயில்போட்டு சுடுதண்ணீர் சாப்பிடவும். வயிற்று வலி போகும்.

வாயு சம்மந்தப்பட்ட வயிற்று வலிக்குச் சிறிதளவு பெருங்காயத்தை நெய்யில் பொரித்து சாப்பிடவும். வாயு பிரிந்து வலி நீங்கும். ஒரு துண்டு சுக்கைத் தட்டிப் போட்டு அதற்கேற்ற பனங்கற்கண்டையும் சேர்த்து ஒரு டம்ளர் தண்ணீர் விட்டுக் கொதிக்க வைத்து சாப்பிடும் சூட்டிற்கு ஆறியதும் இரண்டு மூன்று முறை பருகினால் வாயு, வயிற்றுவலி நீங்கும். அஜீரண வயிற்றுவலி அடிக்கடி வந்தால் தினமும் ஏதாவது கீரை வகைகளை உணவுடன் சாப்பிட்டு வந்தால் குணமாகும். ●

www.padippakam.com

நன்றி - நூலகத்திட்டம்

## சிறுகதை

# என்ன சொல்லப் போகிறார்கள்



முகில் வண்ணன்

**த**லைநகரில் அமைந்துள்ள தலைமைக் காரியாலயத்தில் ஒரு தனிப் பிரிவுக்குத் தலைவனாக இருந்தான் சிறிதர். அந்தப் பகுதி அவனது கட்டுப்பாட்டில் இருந்தது. அவனது கட்டளையில் இயங்கியது. அவனது சுறுசுறுப்பையும் கட்டுப்பாட்டையும் கண்டிப்பான நடவடிக்கை களையும் பாராட்டினர் உயரதிகாரிகள்.

உயரதிகாரிகளிடம் பாராட்டைப் பெற்றால் மட்டும் போதுமா? கீழிருக்கும் ஊழியர்களையும் திருப்திப்படுத்த வேண்டாமா? அவனது கட்டுப்பாடும் கண்டிப்பான போக்கும் பலருக்கும் பிடிப்பதில்லை. காலதாமதமாகி வந்தால் 'சோட்லீவு' எடுக்க வைப்பதும், நேரத்துக்கு 'றெஜிஸ்ர'ரில் சிவப்புக் கோடு போடுவதும், இடை நேரங்களில் எழுந்து சென்று 'சத்தோச' போன்ற இடங்களுக்குச் சென்று குடும்பத்துக்குத் தேவையானவற்றை வாங்க அனுமதிக்காததும் அவர்களை முணுமுணுக்க வைத்தது.

"அவருக்கென்ன தெரியும் குடும்பக் கஷ்டம். அவர் தனி மனிதன். ஒரு அறையில் இருந்து கொண்டு கடையில் சாப்பிடுபவர். அவருக்குத் தேவைகளும் குறைவு. நாங்களும் அப்படியா? மாலை வீடுதிரும்பும் போது எத்தனை பேர் மலிவு விலையில் 'சத்தோச'வில சாமான் வாங்கிப் போவதை பஸ், றெயினில் போகும் போது சந்திக்கிறோம். எங்களுக்கு அந்த வசதி இல்லையே. இந்த மனிசனும் குடும்பமாகி விட்டால் தான் நமது நிலை புரியும் என்று ஆளுக்காள் கீழ்க்குரலில் பேசிக்கொள்வார்கள். இதில் இனபேதம் நிலவாது எல்லோரும் ஒன்றாகவே குரல் கொடுப்பர்.

அந்தக் கந்தோரில் சிறிதருக்குக் கீழே வேலை செய்யும் ஆண் பெண் பதினாலு பேரும் மணம் முடித்தவர்கள். இதனால் அவனை மடக்க முடியவில்லை என்ற ஆதங்கம் அங்கிருக்கும் அனைவருக்கும் உண்டு. மணம் முடித்த 'ரைப்பிஸ்ற்' கூட் முயற்சித்து தோற்றுப் போனாள்.

'அது ஒரு ஜடம். உணர்ச்சியே இல்லை. இதற்கு எங்கே கல்யாணம் நடக்கப் போகிறது. பெண்களின் மென்மையைப் புரிந்து கொள்ளவே முடியவில்லை எப்போதும் கடுமையாக நடந்து கொண்டால் எப்படி?' என்று ஒதுக்கி விட்டாள்.

எமக்கு விடிவே வராதா? என்று ஏங்கினார்கள் அவர்கள்.

அன்று தபாலில் அந்த நியமனக் கடிதம் கிடைத்ததும் மெல்ல மெல்ல அந்த இலாகா முழுவதும் செய்தி பரவியது. கிசுகிசுக்கள் ஆரம்பமாகியது. மாலை தேனீருடன் ஒருவன் கேக்கும் வாங்கிப் பரிமாறினான். அத்தனை மகிழ்ச்சி அவர்களுக்கு. அனுமானத்திலே ஆனந்தம் கொண்டாடினார்கள்.

ஆமாம். பத்மராணி என்னும் ஒரு பெண் தங்கள் பகுதிக்கு புதிய 'அக்கவுண்ட் கிளார்க்' வேலைக்கு நியமிக்கப்பட்டிருக்கிறாள் என்பதுதான் அந்தக் கடிதத்தின் வாசகம்.

ஆனால் அங்கிருந்த ஊழியர்களோ சிறிதருக்கு மணப்பெண் தேடி நிச்சயித்தது போல் குதூகலித்தனர்.

அவள் ஒரு தமிழ்ப் பெண். சிறிதருக்கு ஜோடியாக இருப்பாள். புதிய அப்பொயின்மெண்ட் என்ற படியால் திருமணம் முடித்திருக்க நியாயமில்லை. புது அறிமுகம் என்றபடியால் வேலை பழக சிறிதரிடமே அனுப்பி விடுவது, அந்தப் பழக்கத்தில் இருவரும் காதலிக்கத் தொடங்க தங்களுக்குக் கொண்டாட்டம் தான். என்று அனுமானித்துச் செயற்பட்டனர்.

நியமனக் கடிதத்தைப் பார்த்த சிறிதர் சலனமேதுமின்றி சீ.சியின் பார்வைக்கும் பைல் பண்ணி வைப்பதற்குமாக குறிப்பெழுதி அனுப்பி விட்டான் வழமைபோல். அவள் வருவதால் தான் இப்போது செய்யும் 'அக்கவுண்ட்' வேலையையும் அவளிடமே ஒப்புவித்து விடலாம் என்பதில் மட்டும் ஆறுதல் அடைந்தான். ஆனால் மற்ற உத்தியோகத்தர்கள் அந்த நாளை ஆவலோடு எதிர்பார்த்து இருந்தனர்.

நேர்த்தி வேறு வைத்தனர். போயாவுக்கு 'பூஜைவட்டி' கொண்டு வருவேன் என்று. எண்ணெய் கொண்டு வந்து விளக்கெரிப்பேன் என்று நேர்ந்து வைத்தனர். "வருபவள் திருமணம் ஆகாதவளாக இருக்க வேண்டும். அவளை பொஸ் விரும்ப வேண்டும்" என்பதே அவர்களது வேண்டுதலாக இருந்தது.

"அந்தோனியாருக்கு ஆளுயர மெழுகுவர்த்தி கொழுத்துவேன் எங்கள் கஷ்டம் நீங்கினால்" என்று வாய்விட்டு அடிக்கடி கூறிக்கொண்டார் மிஸ்டர் ஜோசப். 4 குழந்தைகளின் தந்தை அவர். தனது குடும்பத்துக்கு என்று கோவிலில் எதுவும் செய்யாதவர். இப்போது தங்கள் 'பொஸ்' மணம் முடிக்க நேர்த்தி வைத்து இருக்கிறார்.

அந்த நாளும் வந்தது.

அன்று வழமைக்கு மாறாக எல்லோரும் வேளைக்கே வந்து சேர்ந்தனர். பத்மராணியின் வரவை ஆவலுடன் எதிர்பார்த்து வழிமேல் விழிவைத்து இருந்தனர். அவர்கள் எண்ணம் வீண் போகவில்லை.

அழகிய கவுண் அணிந்து நெற்றியில் கறுப்பு பொட்டு வைத்துக் கொண்டு கழுத்தில் தாலி இல்லாமல் சிறிய சிங்கப்பூர் செயின் மின்ன அவர்களது கனவுத் தேவதை ஆட்டோவில் இருந்து இறங்கி மெல்லவே காலடி எடுத்து வைத்து கந்தோருக்குள் வந்து சேர்ந்தாள்.

மகிழ்ச்சிக் கடலில் மிதந்த அவர்கள் அவளை வளைந்துக்கொண்டு கேள்விமேல் கேள்வி கேட்டனர். அவளுக்கு மேசை தட்டிக் கொடுக்கவும் கதிரை தூக்கிப் போடவும் முண்டியடித்தனர். அவர்களது அன்பைக் கண்டு நெகிழ்ந்து போனாள் பத்மா. அவளுக்கெங்கே தெரியப் போகிறன்றது. அவள் தங்களை 'இரட்சிக்க வந்தவள்' என்று அவர்கள் தன்னை உபசரிக்கிறார்கள் என்று.

சிறிதர் வந்து சேர்ந்ததும் அவளை உள்ளே அனுப்பி வைத்த பின்னர் அடுத்த நடவடிக்கை பற்றி யோசித்தனர். சிறிதர் அவளைக் காதலிக்காமல் விட்டால் கூட தாங்கள் முயற்சி எடுத்து இருவரையும் தூண்டி விடுவது என்றும் இருவரையும் சேர்த்துக் கதை கட்டி விடுவது என்றும் தீர்மானமாயிற்று.

சாதாரண அறிமுகத்துடன் அவள் வெளியே வந்தாள். நாளையில் இருந்து அவளுக்கான வேலைகள் பகிர்ந்தளிக்கப்பட்டு வேலைகள் சொல்லித்தரப்படும் என்று சொல்லி அனுப்பப்பட்டாள்.

"அவர்தான் எமக்குப் பெரியவர். எல்லாம் அவரிடமே கேட்டுக் கொள்ள வேண்டும். வேறு யாரிடமும் கேட்டால் அவருக்குப் பிடிக்காது. கண்டிப்பானவர் என்றாலும் எங்களிடம் அன்பாகப் பழகுவார். என்று ஆண்கள் கூற பெண்கள் ஒருபடி மேலே சென்று.

'லேட்டாக வந்தால் பயப்படக்கூடாது. நேரே அவரிடம் சென்று 'சொறி' சொன்னால் போதும். நெருங்கிப் பழகுவதுதான் அவருக்கு விருப்பம். மோட்டார் சைக்கிள் வைத்து இருக்கிறார். அடிக்கடி 'லிப்ட்' கேட்டால் போதும் எல்லாம் சாதித்து விடலாம்" என்று கூறி வைத்தார்கள்.

ஒரு கிழமைதான் சென்றிருக்கும். பத்மா இன்னும் வரவில்லை. சிறிதர் சிவப்புக் கோடு போடாமல் பச்சைக் கொடியைக்காட்டி விட்டான் சிறிதர் என்று மனதுக்குள் ஆர்ப்பரித்தனர் அனைவரும்.

பத்மா உள்ளே சென்று 'சொறிசேர் பஸ்ஸைத்தவற விட்டுவிட்டேன்" என்று கூறிவிட்டு வந்து விட்டாள்.

இரண்டாம் நாளும் இப்படியே என்றதும், சிறிதர் கூறினான். "பத்மா நீர் புதிசு என்ற படியால் நேற்று விட்டநான் டெய்லி அப்படி விடமுடியாது. மற்றவர்கள் என்னில் குறை காணுவார்கள்" என்றான்.

"எனக்கு என்றால் அவர்கள் ஒன்றும் பேசமாட்டாங்க சேர்" என்றாள் பத்மா.....

"யேஸ் பேசமாட்டாங்க பிறகு நான் அவர்களுக்கும் அப்படி விட்டுக் கொடுப்பேன் என்று. ஏன் நீர் எங்கிருந்து வருகிறீர்?

"கொட்டாஞ்சேனையில் இருந்து.....இரண்டுபஸ் மாறி வரவேணும். இந்த கிறவுட்டுக்க என்னால முண்டியடித்து ஏற முடியல்ல....அதுதான்....." என்றாள்.

"நானும் கொட்டாஞ்சேனையில் இருந்துதான் வாறநான்...."

அவளுக்கு உடனே மற்றவர்கள் கூறியது ஞாபகத்துக்கு வந்தது. "சேர் எனக்கு லிப்ட் தந்தீங்க எண்டா நானும் உங்களோட நேரத்துக்கு வந்திடுவன்...."

"தரலாம்...ஆனா....இன்னுமொரு 'ஹெல்மட்' வாங்க வேணும்..." அவனென்ன மகரிஷியா?

"தாங்க்யூ சேர். நான் இண்டைக்கே ஹெல்மட் வாங்கி எடுக்கிறன்...." என்று கூறிவிட்டுச் சென்று தன் வேலையில் மூழ்கினாள்.

மாலை போகும் போது தனது வீட்டு விலாசத்தையும் தான் அங்கு போட் பண்ணி இருப்பதையும் எத்தினை மணிக்கு ஆயத்தமாக நிற்க வேண்டும் என்பதையும் கேட்டுவிட்டே சென்றாள்.

அடுத்த நாள் காலை இருவரும் ஒன்றாகச் சென்று காரியாலயத்துக்கு முன் இறங்கியதும் அவர்கள் அதிர்ந்து போனார்கள். பெண்கள் பத்மாவைக் கட்டி முத்தம் கூடக் கொடுத்தனர் என்றால் பாருங்களேன். தங்களையும் மிஞ்சி விட்டார்கள். இனித் தங்களுக்குக் கவலை ஏதும் இல்லை என்று எண்ணிக் கொண்டனர்.

அன்றைய புதுமையான-சுகமான அனுபவம் சிறிதரை அன்று வேலை செய்ய விடவில்லை. அடிக்கடி பத்மாவைக் கூப்பிட்டுக் கதைத்துக் கொண்டிருந்தான். அடிக்கடி அவளைப் பார்க்க வேண்டும்போல் இருந்தது.

காதல் மலர்ந்தது. காலையும் மாலையும் சவாரி தொடர்ந்தது. நாட்செல்லச் செல்ல, கடைகள், கோல்பேஸ், சினிமா என்று விரிவடைந்தது. இதுவரை தன்னுள் உறங்கிக் கிடந்த ஒரு உணர்வு விழித்துக் கொண்டதை உணர்ந்தான் சிறிதர்.

சில மாதங்கள் சென்று இருக்கும். பேச்சோடு பேச்சாக 'ஏன் இன்னும் திருமணமாகவில்லை,' என்று கேட்டான் சிறிதர்.

"படிப்பில் கவனமாக இருந்தேன் அதுபற்றிக் கவலைப்படவில்லை. அம்மா சொல்லுவா நான் ருதுவான பலனின் படி எனக்குப்பத்து வருடங்களுக்குப் பிறகுதான் திருமணம் என்று...."

"இனிச் செய்யலாம் தானே"

"ஏன் கேட்கிறீர்கள்?"

"இல்ல வீட்டுக்கு எழுதப் போறன் அதுதான்"

"எழுதுறது சரி. சீதனம் கேட்கிற வேலை மட்டும் வேணாம் என்னை விரும்பினாச் செய்யுங்க வீடுவளவு இருக்கிறது நகையும் தருவினம். காசு இலட்சத்தில் இல்ல..... நான் உழைச்சுத்தாறன். நான் விரும்பினது உண்மைதான் அம்மா அப்பா கேட்கிறார்கள் என்ற கதை வரப்படாது கண்டீங்களோ....."

"சே....அதெல்லாம் நான் பார்க்கிறன்...." என்றவன் வீட்டுக்கு எழுதினான். எழுதிச் சிலநாளில் யாழ்ப்பாணம் இருந்து அம்மாவும் அப்பாவும் வந்து சேர்ந்தனர். போர்க்கொடி தூக்கினர். சாதி சரியா என்று பார்த்து ஒத்துக் கொண்டனர். சீதனம் தடையாக வந்தது.

"அதைப்பற்றி மூச்சுவிடக்கூடாது. அவர்கள் தாறதைத் தரட்டும் மற்றதை நான் பார்த்துக் கொள்ளுறன். அப்படி இல்லை எண்டால் எனக்குத் திருமணமே வேண்டாம்" என்று ஒரு பிடி பிடித்தான்.

அவனது பிடிவாதமே வென்றது.

"சரியாக சாதகத்தை வாங்கியெடு பொருத்தம் பார்ப்பம்" என்றார்கள்.

"விரும்பிய பிறகு யாரும் சாதகம் பார்ப்பார்களா? பொருத்தம் இருக்கிற படியால் தானே விருப்பமே ஏற்படுகிறது. எதுக்கும் வீட்டுக்கு எழுதி எடுத்துத் தான் தரவேணும்......" இது பத்மா.

"அவர்கள் இதற்கு ஒத்துக் கொண்டதே பெரிய காரியம். அவர்கள் விருப்பத்துக்கு நானும் ஒத்துப் போக வேண்டாமா? அதுதான் பொருத்தம் பார்க்கச் சம்மதித்தேன். அம்மாவும் அப்பாவும் போனதும் அங்கேயே கொண்டு போய் கொடுக்கச் சொல்லி எழுது..."

அவனுக்குத் தெரியுமா இப்படி தலையில் இடிவிழுமென்று. சில நாட்களில் வீட்டிலிருந்து வந்த கடிதத்தில் 'அவளுக்குச் செவ்வாய் தோசம் என்றும், ஏழில் செவ்வாய் இருப்பது தாலிக்கு ஆகாது என்றும் எழுதி இருந்தார்கள்.

சிறிதருக்கு என்ன செய்வதென்றே புரியவில்லை. அவள் கேட்கும் போதெல்லாம் வீட்டில் இருந்து கடிதம் வரவில்லை என்றே தட்டிக் கழித்துக் கொண்டு வந்தான். இதை எப்படி அவளிடம் சொல்லுவான். ஆனால் அவனது நடவடிக்கைகள் அவளுக்குக் காட்டிக்கொடுக்கவே செய்தது. ஏன் முன்போல் பழகுகிறார் இல்லை என்று சந்தேகப்படத் தொடங்கினாள். வீட்டுக்கு எழுதி சிறிதரின் வீட்டுக்கு சென்று என்ன நடந்தது பொருத்தம் பார்த்தது என்று கேட்டு எழுதும் படி எழுதினாள் பத்மா.

காலங்கடந்தே வீட்டில் இருந்து கடிதம் வந்தது. "உனக்கு' ஏழில் செவ்வாய் என்று எங்களுக்குத் தெரியும். அதனால் தான் உனது திருமணம் இத்தனை தடைப்பட்டது. நாங்கள் கொடுக்கும் போதே பையனுக்குத் தோசம் ஏதும் இல்லை என்பதை அறிந்தோம் ஆகவே பொருந்தாது என்று நான் இதுபற்றிக் கவலைப்படவில்லை. ஆனால் அவருக்கு வீட்டிலிருந்து எழுதிவிட்டார்களாம். நீயும் நெருங்கிப் பழகாமல் எட்டவே இருப்பது நல்லது. செவ்வாய் தோசமுள்ள மாப்பிள்ளையாகப் பார்க்கலாம் கவலைப் படாதே" என்றிருந்தது கடிதத்தில்.

சிறிதரின் மோட்டார் சைக்கிளில் செல்வதை மெல்லவே நிறுத்திக்கொண்டாள் பத்மா. கந்தோர் பழையபடி குழம்ப ஆரம்பித்தது. இவர்களது நடவடிக்கையால் ஏன் என்பது விளங்க வில்லை. இப்போது மீண்டும் அதிக நேரம் இருக்கத் தொடங்கினான் சிறிதர். இருவரும் சிரித்துப் பேசும் கலகலப்பும் அற்றுப் போய்விட்டது.

காதலரின் ஊடல் என்றுதான் முன்னர் எண்ணினார்கள். ஆனால் அது முறிவிற்கே வந்து நிற்பது அவர்களுக்குத் தெரியாது.

பத்மா இறுதி முடிவை அறிய விரும்பினாள்.

'வெறி சொறி' பத்மா. நான் என்ன செய்ய? இதற்கு நான் அம்மா அப்பாவை சம்மதிக்க வைக்க முடியாதே? காதலித்தது உண்மைதான். ஆனால் நான் வாழ விரும்புகிறேன். உன்னை மணப்பதால் எனக்கு அந்தப் பாக்கியம் இல்லாமல் போகலாம். பிளீஸ் லவ் மீ எலோன்.

"நீங்க மட்டும் வாழ விரும்புறீங்க. ஆனா நானும் வாழ வேண்டும் என்பதைப் பற்றி ஏன் சிந்திக்க மறுக்கிறீங்க? உங்களுக்கு நானா எமன்? ஏன் எனக்கு நீங்க எமனாக இருக்க முடியாது? செவ்வாய் தோசம் என்றால் எப்படி எமக்கு மனப்பொருத்தம் ஏற்பட்டது. இனியும் நான் வேறு ஆடவனுடன் வாழ முடியுமா? உங்களுடன் வாழ்ந்ததை என்னால் மறக்க முடியும் என்று நினைக்கிறீர்களா? நோ....நெவர்...."என்று கூறிவிட்டுச்சென்றவள்தான்.

அடுத்த நாள் ஒரு கிழமை லீவு கேட்டுக் கடிதம் வந்திருந்தது. சிறிதரும் நிம்மதி இழந்து தவித்தான். அவளை ஏற்றுக் கொள்ளவும் முடியவில்லை. அவனது உள்ளத்தில் ஏற்பட்ட பாதிப்பு அவனைத் தடுத்தது.

பத்மா அறையில் அடைந்து கிடந்தாள். இரண்டு மூன்று நாட்களாக அவளது மூளையில் புகுந்த இராட்சதன் அவளது மூளையைச் சின்னாபின்னப்படுத்திக் கொண்டிருந்தான்.

செவ்வாயே நீ என்ன செய்வாயோ? நானா அவருக்கு எமனாக வந்தேன். இப்போது அவரேயல்லவா எனக்கு எமனாக வந்து இருக்கிறார். இதற்கு ஊரவர் என்ன சொல்லப் போகிறார்கள்?

செவ்வாய் தோசத்தைக் காட்டி என்னையும் அவரையும் சேரவிடாமல் தடுத்த அவர்கள் மீதே இப்பழிபோய்ச் சேரட்டும். வேற்றுமதத்தில் இந்தச் செவ்வாய் தோசம் ஏன் எந்தப் பாதிப்பையும் ஏற்படுத்த வில்லை. அது தமிழர்களை மட்டும் தானா பாதிக்க வேண்டும்? என்றெல்லாம் எண்ணியபடி கிடந்தாள் பத்மா.....

அடுத்த நாள் காலை அவள் எழுந்திருக்கவே இல்லை. அவள் கதவு உடைத்து திறக்கப்பட்டது. அவள் தற்கொலை செய்திருந்தாள்? இப்போது என்ன சொல்லப் போகிறார்கள்? செவ்வாய் தோஷம் யாருக்கு எமன்? அவள் கணவனுக்கா? இல்லை கணவனாக வந்தவனே காலனாக கவர்ந்து சென்று விட்டானே.

என்ன சொல்லப் போகிறீர்கள்.

**(உண்மை கலந்த கற்பனை)**

# நீங்களும் தைக்கலாம்

## குழந்தைச் சட்டை


திருமதி
உமா மனோகரன்

**தேவையான அளவுகள்**

| | |
|---|---|
| நீளம் | 20" |
| முன்பக்க கழுத்தாழம் | 1 3/4" |
| கழுத்தகலம் | 1 1/2" |
| பின்பக்க கழுத்தாழம் | 3/4" |
| தோள் அளவு | 1 3/4" |
| தையல்விடுவெளி | 1/2" |

**வரையும் முறை:-**

20" அகலமும் 20" நீளமும் கொண்ட சதுரத்தினை வரைந்து A,B,C,D, எனப் பெயரிடுக. இச் சதுரத்தினை முக்கோண வடிவாக மடிப்பதைக் குறிப்பதற்காக A,C யை இணைக்கவும். A யில் இருந்து 9 1/2" முக்கோணத்தின் கீழ் நோக்கி அளந்து அவ் அளவுகளை ஓர் வளைவான கோட்டின் மூலம் இணைத்து அவற்றுக்கு E,F எனப் பெயரிடுக. E யில் இருந்து கழுத்தகலத்திற்காக 1 1/2" அளந்து G எனப் பெயரிடுக. அதே போல் கழுத்தாழத்திற்காக E யில் இருந்து கீழ்நோக்கி 1 3/4" அளந்து தோள் அகலத்திற்காக புள்ளியிட்டு இப்புள்ளிக்கு I எனப் பெயரிடுக. இப்புள்ளியிலிருந்து படத்தில் காட்டியவாறு 3/4" அளந்து J எனப் பெயரிட்டுக் கொள்க. IJ புள்ளிக்கிடையில் சமஅளவில் ஓர் புள்ளியிட்டு K எனவும் பெயரிட்டுக் கொள்க. K புள்ளியிலிருந்து கீழ் நோக்கி 3 1/2" அளந்து L எனப் பெயரிடுக. I யில் இருந்து L ற்கும் J யில் இருந்து L ற்கும் வளைவான கோட்டினை வரைந்து முன், பின் கையினைக் கீறவும். J யில் இருந்து 1 3/4" பக்கமாக அளந்து பின்பக்கத் தோளிற்கான புள்ளியினை இட்டு M எனப் பெயரிடுக. M இல் இருந்து முன் பக்கத்திற்குப் போன்றே 1 1/2" அளந்து N எனப் பெயரிடுக. N இல் இருந்து பின்பக்க கழத்தாழத்திற்காக 3/4" கீழ்நோக்கி எடுத்து O எனப் பெயரிடுக. M,O வினை வளை கோட்டினால் இணைத்து பின் கழுத்தினைக் கீறவும். பின் கழுத்திலிருந்து திறப்பிற்காக 1/2" கூட்டி விடுக. பின்பக்க தோள் அகலத்தின் (J,M) நடுபுள்ளியை எடுத்து அதில் இருந்து 1 3/4" மேல் நோக்கி வரைந்து P எனப் பெயரிடுக. J,P,M புள்ளிகளை வளைகோட்டின் மூலம் இணைத்து பட்டியினைக் கீறவும்.





F இல் இருந்து B ற்கு இடையில் உள்ள தூரத்தினை அளந்து அதே அளவினை E இல் இருந்து கீழ்நோக்கி அளந்து புள்ளியிட்டு அப்புள்ளியையும் B யையும் வளைவான கோட்டின் மூலம் இணைத்து குழந்தைச் சட்டையின் மாதிரி உருவை வரைந்து கொள்க.

(விரும்பினால் சட்டையின் கழுத்து கை,பட்டி, சட்டையின் கீழ்பகுதி ஆகியவற்றிற்கு ஸ்கலப் செய்தால் மிகவும் அழகாக இருக்கும்.

தையல் விடுவெளிக்காக எல்லா பகுதிகளுக்கும் 1/2" விடுவெளி விடுக. கீழ் பகுதிக்கு மட்டும் 1 1/2" விடுவெளி விடுக.)

www.padippakam.com



# ரீ சீ சு னி ட்

## கைகொடுக்கும் கனவுக்காட்சி

இப்போதெல்லாம் சரித்திரப் படங்கள் தயாரிக்கப்படுவதில்லை.

மன்னன் வேசத்தில் நடிக்க வேண்டுமே என்ற குறை பிரதான நாயகர்களுக்கு இருக்குமானால் அதைத் தீர்க்க ஒரு முறை இருக்கிறது.

அதுதான் கனவுக்காட்சி.

சரத்குமாருக்கும் மன்னனாக தோன்ற ஆசை இருந்திருக்க வேண்டும்.

பாண்ட் மாஸ்டர் படத்தில் கனவுக்காட்சியில் ஹீராவோடு மன்னனாக தோன்றி ஆடிப் பாடியிருக்கிறார். ஆசை நிறைவேறியது.



ஹீரா

## அடக்கமான புதுமுகம்

ஒரு படத்தில் அறிமுகமாகி அந்தப் படமும் சுமாராக ஓடிவிட்டால் முன்னணி நாயகர்களோடு மட்டும்தான் நடிப்பேன் என்று அடம்பிடிக்கும் ரகமல்ல அவர்.

அமராவதியில் அறிமுகமாகி சின்னக்கிளி வண்ணக்கிளி படத்தில் நடிக்கும் அவர் அடக்கமாகப் பேசுகிறாராம்.

"நானே ஒரு புதுமுகம். புதுமுக ஹீரோக்களோடு நடிப்பதில் என்ன குறை" என்கிறார்.

அந்த அவர் சங்கவி. பெங்களூர் கிளி.



மறவன் பட[illegible]

## பிரியாவின் மீது பிரியம் கொண்டவர்!

பிரியா அரோரா - [illegible] சரத்குமாரின் [illegible] படத்தில் [illegible] பம்பாயின் ஜோடியாக நடிக்க [illegible] இருந்து பறந்துவந்த புறா [illegible]

பிரியா அரோராவுக்கும் [illegible] நடிகர் கரன் ரோயுக்கும் இடையே [illegible] காதலும் புகாத நெருக்கம் [illegible] பத்திரிகை [illegible]

[illegible]

"பிரியாவும் [illegible]" என்று [illegible]

[illegible]


பிரியாவுக்கு கரன் ரோய் தீபாசாஹி என்ற பெண்ணோடு [illegible]

[illegible]



பிரியா அரோரா, கரன் ரோய்







## ரேவதிக்கும் தொடக்கம்தான்!

தெலுங்கில் நூறுநாட்கள் ஓடி 3 விருதுகளை அள்ளிக் கொண்ட படம் 'அங்குரம்' 'அங்குரத்தை' தமிழில் 'புதிய தொடக்கம்' என்ற பெயரில் தயாரிக்கிறார்கள்.

சினிமாஸ்கோப்பில் உருவாகும் புதிய தொடக்கத்தில் கதாநாயகி ரேவதி. ரேவதிக்கு இது புதிய தொடக்கம். ரேவதி நடித்து மொழிமாற்றம் செய்யப்படும் முதல்படம் இதுதான். இது நன்றாகப் போனால் ரேவதி நடித்து கொட்டிக்கிடக்கும் தெலுங்குப் படங்களையெல்லாம் தூசிதட்டிக் கொண்டு வருவார்கள். தொடக்கம் எப்படியோ?



இது பம்பாய் நியூஸ்

மாதுரி தீட்சித்

## இதுதான் காதலா?

பம்பாய் படவுலகின் படுபிசியான கவர்ச்சி நட்சத்திரங்களை பட்டியலிட்டால் முதல் மரியாதை பூஜா பேடி கருத்தான்.

காதல் பற்றி பூஜாபேடி என்ன சொல்கிறார் என்று அறிய வேண்டுமா? அடுத்த பத்திக்க வாருங்கள்.

"எனக்கு ஒரு விசயத்தில் மட்டும் நம்பிக்கை இருக்கிறது. அள்ளி-அள்ளி கொடுப்பதுதான் காதல். எதிர்பார்த்து ஏங்கிக்கொண்டிருப்பதற்கு பெயர் காதல் அல்ல. என்னுடைய எல்லா உறவுகளிலும் நூறுசதவீதம் நான் வாரிக் கொடுத்திருக்கிறேன். ஒருவரைக் காதலிப்பதாக நினைத்தால் அவரைச் சுதந்திரமாக செயல்பட அனுமதிக்க வேண்டும். நிபந்தனைகளுடன் கூடிய காதல் ஜெயிக்காது. காதலரை பிடித்து வைத்துக் கொள்ளாதீர்கள். அவர் இஷ்டம் போல் இருக்க விடுங்கள். அதற்கு மேலும் அவர் உங்களை நாடி வந்தால் அதுதான் உண்மையான காதல்" இதுதான் பூஜாபேடியின் காதல் தத்துவம். ஓ.கே.தானா?

## கனவுக் காட்சிபோல் கலைந்த காதல்

பம்பாய் வெடிகுண்டு விவகாரத்தில் சஞ்சய்தத் மாட்டிக்கொள்ள அவரது காதலும் வாடிப்போனது.

மாதுரி தீட்சித் இந்தித் திரையுலகில் நம்பர் 1. முதலிடத்திற்கு முயற்சி செய்பவரும் கூட.

அவர்தான் சஞ்சய்தத்தை வளைத்துப் போட்டிருந்தார். சஞ்சய் மாட்டிக்கொள்ள காதலும் போச்சு எல்லாமும் போச்.

கனவுக்காட்சி போலவே சினிமா உலகக் காதலும் என்பதை சஞ்சய் புரிந்து கொண்டாராம்.



பூஜா பேடி

## உற்சாகமான டொனிக்

'உள்ளே வெளியே' படம் பார்த்துவிட்டு கல்லூரி மாணவி ஒருவர் பார்த்திபனுக்கு போன் செய்தாராம்.

"என்ன சார் இந்த மாதிரிப் படம் பண்ணியிருக்கீங்க" என்று செல்லமாகச் சிணுங்கினாராம்.

"மனசைத் தொட்டுச் சொல்லுங்க நீங்க அந்தச் சீனை ரசிக்கலை" என்று பார்த்திபன் கேட்டாராம்.

சிறிது நேர மௌனம். கூச்சத்தோடு அப்பெண் கூறிய பதில்-

"இல்ல...தியேட்டர்ல ரசிச்சுப் பார்க்க வெட்கமா இருக்கு. நம்ம சிரிச்சா பக்கத்துல இருக்கிறவங்க தப்பா நினைப்பாங்களோ என்று பயமா இருக்கு...மத்தபடி படம் சூப்பர்.."

பார்த்திபன் உற்சாகத்தில் இருக்கிறார்.

தனது அடுத்த படமான 'கருப்பண்ணசாமி'யில் நடிக்க பம்பாய் நட்சத்திரம் ஒன்றை இறக்குமதி செய்கிறாராம்.



சிவரஞ்சனி

## நட்சத்திரங்கள் சிந்தியவை



திராவிட இயக்கத்தினர் இருபத்தஞ்சு வருசமா தமிழ்நாட்டைக் குட்டிச்சுவராக்கி விட்டார்கள்.
-லட்சுமி-

நான் கவர்ச்சியாக நடிப்பதை பலரும் விரும்பவில்லை. என்னை பேபியாகவே பார்க்கிறார்கள்.
-அஞ்சு-

என்னை நான் என்றைக்குமே ஒரு அறிவு ஜீவியாக நினைத்தது கிடையாது.
-கமல்-

பெண்கள் மீது எனக்கு எப்போதுமே ஒரு மரியாதை இருக்கிறது.
-ரஜனிகாந்-

கார்த்திக் நடிக்கும் போது பார்க்க ஆசையாக இருக்கும். அவரது சின்ன முக அசைவுகள் பார்த்துக் கொண்டே இருக்கலாம்.
-சிவரஞ்சனி-

நான் சிகரெட் குடிப்பதை விட்டு பல ஆண்டுகள் ஆகிவிட்டன. புதிய முகத்தில் சிகரெட் குடிப்பது போல் நடித்தது ஒரு வித்தியாசத்திற்காக.
-சுரேஸ் மேனன்-

எஸ்.ஏ.சந்திரசேகர் இயக்கத்தில் 14 படங்களும், ராமநாராயணன் அவர்களிடம் 13 படங்களும் நடித்து இருக்கிறேன். பொலிஸ் வேடங்களில் இதுவரை இருபது படங்களுக்கும் மேல் நடித்து விட்டேன்.
-விஜயகாந்-

என் அழகின் காரணம் நேரத்திற்கு உறங்குவது. நேரத்திற்கு சாப்பிடுவது.
-கஸ்தூரி-

கவர்ச்சியாக நடிப்பதால் எனக்கொன்றும் வருத்தமில்லை.
-சில்க்ஸ்மிதா-

நீண்ட பெயர் வைத்ததால்தான் படத்திற்கு சுலபமான விளம்பரம் கிடைத்தது.
-மன்சூர் அலிகான்-

நல்ல வில்லன் பாத்திரங்கள் கிடைத்தால் மீண்டும் வில்லனாக நடிப்பேன்.
-ஆனந்தராஜ்-

எஸ்.பி.பி [illegible]



www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்



# மினி சினி

★ ரஜனியின் வள்ளி படத்தில் திருமதி லதா ரஜனிகாந் ஒரு பாடல் பாடுகிறார். இவர் ஏற்கனவே டிக் டிக் படத்தில் ஒரு பாடல் பாடியுள்ளார்.

★ கொகுலம் படத்தில் நடித்த மலையாள நடிகர் ஜெயராமன், தற்போது மூன்று புதிய படங்களில் நடிக்க ஒப்பந்தமாகி இருக்கிறார். அவற்றில் ஒன்றை பிரபல திரைக்கதை வசனம் எழுத்தாளர் கௌசிகன் இயக்குகிறார்.

★ ரகுமான், மீனாட்சி நடித்து தெலுங்கில் வெற்றி பெற்ற ரேப்படி ரௌடி தமிழில் சின்னத் தளபதி என்று மொழிமாற்றப்பட்டு வருகிறது.

★ பாடகர் மலேசியா வாசுதேவன் பல படங்களில் வில்லனாக நடித்தவர். ஏனோ தெரியவில்லை நீண்ட காலமாகப் பட வாய்ப்புக்களின்றி இருந்தார். தற்போது மணிரத்தினத்தின் திருடா திருடாவில் நடித்து வருகிறார்.

★ வில்லனாக நடித்த பின்னர் சில படங்களில் கதாநாயகனாக நடித்தவர் ஆனந்தராஜ். பட வாய்ப்புக்கள் இல்லாதபடியால மீண்டும் வில்லனாக ராஜதுரை படத்தில் நடிக்கிறார்.

★ எஸ்.பி.பாலசுப்ரமணியம், மலேசியா வாசுதேவன் வரிசையில் பிரபல பாடகர் தீபன் சக்கரவர்த்தியும் ஒரு படத்திற்கு இசையமைக்க இருக்கிறார்.

★ நடிக நடிகையர் அரசியலில் சேருவது ஒன்றும் ஆச்சரியமான விடயம் அல்ல. இந்த லிஸ்டில் புதிதாக நடிகை லட்சுமி சேர்ந்திருக்கிறார். இவர் அத்வானி தலைமையில் இயங்கும் பாரதீய ஜனதா கட்சியில் சேர்ந்துள்ளார்.

★ பாக்கியராஜின் ராசுக்குட்டி படத்தில் நடித்த செம்புலி ஜெகன் ஒரு படத்தை இயக்க இருக்கிறார். இப்படத்தை சோலைக்குயில் படத்தைத் தயாரித்த தமிழ்மணி தயாரிக்கிறார்.

★ பழம்பெரும் நடிகை பானுமதி பெரியம்மா என்னும் படத்தினை இயக்கியிருந்தார். அடுத்ததாக லைலா மஜ்னு என்னும் படத்தை இயக்கப் போகிறார்.



...டத்தில் பிரபு

## சான்ஸ் மிஸ்ஸிங்

கார்த்திக்கும் கஸ்தூரியும் பக்கத்து வீட்டுக்காரர்கள். கார்த்திக்கோடு நடித்துவிட கஸ்தூரிக்கும் விருப்பம்தான். அப்படியிருந்தும், அதற்கு வாய்ப்பு வந்தும், வசதியான அழைப்பு வந்தும் கஸ்தூரி நடிக்க மறுத்துவிட்டார் என்றால் ...அது ஏன்?

அந்தப் படத்தில் கனகாவும் நடிக்க இருப்பதுதான் காரணம். ஈகோ பிராப்ளம்!





## தமிழுக்கு வருகிறது பகவத் கீதை

இந்த ஆண்டு இந்தியாவின் சிறந்த படமாக தேர்ந்தெடுக்கப்பட்டு தேசியவிருது பெற்ற 'பகவத்கீதா' சமஸ்கிருதப்படம்.

இப்போது அதனை தமிழில் தயாரிக்க ஒரு திட்டம் இருக்கிறது. அநேகமாக பிரபல தயாரிப்பாளர் ஜீ.வெங்கடேஸ்வரன் தமிழில் உரிமையை வாங்கலாம் என்று பேசப்படுகிறது. பேச்சுவார்த்தை நடக்கிறது.



## மீண்டும் திவ்யபாரதி?

'இளம் நெஞ்சே வா' படத்தில் பிரசாந் ஜோடியாக நடித்த திவ்யபாரதி மண்டையைப் போட்டுவிட்டதால் குழம்பிப் போயிருந்த தயாரிப்பாளருக்கு பிடிபடாத சந்தோசம்.

திவ்யபாரதியின் போட்டோஸ்ரத் கொப்பீ போன்ற ரம்பா கண்ணில் பட்டுவிட விடுவாரா தயாரிப்பாளர். மீதிப்படத்தை டூப்பைவைத்தே எடுக்கிறார்களாம்.

'ரம்பா' பைரவதீபம் என்ற தெலுங்குப் படத்திலும் நடிக்கப் போகிறார். டூப்ளிகேட்டுக்கும் மவுசு இருக்கிறது.

## நாசர் நாயகனாகிறார்

ரஜினி தனது சொந்தப்படமான வள்ளி திரைப்படத்திற்கு கதை, திரைக்கதை எழுதி கௌரவ வேடத்தில் நடிக்கிறார் என்பது தெரிந்ததே. இன்னொரு புதுச் செய்தி: கமல் தனது சொந்தப்படமான மகளிர் மட்டும் படத்தில் கதை எழுதி கௌரவ வேடத்தில் நடிக்கவுள்ளார்.

இந்தப்படத்தில் இன்னுமொரு பிரபலமும் நடிக்கவுள்ளார். கூலிக்காரன், நல்லவன் போன்ற படங்களைத் தயாரித்த கலைப்புலி தாணுதான் அந்தப் பிரபலம். தாணு ஒரு விளம்பரப் புலி. முதன் முறையாக நகைச்சுவைப்பாத்திரத்தில் நாசர் கதாநாயகனாக நடிக்க, சிங்கீதம் சீனிவாசராவ் படத்தை இயக்குகிறார்.

## சிவாஜி வேடத்தில் யார்?

தமிழில் சக்கை போடு போட்ட தேவர் மகன் படம் இந்தியில் உருவாகப்போவது தெரியும்.

சிவாஜிகணேசன் நடித்த பாத்திரங்களில் தோன்றப்போவது யார் தெரியுமா?

சிவாஜிக்கு பதிலாக திலீப்குமார். கமலுக்குப் பதிலாக அனில்கபூர்.



## குஷ்புவின் வீரன்

தமிழில் மார்க்கெட் இல்லாத போது கன்னடத்தில் குஷ்பு கவர்ச்சி காட்டி நடித்த திரைப் படங்கள் இப்போது தமிழில் மொழி மாற்றப்பட்டு வந்து கொண்டிருக்கின்றன. அந்த வரிசையில் அடுத்து வருவது வீரன். 'ரணதீர' என்ற கன்னடப் படத்தின் மொழிமாற்று படமான வீரனில் குஷ்புவுக்கு ஜோடி ரவிச்சந்திரன். இயக்குநரும் அவர்தான்.

## சரத்குமார் கவலை!

சரத்குமார் நினைப்பதெல்லாம் நடக்காமல் போவதால் வருத்தப்படுகிறார். வேடன் பெரிதாக எதிர்பார்த்து சப்பென்று போனது. இப்போது 'முன் அறிவிப்பு படம் திரைக்கு வந்திருக்கிறது. அதுவும் சரியாகப் போகவில்லையாம்.

இப்போது ஐ லவ் இந்தியா மீது நம்பிக்கை வைத்திருக்கிறார்.





...பி. வித்தியாச வேடத்தில்!

...ளிப் பாடல்களில் ...ரமில்லாமல் நடிப்பிலும் ...ரை பதித்துள்ள எஸ்.பி. ...பாலசுப்பிரமணியமும் ...யாரமான சட்டத்தரணி ...வேடத்தில் தோன்றி ...க்கவுள்ள திரைப்படம் ...' வாசல்' ஐஸ்வர்யாவும் உண்டு.



## காதோடு சொல்லுகிறோம்

இளம் கிரிக்கெட் ஆட்டக்காரர் ஒருவரோடு தமிழில் இருந்து இந்திக்கு சென்ற பதினாறு வயது நாயகி நெருக்கமாகியிருக்கிறாராம். பம்பாய் படவுலகில் இப்போது பிரபலமாகப் பேசப்படும் விடயம் அதுதானாம். முன்னர் ஒரு டென்னிஸ் ஆட்டக்காரருடன் அவர் நெருக்கமாகப் பேசப்பட்டதும் தெரிந்த விசயம்தானே.

■

மலரின் பெயர் கொண்ட நடிகையின் வீட்டிலும், பரமசிவன் பெயரைக்கொண்ட நடிகையின் வீட்டிலும் நடுச்சாமயாகம் நடப்பதாக சொல்கிறார்கள். எல்லாம் மார்க்கெட்டை பிடிக்கும் முயற்சிதான்.

■

வெளிநாடு சென்றுவந்த பிரிய நடிகை குஷி மூடில் இருக்கிறார். வந்தவுடன் உயரமான சத்திய நடிகரை அழைத்து விருந்து கொடுத்திருக்கிறார். அடுத்து அவரது சொந்தப்படத்திலும் சத்தியமாய் அவர்தான் நாயகனாம். பிரியமானவர் சுப்பர் பார்ட்டியப்பா என்கிறார் உயரமானவர்.

■

காந்த நடிகருக்கும் சகன்யமானவருக்கும் இடையே ஏற்பட்ட பிணக்கு தீர்ந்துவிட்டது. பிரபலமானவர்களை பகைத்துக்கொள்ளக்கூடாது என்று யாரோ புத்திசொல்லியிருக்கிறார்கள். இனி காந்த நடிகரோடு முன்னைவிட நெருக்கமாக நடித்து பழசையெல்லாம் மறக்கச் செய்து விடுவாராம். சர்க்கரைத் தேவனுக்கு இனி இனிப்புத்தான்.

■

பம்பாயிலிருந்து புதிய முகங்களை இறக்குமதி செய்வது பற்றி ஒரு இயக்குநர் சொன்ன அனுபவம் இது. "நன்றாக எல்லாவழியிலும் ஒத்துழைப்பார்கள். மேலும் ஒரு சேஞ்சாகவும் இருக்குமே"

■

யார் வந்து கவர்ச்சி காட்டினாலும் தன்னை அசைக்கமுடியாது என்று பூ நடிகை சவால் விடுகிறாம். இயக்குநர்களும், தயாரிப்பாளர்களும் தன் பிடியில் உள்ள துணிச்சல் பேசவைக்கிறது என்கிறார்கள்.

■

கிராமத்தனமான வேடங்களில் தன்னால் நடிக்க முடியாது என்கிறாராம் குஷ் நடிகை. மொடேர்ன் ரைப்பான வேடங்கள் என்றால் விரும்பி நடிப்பாராம். அதுதானே ஆடைக்குறைப்புக்கு வசதி.

■



சினிமா விமர்சனம்

## உழைப்பாளி

இயக்கி இருப்பவர் இன்றைய தேதியில் நட்சத்திர மதிப்புள்ள இயக்குநர் வாசு.

ரஜனியை எப்படிப் பயன்படுத்தினால் ரசிகர்களுக்குப் பிடிக்கும் என்பதைத் தவிர வேறு எதைப்பற்றியும் வாசு கவலைப்படவில்லை என்று தெரிகிறது.

அண்ணாமலைக்குப் பிறகு ரசிகர்களுக்கு முழுத்திருப்தி கொடுக்கும் அம்சங்கள் அதிகமுள்ள படம்.

நகைச்சுவை கலந்தும், சோகத்தில் உழன்றும் ரஜினி தன்னை நிலைநிறுத்தியுள்ளார்.

'நேற்று கூலியாக இருந்தேன் இன்று நடிகனாக இருக்கிறேன் நாளை "" என்று சொல்லி நிறுத்தி-சிரித்து-அந்த ஆண்டவனுக்குத்தான் அது தெரியும்" என்று ரஜனி பேசும் வசனம் முன்னொருமுறை அவர் ஒரு விழாவில் பேசிய சொந்த வசனம். சீண்டப்பட்டால் ரஜனி அரசியலுக்குள் நுழைவாரா என்ற சந்தேகம் தோன்றும் படியான வசனங்கள் அங்காங்கே தலைகாட்டுகின்றன.

ஒன்றுக்கு மூன்று நாயகிகளோடு ரஜனி ஆடுகிறார். ரூபிணியையும் பல்லவியையும் ஆடவிட்டிருக்கிறார்கள். வயதும் இல்லை. இளமையும் இல்லை. ஆடைக்குறைப்பு மட்டும் போதுமோ? இருவரையும் ஒரே அசைவில் வீழ்த்தி விடுகிறது அந்த பம்பாய் இறக்குமதி நட்சத்திரம்.

ரோஜா கட்டான உடல், போதை தரும் உதடுகள், காதல் காட்சிகளில் உச்ச பட்ச சரசங்கள் என்று தன் மார்க்கெட்டை தூக்கிச் சென்றிருக்கிறார்.

கவுண்டமணியின் நகைச்சுவை ரஜனிக்கு முன் டமார். வருகிறார் போகிறார் என்ற ரகம்.

சுஜாதா ரஜனியின் அம்மாவாக உருக்கத்தை பொழிகிறார். குறைவான வசனங்கள். முகபாவங்களே மீதி. சிறப்பான நடிகை.

ராதா ரவி, நிழல்கள் ரவி, எஸ்.எஸ் சந்திரன் வில்லன் கூட்டணி. நிழல்கள் ரவி கல்யாணராமன் கமல் பாணியில் பேசுகிறார்.

பணம் தண்ணீராய் பாய்ந்திருக்கிறது. பாடல்காட்சியில் துணை நடிகைகளை இறைத்திருக்கிறார்கள்.

இசை-இசை ராஜாதான். பாடல்கள் தவிர படத்திற்கான பின்னணி இசை மகன் கார்த்திக்ராஜா என்று போட்டுக் காண்பிக்கிறார்கள். ராஜா மகனை புகழ் ஏணியில் ஏற்றுகிறார்.

மொத்தத்தில் உழைப்பாளி ரஜனி மார்க் திரைப்படம். ரஜனி ரசிகர்களுக்கு திருப்தி நிச்சயம்.



www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

# பாப்பா முரசு

## துன்பம் வரும்போது சிரிங்க....

ராஜ துருக்கம் என்ற நாட்டில் ஒரு மன்னன் வாழ்ந்தான். அவன் பெயர் தேவநந்தன். அந்த மன்னனுக்கு ஏராளமான மந்திரிகள் இருந்தனர். அவர்களில் தயாளன் என்ற மந்திரி மிகவும் நல்லவர். புத்திசாலி. எல்லோருடனும் அன்புடனும், பண்புடனும் நடந்து கொண்டார். எனவே அந்த நாட்டு மக்களும், அவரிடம் மிகுந்த பாசமுடன் இருந்தனர்.

தயாளனுக்கு மற்ற நாடுகளிலும் நிறைய மதிப்பும், மரியாதையும் இருந்தது. இதே நிலையில் இருந்தால் மன்னரின் மிகுந்த அன்பிற்கு தயாளன் ஆளாகி விடுவார். அதே சமயம் மன்னரிடம் அவரின் செல்வாக்கு அதிகமாகி விடும் என்று மற்ற மந்திரிகள் பயந்தனர். எப்படியாவது மன்னரின் வெறுப்பிற்கு மந்திரியை ஆளாக்கி ஒழித்து விட வேண்டும் என்று முடிவு செய்தனர். அதற்காக சந்தர்ப்பத்தையும் எதிர்பார்த்து இருந்தனர்.

ஒரு முறை தயாளன் அரண்மனைக்கு அவசரமாக வந்தபோது அவரது கையிலிருந்த மோதிரம் ஒன்று நழுவி விழுந்து விட்டது. அதனைத் தயாளன் கவனிக்கவே இல்லை. ஆனால் தயாளனின் எதிரிகள் அந்த மோதிரத்தைப் பார்த்தார்கள். உடனே அதனைத் தங்கள் கையில் எடுத்து வைத்துக் கொண்டனர். பின்பு அனைவரும் கூடிப் பேசினார்கள்.

நேராக இளவரசியின் அறைக்கு அந்த மோதிரத்தை எடுத்துச் சென்றார்கள். அங்கு அதனை வைத்து விட்டு வந்து விட்டனர். பின் நேராக மன்னர் அறைக்குச் சென்று, "மன்னா நமது இளவரசியாரும், தயாள மந்திரியும் திருமணம் செய்து கொள்ளப் போவதாகப் பேசிக்கொள்கிறார்கள். இளவரசியின் அறையில் நாங்கள் மந்திரியாரைப் பார்த்தோம்." என்று கூறினார்கள்.

மன்னர் நேராக இளவரசியின் அறைக்குச் சென்றார். அங்கு மந்திரியின் மோதிரத்தைக் கண்டார். உடனே ஆத்திரமுற்றார். "இளவரசியிடம் கேட்டாலும் தயாளனை இளவரசி காட்டித் தரமாட்டார்", என மற்ற மந்திரிகள் கூறினர். உடனே மன்னர் மந்திரி தயாளனைக் கொன்று விட உத்தரவு இட்டார். ஆனால் நாட்டில் தயாளனுக்கு ஏகப்பட்ட மரியாதை இருந்ததால் திடீரென தயாளனைக் கொன்றால் நாட்டு மக்கள் கிளர்ச்சி செய்வார்கள். எனவே வேற்று நாட்டு மன்னர் உதவியுடன் தயாளனைக் கொன்று விடலாம் என மற்ற மந்திரிகள் மன்னருக்கு ஆலோசனை கூறினார்கள்.



மன்னரும் அதற்கு ஒப்புக்கொண்டார். அதன்படி ஒரு ஓலையில் "இந்த ஓலை கொண்டு வரும் மந்திரி தயாளனை உடனே சிரச்சேதம் செய்து கொன்று விடவும்," என்று எழுதினார். அதைத் தயாளனிடம் கொடுத்து பக்கத்து நாடான அஸ்வதம் நாட்டு மன்னரிடம் கொடுக்கச் சொன்னார்.

ஏதுமறியாத தயாளனும் அதனை எடுத்துக் கொண்டு அஸ்வதம் நாட்டிற்குச் சென்றார். அந்நாட்டு மன்னரிடம் தன் நாட்டு மன்னர் கொடுக்கச் சொன்ன ஓலையைக் கொடுத்தார். அதைப் படித்த அஸ்வதம் நாட்டு மன்னர் திடுக்கிட்டார். "என்ன மந்திரியாரே! இந்த ஓலையில் உமது தலையை வெட்டிக் கொன்று விடும்படியல்லவா எழுதியுள்ளது?" என்று கேட்டார். உடனே தயாளன் நடந்ததைப், புரிந்து கொண்டார். அடுத்த நிமிடம் கலகலவென சிரித்து தன்னைச் சுதாகரித்துக் கொண்டு, "ஆமாம் மன்னா! அந்த ஓலையில் எழுதி இருப்பது போல உடனே என்னைக் கொன்று விடுங்கள்," என்று கெஞ்சினார். ஒன்றும் புரியாத மன்னர், "தயாளா! நீ செய்த தவறு என்ன? எதற்காக உன்னை எங்கள் நாட்டிற்கு அனுப்பி கொல்லும்படி எனக்கு உமது மன்னர் எழுதியுள்ளார்?" என்று கேட்டார்.

உடனே தயாளன் "மன்னா அது வேறொன்றுமில்லை. எனது ஜாதகத்தில் நான் எந்த நாட்டு மண்ணில் சாகின்றேனோ அந்த நாட்டில் பன்னிரெண்டு வருடங்களுக்கு மழையே இருக்காது. மக்கள் பசி, பட்டினியால் சிரமப்பட்டு அழிவார்கள் என்று இருந்தது. அதனால்தான் நான் தனது நாட்டில் செத்துவிடப் போகிறேனே என்று பயந்து எமது மன்னர் என்னை உமது நாட்டிற்கு அனுப்பிவிட்டார்," என்று கூறினார்.

இதனைக் கேட்ட அஸ்வத நாட்டு மன்னர் தமது காவலர்களை அழைத்தார். உடனே தயாள மந்திரியை ஒரு சிறு எறும்பு கூட நமது நாட்டில் கடித்து விடாமல் சகல பாதுகாப்புடன் கூட்டிச் சென்று அவரது சொந்த நாட்டிலே விட்டுவிட்டு வரும்படி உத்தரவிட்டார்.

அதன்படி சகல பாதுகாப்புடன் தயாளன் அஸ்வத நாட்டினரால் மீண்டும் தமது நாட்டிற்கே அனுப்பப்பட்டார். விபரம் அறிந்த மன்னர் தயாளனின் அறிவை வியந்தார். அவருக்கு எதிராக மற்ற மந்திரிகள் செய்த சூழ்ச்சிகளை உணர்ந்தார். உடனே அந்த மந்திரிகளைத் தண்டித்து தயாளனை கௌரவித்தார்.

"பிள்ளைகளே! துன்பம் வரும்போது சோர்ந்து விடாமல் புத்திசாலித்தனமாக நாம் செயற்பட வேண்டும். அதுவே துன்பத்திலிருந்து தப்பிக்கும் வழி. புரிகிறதா?" ■




## நீர் யானை

நீர்யானை தண்ணீருக்குள் நீண்ட நேரம் இருந்தாலும் மூச்சை அடக்கிக் கொண்டு தண்ணீருக்குள் ஏறத்தாழ நான்கு நிமிடத்திற்கு மேல் இருக்க முடியாது. நீரில்தான் இது குட்டிபோடும். தாயின் வயிற்றிலிருந்து வெளிவந்த உடனே குட்டி நீந்தத் தொடங்கும். குட்டி பால் குடிப்பது தண்ணீரில் தான்.

செல்வன்: பௌஸர் ஸலாம்
நிவ்ரோட்
தர்கா நகர்.

## செய்து பாருங்கள்





ஒரு தடிப்பான தாளில் பென்சில் மூலம் லேசாக அழகான படம் வரைந்து கொள்ளவும். அந்தப் படத்தின் கோடுகள் மீது பசையை பிரஷ் மூலம் பூசிக்கொள்ளவும். அந்தப் பசை மீது அழகான நூல் அல்லது, கம்பளிக் கயிற்றை ஒட்டவும் ஒரு துணி வைத்து நன்கு நூலை அழுத்தி ஒட்டவும். இப்போது இடைவெளியை அழகிய வண்ணங்கள் கொண்டு நிரப்பவும். இந்தப் படத்தாளை படமாக்கி மாட்டலாம்.

## மழை பொழியும் மேகங்கள் கருமையாக காண்பதேன்

மழை முகிலை "நீருண்ட மேகம்" என்று வர்ணிக்க கேட்டிருப்பீர்கள். எல்லா மேகங்களிலும் நீர்த் திவலைகள் அடங்கியிருக்கும். எனினும் நீர் துளிகள் எண்ணிக்கை மேகத்திற்கு மேகம் வேறுபடும். மழை மேகங்கள் கருமையாகவே இருக்கும். இது ஏன் என்பது உங்களுக்கு தெரியுமா?

ஒரு பொருளின் மீது ஒளி விழும்போது அது ஒளியின் சில பகுதிகளை உறிஞ்சுகிறது. மற்றப் பகுதிகளை எதிரோலித்து காண்பிக்கிறது. பளபளப்பான பொருட்கள் நல்ல எதிரொலிப்பான்கள். ஆனால் கருமையான பொருட்களோ ஒளியின் எல்லா நிறங்களையும் உறிஞ்சிக் கொள்கின்றன என்பது தெளிவாகிறது.

சூரிய ஒளியின் பெரும்பாலான பகுதியை எதிரொலிப்பவை வெண்மேகங்கள். உறிஞ்சிக் கொள்பவை கரு மேகங்கள். மழை பெய்யப் போகும் மேகத்தில் எண்ணிக்கையற்ற நீர் துளிகள் அடங்கியுள்ளதால் அது தன்மேல் படும் சூரிய ஒளியை உறிஞ்சிக் கொள்ள வல்லது. அதனால்தான் மழை முகில்கள் கருமையாக காணப்படுகின்றன. வானத்தில் கருமேகங்கள் சூழும்போது பகலாக இருந்தாலும் வானமே இருண்டு விடுகிறது. ஏனெனில் சூரிய கிரணங்களை மேகங்கள் உறிஞ்சிக் கொள்வதால் சூரிய ஒளி பூமியை வந்தடைவதில்லை.

ஏ.எல்.ஸாஜஹான்
புதிய காத்தான்குடி-06.

## விஞ்ஞானக் கொள்கைகளும் விஞ்ஞானிகளும்

1. புவியீர்ப்புக் கொள்கை -சேர் ஐசாக் நியூட்டன்.
2. சார்புக் கொள்கை -அல்பேர்ட் ஐன்ஸ்ரைன்.
3. குவாண்டம் கொள்கை -மாக்ஸ் பிளாங்.
4. அணுக் கொள்கை -டால்ரன்.
5. புவி மையக் கொள்கை -தொலமி.
6. சூரிய மையக் கொள்கை -கொப்பணிக்கஸ்.
7. கூர்புக்கொள்கை -லாமார்க், சாள்ஸ் டாவின்.
8. உளப்பகுப்புக் கொள்கை -சிக்மன் புறோயிட்.
9. புளோஜிஸ்டன் கொள்கை -பெக்கர்.
10. சனத்தொகைக் கொள்கை -மல்தூஸ்.
11. மாக்ஸிசக் கொள்கை -கார்ள் மாக்ஸ்
12. பாரம்பரியம் பற்றிய கொள்கை -ஜோய்ச் மெண்டல்.
13. கனவுகள் பற்றிய கொள்கை -சிக்மன் புறோயிட்.
14. சடுதிமாற்றக் கொள்கை -குவியர்.
15. சமூக ஒப்பந்தக் கொள்கை-லொக்,கொப்ஸ், ரூசோ.

அழகானந்தம் அரவிந்தன்.
(கொ/விவேகானந்த கல்லூரி)

## சிறியவனின் சில துளிகள்!

சின்னஞ் சிறியவன் நான்
சிந்திக்கத் தெரிந்தவன் நான்!
சிறப்பாய் வாழ்வதற்கு
சிலதுளிகள் வரிவடிவில்!

1.கல்வியைக் கற்றறி
கவியமுதாய் இனிக்குமென்றும்!

2.சிந்தித்துச் செயற்படு
சிறப்படைய உதவுமென்றும்!


3.உண்மைதனை என்றுமுரை
உலகமுனைப் போற்றுமென்றும்!

4.கோபமதை நீக்கிவிடு
கோபுரமாய் உயர்வாயென்றும்!

5.சிரித்து வாழ்ந்துவிடு
சிறப்புறும் வாழ்வு என்றும்!

-ப. கிருபாகரன்-
ஹட்டன்.

## பறப்பவை எவை?



உலகில் பறக்கும் பிராணிகள் எவை எவை? பறவைகள் எல்லாம் பறக்கும் என்பது நமக்குத் தெரியும். ஆனால் பறவைகளைத் தவிர வேறு பல பறக்கும் பிராணிகளும் உள்ளன.

அட்லாண்டிக் பெருங்கடலிலும், இந்திய பெருங்கடலிலும் உள்ள ஒரு வகை மீன்கள் நீரின் பரப்பைக் கிழித்து ஆகாயத்தில் சிறிது தூரம் பறக்கின்றன. மரம்விட்டு மரம் தாவும் தவளைகளும் இருக்கின்றன.

மலேசியாவில் உள்ள தங்க நிறப் பாம்புகளும் மரத்திற்கு மரம் பறக்கின்றன. அவுஸ்திரேலியாவிலுள்ள பறக்கும் அணிலும், பிலிப்பைன்சிலுள்ள பறக்கும் லெமுரும் இந்தப் பட்டியலில் இடம் பெறத் தகுதியானவையே.

## கல்விக் கண்

அறிவெனும் கண்களைத் திறந்து-என்றும்
அவனி போற்ற வாழ்வழிக்கும் கல்வியே
ஆதவனின் மேன்மை அறிய-பல
அறிவியல் முறை வகுத்த கல்வியே
வரியெனும் வடிவினைக் கொண்டு-எமக்கு
வாசிப்புப் பயன் தரும் கல்வியே
வாழ்க்கை முறையிலே நாளும் -நல்
வழிகளைக் கூறிடும் கல்வியே

கற்பனைத் தேர் செலுத்தி-நிதமும்
கற்றல் முறை உருவாக்கிடும் கல்வியே
களிப்பினையும் வாழ்வில் பெற-புது
கவிகளை படைக்க வைக்கும் கல்வியே
நன்மைகள் நிலைபெற்றெங்கும்-நாட்டில்
நல் மானிடனை உருவாக்கும் கல்வியே
தீமைகள் தீர்ந்தொழிந்து-நாளை
தீர்க்க தரசிகளை அமைத்திடும் கல்வியே

செல்வன் எம்.அகிலன்
ஆண்டு 12
ஹட்டன்.

## விடுகதைகள்

1. இருவரும் ஒரு தாய்ப்பிள்ளை. இருப்பது தாறுமாறாய். இருவரும் சேர்ந்தால் உலகத்தில் உள்ளவர்கள் எல்லாம் தலை குனிபவர்கள். அது என்ன?
2. கால் இல்லை எங்கும் செல்வான். கை இல்லை எதையும் செய்வான். அவன் யார்?
3. சுருங்கினால் எனக்கு அவன் அடக்கம். விரித்தால் நான் அவனுக்கு அடக்கம். அவன் யார்?
4. வட்டவடிவழகன் வந்தான்டி காலையிலே. எட்டி நின்று பேசாமல் எங்கோ சென்றான் மாலையிலே. அவன் யார்?
5. தாகம் தீரக் குடித்திடுவான். தயக்கமின்றி ஓடிடுவான். தலைவலித்தால் நின்றிடுவான். தள்ளிவிட்டால் புறப்படுவான். அவன் யார்?
6. எழுந்து விழுந்து தாவிடும். இரவும் பகலும் இரைந் திடும். அது என்ன?
7. நான் எடுத்த படம். அடுத்தவர் பார்க்க முடியாத படம். அது என்ன?

### விடைகள்

1. கத்திரிகோல்
2. பணம்.
3. குடை.
4. சூரியன்.
5. மோட்டார் சைக்கிள்
6. கடல்.
7. கனவு.

செல்வி யமுனா ராஜரட்னம்
கொழும்பு-9.

## மேடம்: சுப நேரம்

(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | மனக்கவலை, எதிர்பாரா செலவு. | பி.ப. 5 மணி |
| திங்கள்- | காரியசித்தி, கடன்படல். | பி.ப. 2 மணி |
| செவ்வாய்- | புதிய திட்டங்கள், வெளியிடப் பிரயாணம். | பி.ப. 3 மணி |
| புதன்- | மறைமுக எதிர்ப்பு, மனக்கவலை நீங்கல். | மு.ப. 11 மணி |
| வியாழன்- | தந்தை வழியில் துக்கம், தாரசுகத்தடை. | மு.ப. 9 மணி |
| வெள்ளி- | பலவிதபேறு, மனப்பயம். | மு.ப. 10 மணி |
| சனி- | அதிகார சித்தி, கௌரவம், புகழ். | பி.ப. 2 மணி |

அதிஷ்டநாள் - செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-9

## இடபம்: சுப நேரம்

(கார்த்திகை பின் முக்கால், ரோகிணி, மிருகசீரிடத்து முன்னரை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | முயற்சி மேன்மை, பாராட்டு. | பி.ப. 4 மணி |
| திங்கள்- | பெரியோர் நட்பு, கடின உழைப்பு. | பகல் 12 மணி |
| செவ்வாய்- | வெளியூர் பிரயாணம், அந்நியர் நட்பு. | பி.ப. 3 மணி |
| புதன்- | பணவரவு, புதிய செலவுகள் அதிகரிப்பு. | காலை 9 மணி |
| வியாழன்- | தூரஇடச் செய்தியால் குழப்பம், வீண்மனஸ்தாபம். | காலை 11 மணி |
| வெள்ளி- | வாழ்க்கை உயர்வு, எதிர்பார்த்த நன்மை கிடைத்தல். | காலை 10 மணி |
| சனி- | பிள்ளைகளால் மனக்கவலை, காரியத்தடை. | காலை 8 மணி |

அதிஷ்டநாள் - வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-6

## மிதுனம்: சுப நேரம்

(மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | திரவிய லாபம், சரீரபீடை. | காலை 11 மணி |
| திங்கள்- | நன்மை விருத்தி, சத்துரு பயம். | பி.ப். 3 மணி |
| செவ்வாய்- | தனவிரயம், நிலைப்பேறு. | பி.ப. 6 மணி |
| புதன்- | சந்தோஷம், காரியதாமதம். | காலை 9 மணி |
| வியாழன்- | காரியானுகூலம், பிரயாணம். | காலை 11 மணி |
| வெள்ளி- | மறைமுக எதிர்ப்பு, பயம். | காலை 10 மணி |
| சனி- | நற்குணம், அனுகூலம். | பி.ப. 2 மணி |

அதிஷ்டநாள் - புதன், அதிஷ்ட இலக்கம்-5

## கர்க்கடகம்: சுப நேரம்

(புனர்பூசம் நான்காம் கால், பூசம், ஆயிலியம்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | சந்தோஷம், ஞாபக மறதி. | பி.ப. 3 மணி |
| திங்கள்- | பல நஷ்டம், ஸ்திரி சங்கமம். | பி.ப. 4 மணி |
| செவ்வாய்- | சிநேக விரோதம். பொருள் நட்டம். | காலை 9 மணி |
| புதன்- | பிரயாண பயம், பொருள்பேறு. | காலை 11 மணி |
| வியாழன்- | கூடிய எதிர்பார்ப்பு, மனச்சந்தோஷம். | காலை 10 மணி |
| வெள்ளி- | சுகபோகம், லட்சுமிகரம். | பி.ப. 1 மணி |
| சனி- | காரியத்தடை, கடின உழைப்பு. | பி.ப. 4 மணி |

அதிஷ்டநாள் - திங்கள், அதிஷ்ட இலக்கம்-2

## மீனம்: சுப நேரம்

(பூரட்டாதி நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | கௌரவம், தெய்வ கீர்த்தி. | காலை 9 மணி |
| திங்கள்- | பணத்தட்டுப்பாடு, கடன்பயம். | பி.ப. 2 மணி |
| செவ்வாய்- | வீண் சிரமம், காரியத்தடை. | பி.ப. 1 மணி |
| புதன்- | பொன் பொருள் இழப்பு, கவலை. | பி.ப. 3 மணி |
| வியாழன்- | பெரியோர் ஆறுதல், மனச்சந்தோஷம். | பி.ப. 2 மணி |
| வெள்ளி- | உயர்வு, எதிர்பார்த்த நன்மையுண்டு. | காலை 9 மணி |
| சனி- | செலவு மிகுதி, கடன்படல். | காலை 11 மணி |

அதிஷ்டநாள் - வியாழன், அதிஷ்ட இலக்கம்-1

## இந்த வாரம் உங்கள் பலன்

(18.07.93 முதல் 24.7.93 வரை)

சோதிட மாமணி 'தில்லை'

### கிரக சஞ்சாரம்

| | |
|---|---|
| கர்க்கடகம் | - சூரியன் |
| சிம்மம் | - செவ்வாய் |
| கன்னி | - வியாழன் |
| விருட்சிகம் | - இராகு |
| மகரம் | - சனி |
| இடபம் | - கேது |
| மிதுனம் | - புதன், வெள்ளி |

சந்திரன் கர்க்கடகம், சிம்மம், கன்னி இராசிகளில் சஞ்சரிப்பார்.

## சிம்மம்: சுப நேரம்

(மகம், பூசம், உத்தரம் முதற்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | நிலைப்பிரிவு, மனக்குழப்பம். | காலை 8 மணி |
| திங்கள்- | செய்தொழில் விருத்தி, உயர்ச்சி. | காலை 11 மணி |
| செவ்வாய்- | தனவிருத்தி, தாரசுகம். | காலை 10 மணி |
| புதன்- | புகழ், கீர்த்தி, பூமியால் இலாபம். | பகல் 12 மணி |
| வியாழன்- | இஷ்ட சித்தி, சிநேகர் கூட்டம். | பி.ப. 1 மணி |
| வெள்ளி- | கண்டத்துக்கு மேற்பட்ட நோய், கடவுள் வழிபாடு. | பி.ப. 3 மணி |
| சனி- | எதிர்பாரா செலவு, வீண் பிரயாணம். | காலை 10 மணி |

அதிஷ்டநாள் - திங்கள், அதிஷ்ட இலக்கம்-4

## கும்பம்: சுப நேரம்

(அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி முன் முக்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | துயர் நீங்கல், தூர இடத்துச் செய்தி நன்மை தரும். | காலை 10 மணி |
| திங்கள்- | மனச்சந்தோஷம், மறைமுக எதிரிகளின் தொல்லை. | பி.ப. 1 மணி |
| செவ்வாய்- | பெரியோர் சகவாசம், வீண் விரயம். | பி.ப. 3 மணி |
| புதன்- | தனதானிய லாபம், தாரசுகம். | பி.ப. 2 மணி |
| வியாழன்- | அந்நியர் உதவி, அளவுகடந்த ஆசை. | காலை 9 மணி |
| வெள்ளி- | வீண் பிரயாணம், பொருள் இழப்பு. | காலை 11 மணி |
| சனி- | அரச விரோதம், கவலை. | காலை 8 மணி |

அதிஷ்டநாள் - புதன், அதிஷ்ட இலக்கம்-5

## கன்னி: சுப நேரம்

(உத்தரத்துப்பின் முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | காரிய சித்தி, செலவு மிகுதி. | காலை 10 மணி |
| திங்கள்- | பாடாடோபம், பிரயாணம். | காலை 9 மணி |
| செவ்வாய்- | மனமகிழ்வு, செலவு. | காலை 7 மணி |
| புதன்- | தனலாபம், பிள்ளைகளால் தொல்லை. | காலை 11 மணி |
| வியாழன்- | உயர்ந்தோர் நட்பு, மனக்கலக்கம். | பி.ப. 2 மணி |
| வெள்ளி- | எடுத்த கருமம் தடை, மதிப்பு., | பி.ப. 3 மணி |
| சனி- | பணத்தட்டுப்பாடு, வெளியார் உதவி. | பி.ப. 1 மணி |

அதிஷ்டநாள் - புதன், அதிஷ்ட இலக்கம்-5

## மகரம்: சுப நேரம்

(உத்தராடத்துப் பின் முக்கால், திருவோணம் அவிட்டத்து முன்னரை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | பணவரவு, புதிய செலவு. | பகல் 12 மணி |
| திங்கள்- | துயர் அதிகம், புதிய அனுகூலம். | காலை 10 மணி |
| செவ்வாய்- | பணவரவு, உள்ளம் உவகை. | காலை 9 மணி |
| புதன்- | தேடிய பொருள் கிடைத்தல், செலவு. | காலை 11 மணி |
| வியாழன்- | பெரியோர் நட்பு, எதிர்பார்ப்பு நன்மை. | பி.ப. 1 மணி |
| வெள்ளி- | வீண் அலைச்சல், செலவு கூடுதல். | பி.ப. 3 மணி |
| சனி- | கற்றோர் கூட்டம், மனக்களிப்பு. | பி.ப. 2 மணி |

அதிஷ்டநாள் - சனி, அதிஷ்ட இலக்கம்-8

## தனு: சுப நேரம்

(மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | காரிய சித்தி, வீண் செலவு. | பகல் 12 மணி |
| திங்கள்- | கடின உழைப்பு, அந்நியர் சகவாசம். | பி.ப. 3 மணி |
| செவ்வாய்- | துயர் நீங்கும், தூர இடச்செய்தி அனுகூலம். | பி.ப. 6 மணி |
| புதன்- | பணத்தட்டுப்பாடு, உறவினர் தொல்லை. | பி.ப. 4 மணி |
| வியாழன்- | கருமங்களில் வெற்றி, வீண்வாக்குவாதம். | பி.ப. 2 மணி |
| வெள்ளி- | உறவினர் பகை, இடமாற்றம். | காலை 10 மணி |
| சனி- | மனக்குழப்பம், மறைமுக எதிர்ப்பு. | காலை 11 மணி |

அதிஷ்டநாள் - வியாழன், அதிஷ்ட இலக்கம்-4

## விருட்சிகம்: சுப நேரம்

(விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | புதிய முயற்சி, காரியானுகூலம். | பி.ப. 1 மணி |
| திங்கள்- | பெரியோர் ஆசி, திடீர் செலவு. | பி.ப. 3 மணி |
| செவ்வாய்- | கடின உழைப்பு, பணக்கஷ்டம். | பகல் 12 மணி |
| புதன்- | அந்நியர் பகை, அதிகார சித்தி. | காலை 9 மணி |
| வியாழன்- | தாரசுகம், புதிய திட்டங்கள் வகுத்தல். | காலை 11 மணி |
| வெள்ளி- | மனத்தெளிவு, மனைவியால் செலவு. | காலை 9 மணி |
| சனி- | வெளியூர் பிரயாணம், வீண் அலைச்சல். | காலை 10 மணி |

அதிஷ்டநாள் - செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-9

## துலாம்: சுப நேரம்

(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன்முக்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | கௌரவம், அந்நியர் நட்பு. | பி.ப. 2 மணி |
| திங்கள்- | துயர் நீங்கும், உதவிகள் தொடரும். | பகல் 12 மணி |
| செவ்வாய்- | கடவுள் பக்தி, காரியானுகூலம். | பி.ப. 3 மணி |
| புதன்- | பெரியோர் நட்பு, பணவரவு. | பி.ப. 5 மணி |
| வியாழன்- | உற்சாகம், முயற்சி மேன்மை. | காலை 11 மணி |
| வெள்ளி- | உயர்ந்தோர் உதவி, உள்ளக் களிப்பு. | காலை 10 மணி |
| சனி- | தவறான வழியில் செல்லல், செலவு மிகுதி. | காலை 9 மணி |

அதிஷ்டநாள் - வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-6

**ஜூலை 19- நினைவுநாள்**

# விபுலாநந்த அடிகளாரின் கனவு நனவாகுமா?

## யாழ் நூலை ஆய்வு செய்ய பல்கலைக்கழக பீடம் அமைய வேண்டும்

— துரோணன் —

முத்தமிழ் வித்தகர் அருட்திரு விபுலாநந்த அடிகளார் பூவுடல் நீத்து புகழுடம்பெய்தி 46 வருடங்கள் உருண்டோடிவிட்டன. அன்னார் பிறந்த நூற்றாண்டு இலங்கையின் பல பாகங்களிலும் கொண்டாடப் பட்டது. தமிழ்நாட்டின் தலை நகராம் சென்னையிலும் நூற்றாண்டு விழா சிறப்பாக நடைபெற்றது: இருப்பினும் தமிழுக்கும் தமிழ் நாட்டுக்கும் குறிப்பாக பாரத நாட்டுக்கும் அடிகளார் ஆற்றிய தொண்டுக்கு ஏற்றவாறு அவருக்கு அங்கு போதிய மதிப்பளிக்கப்பட்டதாகத் தெரியவில்லை.

குன்றக்குடி அடிகளார் போன்ற அறிஞர்களே விபுலாநந்த அடிகளாரிடம் மாணவர்களாக விருந்தனர். அண்ணாமலைப் பல்கலைக்கழகம் தோன்றுவதற்கும், வேற்றுமொழிப் பாடல்களையே இசைக் கச்சேரிகளில் பாடி வந்த தமிழ் நாட்டுப் பாடகர்களுக்கு தமிழிசையின் மேன்மையை உணர்த்தும் நோக்குடன் தமிழிசை மன்றம் ஏற்படுவதற்கும் முன்னோடியாகவிருந்தவர் அடிகளார்.

இராமகிருஷ்ண சபையைச் சேர்ந்து அளப்பரிய சேவையை பாரதநாட்டுக்குச் செய்திருக்கிறார். இமயமலையின் அடிவாரத்திலேயே தங்கி 'பிரபுத்த பாரதம்' எனும் மாத சஞ்சிகைக்கு ஆசிரியராகவிருந்தார். 'இராம கிருஷ்ண விஜயம்' எனும் மாசிகைக்கும் ஆசிரியர் பொறுப்பை ஏற்றார். ஏராளமான தமிழ் நூல்களை யாத்தார். எல்லாவற்றுக்கும் மேலாக பண்டைத் தமிழின் இசை மரபை, தனது வாழ்வின் 17 ஆண்டுகளை செலவிட்டு, ஆராய்ந்து யாழ் நூலை இயற்றினார். இலங்கையர் கோன் இராவணன் கையாண்ட 1000 தந்திகளையுடைய யாழ் எத்தகையதாக இருக்கும் என்பதனைக் கண்டறிந்து அத்தந்திகள் ஒவ்வொன்றும் எத்தகைய ஒலி பேதங்களை - அதிர்வு அலைகளை எழுப்பின என்பதனைத் தூய கணிதத்தின் அடிப்படையில் ஆய்ந்து வெளிப்படுத்தியவர் விபுலாநந்த அடிகளார்.

மகாகவி பாரதியாரின் விடுதலை உணர்வூட்டும் கவிதைகளை படித்தாலோ எழுதினாலோ கடும் தண்டனை அனுபவிக்க வேண்டியிருந்த வெள்ளையர் ஆட்சியின் போது அண்ணாமலைப் பல்கலைக்கழக இசைத்துறை மாணவர்களுக்கு அக்கவிதைகளை இசை அமைத்துப் பாடவைத்தார்.

ஒரு தடவை சென்னை மாநிலத்தின் வெள்ளை ஆளுநர் அண்ணாமலை பல்கலைக் கழகத்துக்கு ஒரு விழாவில் கலந்து கொள்ள வருகிறார் என்று சிதம்பர நகரமே விழாக்கோலம் பூண்டது. எங்கும் பிரிட்டிசாரின் 'யூனியன் ஜாக்' கொடி பறந்து கொண்டிருந்தது. அதே நேரம் பல்கலைக்கழக வளாகத்தின் உள்ளே அடிகளாரின் உறைவிடமான குடிலின் கூரை மீது இந்திய தேசிய காங்கிரசின் மூவர்ணக் கொடிபறந்து கொண்டிருந்தது. பொலிசாரும் அதிகாரிகளும் பல்கலைக் கழக உயர் அதிகாரிகளும் எத்தனை வேண்டியும் அக்கொடியினை அடிகளார் இறக்க மறுத்து விட்டார்.



சுவாமி விபுலானந்தருக்கு மட்டு/காரை தீவில் எழுப்பப்படும் மணி மண்டபம்

விபரீதம் நடக்கப் போகிறது என்று சகலரும் பயந்து நடுங்கிய போது அடிகளாரின் திடசித்தத்தை வெள்ளை ஆளுநரே பாராட்டினாராம்.

இலங்கையின், கிழக்கே மட்டக்களப்பு நகருக்கு தெற்கே 28வது மைலிலுள்ள காரை தீவில் 1892-மார்ச் 29ல் பிறந்த அடிகளார் ஆக 55 ஆண்டுகள் மட்டுமே உயிர் வாழ்ந்து, 1947 ஜூலை19ல் உயிர் நீத்தார்.

யாழ் நூல் என்ற ஒப்பற்ற நூலினை தமிழ் கூறும் நல்லுலகிற்குத் தருவதற்கென்றே அவதரித்தவர் போன்று, 1947 ஜூன் 5-6 ஆம் திகதிகளில் தமிழ் நாடு கும்பகோணத்துக்கருகேயுள்ள திருக்கொள்ளம் புத்தூரிலே அரங்கேற்றினார். கரந்தைத் தமிழ்ச்சங்கம் இந் நூலை வெளியிட்டது. அப்போதே சென்னை மாநிலத்தின் கல்வி அமைச்சராகவிருந்த திரு.தி.சு. அவிணாசலிங்கம் செட்டியார் நிகழ்ச்சிக்குத் தலைமை தாங்கினார்.

அரங்கேற்றம் நடைபெற்று சரியாக ஒரு மாதத்தில் அடிகளாரின் உடல் மட்டக்களப்பு சிவானந்த வித்தியாலய வளாகத்தில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

செயற்கரியதைச் செய்து அடிகளார் மறைந்து விட்டார். ஆனால் அவர் விட்டுச் சென்ற முக்கியமான பணியினை யாரும் தொடர்ந்து மேற்கொள்ளவில்லை.

**தமிழுக்கும் - தமிழ் நாட்டுக்கும் பாரத நாட்டுக்கும் அடிகளார் ஆற்றிய தொண்டுக்கு அங்கு மதிப்பளிக்கப்பட்டதாகத் தெரியவில்லை.**

அடிகளார் மூட்டிய கல்விப் பணி தொடர்கிறது. அந்நாரின் ஆந்மீக அடிப்படையிலான குருகுல வாழ்க்கை புகட்டும் பணியும் அடிகளாரின் அடிச்சுவடுகளைப் பின் பற்றிய சுவாமி நடராஜானந்தாஜி மற்றும் அவரைத் தொடர்ந்து சுவாமி ஜீவனானந்தாஜி, சுவாமி அஜராத்மானந்தாஜி ஆகியோர்களாலும் தொடர்கிறது.

அரும் பாடுபட்டு அப்பெருந்தகை அருளிய யாழ் நூலை எவரும் உரிய முறையில் ஆராயத் தலைப்படவில்லை. நுண்ணிய கணித முறைகளை அடிகளார் வகுத்துத் தந்திருப்ப தனால் இன்றுள்ள கணித மேதைகள் அதனைத் தீண்ட முடியாதிருக்கின்றனர். இதனால் தானோ என்னவோ அடிகளார் யாழ் நூலை தானே ஆங்கிலத்தில் மொழி பெயர்க்க விரும்பினார். இதனை அவிணாசலிங்கம் செட்டியார் அவர்களே பல முறை பல இடங்களில் குறிப்பிட்டார்.

யாழ் நூலை ஆராய தமிழர் களிடத்தில் இன்றுள்ள கணித ஞானம் போதாது போலும். ஆங்கிலத்தில் யாழ்நூல் மொழி பெயர்க்கப்பட்டால் நிச்சயமாக உலக ஆசான்கள் எப்படியும் ஆய்வு செய்யாமல் விடமாட்டார்கள்.

நினைவு விழாக்களை வைத்து தொண்டை வரளக்கத்தி வீண் பெருமை தேடும் அறிஞர்கள் அருட்திரு அடிகளாரின் கனவை நனவாக்கும் முயற்சியிலீடுபடுவார்களா?

அடிகளாருடன் நெருங்கிப் பழகியவர்கள் தமிழ் நாட்டின் நாட்டுக்கோட்டை நகரத்தார் சமூகத்தினர். அடிகளாரின் ஆராய்ச்சிகளுக்கும் தூண்டுகோலாய் விளங்கியவர்கள் அவர்கள். அவர்கள் மனம் வைத்தால் தமிழ் நாட்டிலும் இலங்கையிலும் யாழ் நூல் ஆய்வுக்கென உரிய பீடங்களை அமைக்கமுடியும். அடுத்த ஆண்டு நினைவு தினம் (19-7-1994) வருவதற்குள் இதற்கான வித்திடப்படுமானால் அடிகளாரின் அரைநூற்றாண்டு நினைவு நாள் வரும் போது ஏதாவது உருப்படியான காரியம் நிறைவேறும் என எதிர்பார்க்கலாம்.



சுவாமி விபுலானந்தரின் சமாதி

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்

# காலத்தை வென்ற விளையாட்டரங்கு!

விளையாட்டுப் பந்தயங்கள் நடைபெறுவதைத் தீர்மானிப்பதில் காலநிலை பெரும்பங்கு வகிக்கின்றது.

பிரமாண்டமான ஏற்பாடுகளுடன் நடத்தப்படும் முக்கிய விளையாட்டுப் பந்தயங்கள் பல, சீரற்ற காலநிலை காரணமாக தடைப்படும் சூழ்நிலைக்குள்ளாகியுள்ளன.

இதமான வெய்யில் வெளிச்சத்தில் விளையாட்டுக்கள் ஆரம்பமாகும். ஆனால் திடீரென காலநிலை ஏற்படும் போது கூட இந்த அரங்கில் இடம் பெற்றுக் கொண்டிருக்கும் விளையாட்டுக்கள் தடைப்படுவதோ அல்லது ஒத்திவைக்கப்படுவதோ இல்லை.

காலநிலையில் சீரற்ற மாற்றம் ஏற்படும் போது விளையாட்டரங்கின் மேலாக பாரிய இரும்புக் கூரைகள் தோன்ற ஆரம்பித்து விடுகின்றன. இக் கூரைகள் மைதானத்தை பாரிய கூடாரம் போன்று மூடிக் கொள்வதுடன் விளையாட்டுக்கான வெளிச்சம், காற்றோட்டம் என்பவற்றையும் இந்தக் கூரைகள் செயற்கையான முறையில் வழங்குகின்றன.



வானம் இருண்டு மழையோ அல்லது பனிப்புயலோ தோன்றிவிடும் பட்சத்தில் லட்சக்கணக்கான பார்வையாளர்கள் ஏமாற்றத்துடன் வீடு திரும்பும் சந்தர்ப்பங்கள் மேற்கு நாடுகளில் பல விளையாட்டுப் பந்தயங்களின் போது ஏற்படுவதுண்டு.

இது தவிர இன்று உலகில் பல விளையாட்டுக்கள் மின்னொளியிலும் இரவு வேளைகளில் நடத்தப்படுகின்றன. இதற்கென அதிசக்தி வாய்ந்த இரவைப் பகலாக்கும் மின் விளக்குகள் நவீன விளையாட்டரங்குகளில் பொருத்தப்பட்டுள்ளன.

ஆனால் ஜப்பானில் புக்குஓகா என்ற இடத்தில் அமைக்கப்பட்டுள்ள அதிநவீன விளையாட்டரங்கொன்று காலநிலைகளின் சவால்களைச் சமாளிக்கக் கூடிய வகையில் பிரமாண்டமான முறையில் நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

இந்த புக்குஓக்கா விளையாட்டரங்கு, ஏனைய விளையாட்டரங்குகளைப் போன்றே மைதான மற்றும் பார்வையாளர்களுக்கான இருக்கை வசதிகளைக் கொண்டுள்ளது.

ஆனால் இந்த அரங்கின் சிறப்பம்சமென்னவெனில், சீரற்ற


எனவே மழையோ, பனிப்புயலோ பெருங்காற்றோ இந்த புக்குஓக்கா அரங்கினுள் நுழைவதில்லை. கூடவே ஜப்பானில் அடிக்கடி இடம் பெறும் பூகம்பங்களுக்குக் கூட தாக்குப்பிடிக்கக் கூடிய வகையிலேயே இந்த அரங்கின் நிர்மாணம் வடிவமைக்கப்பட்டுள்ளது.

விளையாட்டுப் பிரியர்களும் எதுவித ஏமாற்றமோ அல்லது சலிப்போ இல்லாமல் விளையாட்டுக்களை எத்தகைய காலநிலையிலும் இந்த புக்குஓக்கா அரங்கில் கண்டுகளிக்கின்றனர்.

ஜப்பானின் அதிஉயர்ந்த தொழில்நுட்ப வளர்ச்சிக்கு எடுத்துக் காட்டாக இந்த அரங்கு விளங்குகின்றது. பெரும்பாலும் இரும்பினாலான வேலைப்பாடுகளைக் கொண்ட இந்த அரங்கில் 55 ஆயிரம் பார்வையாளர்கள் அமர்ந்திருக்க முடியும்.

உதைபந்தாட்டம், ஹாக்கி, உட்பட உள்ளக விளையாட்டரங்கின் கலாச்சார நிகழ்ச்சிகளையும் இந்த அரங்கில் நடத்த முடியுமென்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# நாய் சுமந்த போதை!



கடத்தல் உலகமாகிவிட்ட இந்தக் காலகட்டத்தில் கடத்தும் கருவியாக எதை எதையோ பயன்படுத்துகிறார்கள். போதை பவுடரைக் கடத்துவதற்காக கொலம்பியாவைச் சேர்ந்த ஒரு பெண் என்ன செய்திருக்கிறாள் தெரியுமா? தன் வளர்ப்பு நாயிடம் போதைப் பவுடரைக் கொடுத்து கடத்த முயற்சிக்கும் போது பாவம், போலீசில் சிக்கிவிட்டாள்!

ஆமாம்-நாயின் வயிற்றில் பொட்டலங்களாக இருந்த இரண்டு கிலோ ஹெராயினை போலீசார் தங்கள் வளர்க்கும் துப்பறியும் நாயை வைத்தே கண்டு பிடித்து வெளியேயெடுத்தனர்.

## வயது 4 இலட்சம் ஆண்டுகள்

பழமைமிக்கதைக் குறிப்பிட வேண்டுமென்றால் ஆயிரக் கனக்கான ஆண்டுகள் என்று தான் சொல்வோம். ஆனால் லட்சக்கணக்கான ஆண்டுகள் என்று சொல்ல வேண்டியிருக்கிறது ஒரு செய்தியில்.

சீனாவின் கடற்கரைப் பகுதியான ஜியாங்ஸன் தலைநகர் நாசிங்கில்-ஒரு குகையில் ஒரு மனித மண்டை ஓடு கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. இதன் ஆயுள் 4 லட்சம் ஆண்டுகளாம். தொல் பொருள் ஆராய்ச்சியாளர்கள் இப்படிக் கூறுகிறார்கள்.

# தகவல்

## ஓர் இரவும்– 28 கோடியும்

உலகின் மிகப்பெரிய கோடீஸ்வரன் புரூனே நாட்டு மன்னர்தான். வைக்க இடமில்லாமல் கரன்சிகளும்-தங்கமும், வைரமும் குவிந்து




கிடப்பதால் தாராளமனசு அந்த மன்னனுக்கு.

படத்திலே உள்ள பெண்ணுக்கு புரூனே மன்னரின் தாராளமனசு தெரியும்.

எப்படி என்கிறீர்களா? ஒரு இரவு கேளிக்கைக்காக இந்தப் பெண்கேட்ட பரிசை வாங்கிக் கொடுத்தாராம் மன்னர். அணிந்திருக்கிறாளே ஆடை. அது சாதாரண ஆடையல்ல. ஒளிவீசும் வைரங்களால் இழைக்கப்பட்ட ஆடை. பெறுமதி என்ன தெரியுமோ? நீங்கள் மூர்ச்சையாக மாட்டீர்கள் என்ற நம்பிக்கையோடு சொல்கிறோம். ஒரு 28 கோடி!

# லவ்மிஷின்

இங்கே பத்திரிகைகளில் 'மணமக்கள் தேவை' விளம்பரம் செய்து திருமணம் நிச்சயிக்கும்



முறை நடைமுறைக்கு வந்து விட்டது. இதை வைத்து எத்தனையோ திருமண சேவை இல்லங்கள் தோன்றிவிட்டன. ஆனால், ஜப்பான் நாட்டில் வேக வேகமாக முன்னேறி வருகிறது இந்த மணமக்கள் தேடும் பிரச்னை. ஆம் 'லவ்மெஷின்' என்ற ஒன்றைக் கண்டு பிடித்திருக்கிறார்கள். ஒரு பெண் தன் விவரங்களைக் குறித்து அந்த மெஷினில் நுழைத்து கட்டளைத்தைச் செலுத்தினால், அந்த மெஷின் மாப்பிள்ளைகளின் விவரங்களைக் கொண்டு வந்து நிறுத்துகிறது. அப்புறம் என்ன? தனக்குத் தேவையானவரைத் தேர்ந்தெடுத்துக் கொடுத்த அந்த மெஷினுக்கு நன்றி சொல்லிவிட்டு நாயகனை மணக்க வேண்டியதுதானே!

## பூனை வளர்க்கும் குரங்கு!




'யானை வளர்த்த வானம் பாடி' என்பதெல்லாம் பழைய கதை. இப்போது பாபூன் குரங்கொன்று பூனை வளர்க்கிறது. இதுதான் புதிய கதை.

படத்திலுள்ள பாபூன் குரங்கு அநாதையாகிவந்த பூனையை அரவணைத்து பாலூட்டி, தாலாட்டி வளர்த்து வருகிறது.

மனிதர்களுக்குள் ஈவிரக்கம் குறைந்து வரும் இக்காலத்தில் பாபூன் குரங்கே பரவாயில்லை.

# பண்டித நேரு வியந்த தமிழ்



1963ம் ஆண்டு-அப்போது இந்தியப் பிரதமராக இருந்தவர் நேரு.

அந்தக் காலகட்டத்தில் தென் இந்தியாவில் பாண்டிச்சேரி மாநிலத்தில் இந்திய கலை ஆராய்ச்சிக் கழகம் என்னும் அமைப்பு இயங்கிக் கொண்டிருந்தது. அதற்கு பண்டிதர் கந்தசாமிப்பிள்ளை தலைவராக இருந்தார். நேரு அங்கு விஜயம் செய்தபோது கந்தசாமிப்பிள்ளையிடம் சென்று "தமிழைப் பற்றி சுருக்கமாக நீங்கள் என்ன சொல்லக் கூடும்," என்றார்.

"உயர்ந்தவர்களுடைய எந்தக் கருத்தைக் கூறினாலும் அதற்கு ஒத்த கருத்தை தமிழ் மொழியில் இருந்தே நான் தரமுடியும். தங்கள் கருத்துகளுக்கும், சொற்களுக்கும் ஒத்த கருத்துக்களை கூட தமிழிலிருந்து நான் எடுத்துத் தரமுடியும்" என்றார் கந்தசாமிப்பிள்ளை.

உடனே நேரு"என்னைப் பற்றி ஏதாவது சொல்லுங்கள் பார்ப்போம்" என்பது போல தன் மார்பை விரலால் தட்டிக் காண்பித்தார்.

இதற்கு கந்தசாமிப்பிள்ளை "இப்போது உடனடியாக எனக்கு நினைவில் வருவது காந்தியடிகள் இறந்தவுடன் தாங்கள் மனமுடைந்து எழுதியவைதான்.

ஓ! இந்தியாவின் ஒளிவிளக்கே! ஓ! தேசபிதாவே!

உண்மைக்கு இங்கே தற்போது யார் உளர் என்று எழுதியிருந்தீர்கள்.

இதே போல் இராமாயணத்தில் ஒரு செய்யுள் வருகிறது. தன் தந்தை தசரதன் இறந்ததைக் கேட்டு ராமன் புலம்பியதாக கம்பர் சொல்லுவார்-

**"நந்தா விளக்கு அனைய நாயகனே!**
**நானிலத்தோர்**
**தந்தாய்!தனி அறத்தின் தாயே! தயா**
**நிலையே!**
**எந்தாய்!இகல் வேந்தர் ஏறே!**
**இறந்தனையோ!**
**அந்தோ! இனி, வாய்மைக்கு ஆர்**
**உளரோ மாற்று?**

உடனே நேரு கண்களில் ஈரம் கசிய "இது எக்காலத்து செய்யுள்" என்று கேட்டார்.

"சுமார் 800 ஆண்டுகளுக்கு முற்பட்டது" என்றார் பிள்ளை.

பின்னர் நேருவிடம் "தாங்கள் மகளுக்கு (இந்திராவுக்கு) எழுதிய கடிதம் ஒன்றில், வானத்தில் உலவுகின்ற சந்திரன் ஓர் ஆசிரியனாக உலகத்திற்கு நல்ல கருத்துக்களை போதிக்கிறான். என்று எழுதியிருந்தீர்கள் அல்லவா" என்று கேட்டார்.

நேரு அவர்கள் "ஆம்" என்று கூற, "அதே கருத்தோடு 1800 ஆண்டுகளுக்கு முன்னர் ஒரு தமிழ் புலவர்

'தேய்தல் உண்மையும், பெருகல் உண்மையும் மாய்தல் உண்மையும், பிறத்தல் உண்மையும் அறியாதோரையும் அறியக்காட்டி திங்கட்புத்தேள் திரிதரும் உலகத்து' என்று பாடியுள்ளார் எனக் கூறி அதன் பொருளை விளக்கினார்.

தமிழின் பெருமை உணர்ந்த நேரு அவர்கள்-எப்போது தமிழுக்கு என் தொண்டு வேண்டியிருந்தாலும் தங்கள் முன்வரக்காத்துக்கொண்டு இருக்கிறேன்" என்று கூறினார் நேரு.

"இதுதான் தமிழின் பெருமை" என்று கந்தசாமிப்பிள்ளை அவர்களும் மனம் மகிழ்ந்தார்.

**ஆதாரம்-'தமிழக சான்றோர்கள்'.**

# பெட்டி




இவர் யார் என்று தெரிகிறதா? ஏறினார் - இறங்கினார். மீண்டும் ஏறினார். இறங்கினார். மறுபடி ஏறக்காத்திருக்கிறார். காந்திக் குல்லாய்க்கும் இவருக்கும் எப்படி சம்பந்தம் வந்திருக்கும். இவை கேள்விகள். விடைகளாவன - இவர்தான் கலைஞர் மு. கருணாநிதி. கதை வசனம் புயலான கலைஞர் இளம் வயதில் நாடகங்களிலும் நடித்தவர். காகிதப்பூ நாடகத்தில் அன்று தோன்றிய போது காமராஜ்சிறையில் சிக்கியதுதான் இந்தப் படம்.

## அறிவித்தல்

தினமுரசு வாரமலரில் இடம்பெறும் போட்டிகளில் நீங்கள் பங்குகொள்ளும் போது- அஞ்சல் அட்டை முகப்பில் போட்டியின் பெயரைக் குறிப்பிடத் தவற வேண்டாம்.

முகவரி: தினமுரசு வாரமலர்
88/14, சோமாதேவி பிளேஸ்,
கிருலப்பனை
கொழும்பு- 05.

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

## புதுமைத் தொடர்

### அத்தியாயம்—3




கதவு தட்டப்பட மதுமிதா திகைத்தாள். நெஞ்சிலே திரண்டு அடி வயிற்றில் இடிபோல் இறங்கிய பயம் உணர்ந்தாள்.

அந்த பதட்ட நொடிகளிலும் மதுமிதாவின் முன் நின்று, அவள் தோள்களில் கைபோட்டு, பயமூச்சுக்களுக்கு ஏற்ப ஏறி - இறங்கும் அவள் அழகான மார்புகள் மேல் விழிகளால் மேய்ந்தான். மறுகணம் மதுமிதாவின் தோள்களில் இருந்து வேகமாய் இறங்கிய வலிய கரங்களால் புஜங்களில் அழுத்தி தன்னை நோக்கி இழுத்தான்.

இருக்கையில் இருந்து துவண்ட கொடிபோல அவன் இழுப்புக்கு பணிந்தது உடம்பு. மதுமிதா அவனை நோக்கி சாய, அவளை வாரித்தூக்கி ஒரே எட்டில் கட்டிலை அடைந்து, கட்டிலின் மேலே, பிணத்தின் அருகே அவளைப் போட்டான்.

உயிரற்ற சிலையாய் மதுமிதா அனைத்துக்கும் மறுப்பின்றிப் பணிந்தாள். வரமுயன்ற வார்த்தைகளும் உதட்டுக்கு வருமுன்னரே உள்ளேயே மடிந்துவிட "என்ன செய்யப்போகிறான்" என்ற பய வினா மட்டும் மனதிற்குள் ஆணி அடித்தது போல் நிலைத்து நின்றது.

மதுமிதாவை கட்டிலில் போட்டு விட்டு தன் சட்டையை கழட்டினான். அகன்ற மார்பில் அடர்த்தியான ரோமங்கள்.

சட்டையை கட்டில் மேல் வீசி விட்டு, மதுமிதாவை நெருங்கினான்.

"பயப்படாதே நான் இருக்கிறேன்" குனிந்து காதோரத்தில் மெல்லிய தொணியில் சொல்லியபடி பெட்சீற்றை எடுத்து, மதுமிதாவை படுக்க வைத்து பிணத்தையும், அவளையும் பெட்சீட்டால் மூடினான். மதுமிதாவின் கழுத்துவரை பெட்சீற்றை சரி செய்துவிட்டு

"நான் சொல்லும் வரை எழுந்திருக்காதே" என்று சொல்லி, கதவை நோக்கி விரைந்து, திறக்க.....

அங்கே யாருமே இல்லை. கதவுக்கு வெளியே தலையை நீட்டி இருபுறமும் பார்க்க கொரிடோரின் பளிங்குதரை மட்டுமே மெல்லிய வெளிச்சத்தில் வெறுமையாய் கிடந்தது.

"யாராக இருக்கும்" குழம்பிய படியே கதவை சாத்தி உள்ளே திரும்ப....இதுவரை சினுங்காமல் கிடந்த தொலைபேசி சத்தம் போட்டு அழைத்து தன்னை வந்து தொடச் சொன்னது. அடக்கமான- அழகான- சிவப்பான-நவீன தொலைபேசி.

"ஹலோ ஹு இஸ் ஸ்பீக்கிங்"

"மனுசன்தான்.ஆனால் நான் பேசவேண்டியது உன்னோடல்ல மடையனே. போனை அழகான மதுமிதாவிடம் கொடு அப்பனே"

கர கர குரலின் கட்டளைக்கு பணிந்தான். "மது உனக்குத்தான்" அழைத்தான்.

மதுமிதா அதிர்ந்தாள்.

"நான்...நான் இங்கு வருவது தெரிந்த யார் அது"

பிணத்திலிருந்து குப்பென்று வீசிய இரத்த வாடை மதுமிதாவின் வயிற்றைக் குமட்டி வாந்திக்கு வரவேற்புக் கொடுக்கத் துடித்தது.

பெட்சீற்றுக்குள் இருந்து உடம்பை விடுவித்துக் கொள்ளும் போது "அப்பாடா தப்பினோம் இந்த நாற்றத்திலிருந்து" என்று நிம்மதியாயும் இருந்தது. அடுத்த நொடியே "யார் அது போனில், என்ன இது புதுப் பிரச்சனை" என்று பயமாயும் இருந்தது.

பயத்தோடு சென்று நடுங்கும் கரத்தோடு ரிசீவரை எடுத்து,

"ஹலோ" என்றாள்.

மறுமுனையில் இருந்து கர கர குரல் வீரப்பத்தனமாக சிரித்து.....

"மெல்லிய நீலமான, மெல்லிய சாரியில் விருந்துக்கு அழைக்கும் அழகுகள் திமிற.... சும்மா சொல்லக்கூடாது மதுக்குட்டி..... உன்னை..."

"எங்கோ இருந்து என்னைக் கண்காணிக்கிறார்கள். நான் இங்கு வரப்போவது - வந்தது அனைத்தும் -அனைத்தையும் பார்த்திருக்கிறார்கள்." மதுமிதா புரிந்து கொண்டாள். புரிந்து கொண்டதால் மறுமுனை பேசியதில் பாதி செவிகளால் வாங்கப்படவில்லை.

"என்ன சத்தமே இல்லை. சித்தத்தை வேறு திசையில் திருப்பி விட்டாயா கண்ணே"

"என்னை...என்னை..."

"எப்படித் தெரியும் என்கிறாயா? தெரியும். உன் ஒவ்வோர் அசைவும் தெரியும். அசையும் போது அசைவனவும் தெரியும்."

கர கர குரலோன் ஓங்கிச் சிரித்தான். மதுமிதா மனதுக்குள் அவனை ஓங்கி அறைந்தாள்.

"கண்ணே மதுமிதா... ஒரு கொலையைச் செய்துவிட்டு எப்படி உன்னால் இப்படி அமைதியாக இருக்க முடிகிறது"

மதுமிதாவின் தலையில் இடியாக விழுந்தது அவன் கேட்டது.

"என்னது...கொலை....கொலையா..."

யெஸ். உயிர் இருக்கும் வரை அந்த உயிருக்கு ஒரு விலை இருக்கும். அந்த உயிர் இயல்பாய் போய்விட்டால் அதற்கு மரணம் என்றொரு பெயர் இருக்கும். வேண்டுமென்றே உயிர்ப் பறவை நசுக்கப்பட்டால் அதற்கு கொலை என்ற பெயரை விட வேறு என்ன பெயர் இருக்கும்"

சொல்லி நிறுத்தி-கொக்கரித்து தொடர்ந்தான்.

"இறந்து போன உன் அம்மா தனலட்சுமி, இறக்கப் போகிற உன் அப்பா கோடிஸ்வரர் வைத்தியலிங்கம் இப்படி யார் மீது வேண்டுமானாலும் அடித்து சத்தியம் செய்யலாம். கொலைதான். சுடப்பட்டு இரத்தம் கொட்டப்பட்டு, இப்போது இந்த நிமிடம் கட்டிலில் கிடத்தப்பட்டு... கொலைதான் கண்ணே கொலைதான். இதற்காக நீ தரப் போகும் விலைதான் தீர்க்கப்பட வேண்டிய பிரச்சனை"

"சத்தியமாய் எனக்கும் இதுக்கும்"

"எதுக்கும்"

"இந்தக் கொலைக்கும்"

"கொலைக்கும்"

"ஒரு..ஒரு..."

"சம்பந்தமும் இல்லை. இதுவும் மாபெரிய் சத்தியம் என்கிறாய். நூறு சதவீதமான சுத்தமான உண்மை."

மதுமிதாவுக்கு பாராங்கல்லொன்று நெஞ்சில் இருந்து விலகியது போல் இருந்தது.

அது தவறென்பதை அடுத்த கணமே அவள் உணரும்படியாய் மறுமுனையில் இருந்து மற்றொரு இடி இறங்கியது.

"நீ கொல்லவில்லை என்று உனக்கும் தெரியும். எனக்கும் தெரியும். எனக்குத் தெரிந்ததை நான் சொல்ல மாட்டேன். ஏன் எனில் எனக்கு ஒரு விலை வேண்டும். கொலை செய்தது நீ என்று ஒரு செட்டப் செய்தால்தானே அந்த விலை உயர்ந்த விலையாக இருக்கும்"

அடப் பாவி. எனக்கு.. ஒன்றுமே" அவள் பேச்சை இடையில் வெட்டி மறுமுனை சிரித்தது.

"ஒன்றுமே தெரியாது. அந்த வார்த்தையை நீ சொல்லக்கூடாது. உனக்கு என்னவெல்லாம் தெரியும் என்று எனக்குத் தெரியும். அது பழைய கதை. முதலில் புதிய கதைக்குரிய விலை. பிறகு பழைய கதைக்குரிய கணக்கு. என்ன சரிதானே"

"யார்...நீ.." குரல் திணறியது. "உனக்கு...உனக்கு நான் என்ன தீங்..தீங்கிழைத்தேன்."

எனக்கல்ல என் நண்பனுக்கு நீ இழைத்தது அகில உலக அநியாயம்."

"யார்...உன்...நண்பன்"

"பலர் வந்து தவழ்வதால் யார் எவர் என்று மறந்துவிடும் மஞ்சம் போலத்தானடி மது உனது நெஞ்சமும், வசனம் எப்படி வண்ணமயிலே".

மதுமிதாவிற்கு கோபமாய் இருந்தது. என்றாலும் எதிரி சுலபமாய் சமாளிக்கப்படக் கூடியவன் அல்ல வென்றும் புரிந்தது.

"என் கடந்த காலங்கள்... பொலிஷ் பண்ணிச் சுத்தமாய் அழித்துவிட நினைக்கும் அந்தக் கறைகள்.. நினைவுகள்... நெருடல்கள்.. எல்லாம்.. அல்லது பாதி தெரிந்தவன்தான் முகம் தெரியாத எதிரி" என்று மனசு சொன்னது.

மனசு சொன்னதை அறிந்தது போல மறுமுறை சொன்னது,

"நான் யார்.. உன்னைப் பற்றி எனக்கு எந்தளவு தெரியும் என்றெல்லாம் பிறகு யோசிக்கலாம். இப்போது நீ அங்கிருந்து வெளியேற வேண்டும். இன்னும் பத்து நிமிடத்தில் அங்கே பொலிஸ் வரும்."

"பொ .. பொலிஸ்"

"யெஸ். காக்கிக் கலரில் சீருடை அணிந்து, கையில் ஆயுதம் வைத்திருக்கும் பொலிஸ்"

கிண்டல் செய்து நகைத்தான்.

"உனக்கு என்ன வேண்டும். ஏன் இப்படி.."

"நிறுத்து. பேசுவதை விட செயல் எனக்கு முக்கியம். இது வியாபாரம். நான் கேட்பதை தர முடிந்தால் நீ சுதந்திரப் பறவை. இல்லையெனில் அடுத்த பத்தாவது நிமிடத்தில் நீ சிறைப்பறவை. பஞ்சனையில் புரண்ட மேனி கட்டாந்தரையில் கசங்கிப் போகும்."

மதுமிதாவிற்கு அங்கிருந்து முதலில் தப்பிக்கொள்வதே முக்கியமாய்ப் பட்டது.

"முதலில் இங்கிருந்து மீள்-மற்றவை பின்.. வெளியேறு உடனடியாக"என்று மூளை தந்தி கொடுத்தபடி இருந்தது. கேட்டாள்,

"சரி.. என்ன எதிர்பார்க்கிறாய்"

"இது முறை. எனக்குத் தெரியும் நீ பணியவும் தெரிந்தவள் பணிய வைக்கவும் தெரிந்தவள். உன்னிடம் எதிர்பார்க்க எத்தனையோ இருக்கிறது. எனினும் இப்போதைய எதிர்பார்ப்பு பணம்."

நினைத்தது தான். அதற்காகத் தானே கழுகு போல் துரத்துகிறார்கள்.

"எவ்வளவு"

"சொன்னால் கோபிக்கமாட்டியே"

"கோபித்தால் நீ என்ன எரியவா போகிறாய்"

"எரிய நான் மதுரையும் அல்ல. எரிக்க நீ கண்ணகியுமல்ல. எனக்குத் தேவை பத்து மில்லியன் என்று சொன்னால் பெரிதாக்ப்படும். அதனால் ஒரு கோடி"

மதுமிதா மயங்காத குறையாக அதிர்ந்தாள்.

"கொள்ளையடிக்கச் சொல்கிறாயா?"

"யெஸ். வெளியே அல்ல உள்ளே"

"என்ன சொல்லுகிறாய்"

"இன்னும் விபரமாகச் சொல்வதற்கு என் எதிரே நீ வேண்டும். ஐ மீன் இருக்க வேண்டும். போனில் பேசும் விசயமல்ல அது"

"இங்கே வரப் போகிறாயா?"

'இல்லை. நீ வரப்போகிறாய் இங்கே. இப்போதல்ல நான் சொல்லும் போது. இப்போது நீ ஒன்றே ஒன்று கண்ணே கண்ணென்று ஒரு வார்த்தை சொல்லு போதும்"

"இவன் பேச்சும் இவனும்" எரிச்சலாக, இயலாமையாக...ஓ என்று வாய்விட்டு கத்த வேண்டும் போலாக மதுமிதா பலவிதமாய் உணர்ந்தாள்.

"என்ன வார்த்தை"

"சம்மதம் என்ற ஒரே வார்த்தை. மதுமிதா யோசிக்காதே பொலிஸ் வரும் நேரம் நெருங்கி... மிகப் பக்கத்தில்"

"சரி என்று விட்டு முதலில் தப்பிக் கொள்" மூளை உத்தரவு கொடுத்தது.

"ஓ.கே...வழி நீதான் சொல்ல வேண்டும்."

"அழகான உனக்கு சொல்லித்தர கசக்குமா என்ன. ரைட். ஏமாற்றலாமோ பின் என்று நினைக்காதே. முடியாது. என் சக்தி எனக்குத் தெரியும். இப்போது வெளியேறு."

அப்போதுதான் மதுமிதாவுக்கு அந்த யோசனை வந்தது. "அப்படியானால் இங்கிருப்பவன்... இவனும்... கைப்புண்ணுக்கு கண்ணாடியா. இவன் மறுமுனைக்காரனின் ஆள்தான்." என்றாலும் மதுமிதா தெரியாதவள் போல் சொன்னாள்.

"எப்படி வெளியேறுவது இங்கே ஒரு...." சொல்லி முடிக்கு முன்னர் மறுமுனை சிரித்தது.

"புரிந்தும் புரியாதது போல் நடிப்பது உனக்குப் பிடித்த கலைதானே. அவன் என் ஆள்தான் நீ போகலாம். நாம் மீண்டும் பேசலாம்"

சொல்லிவிட்டு கட் பண்ணினான். மதுமிதா ரிசீவரை கவிழ்த்துவிட்டு திரும்ப, வெற்றுடம்போடு அவன் ஒரு மலைபோல் நின்றிருந்தான்.

மதுமிதா பேசி முடிக்கும் வரை அசையாமல் சிலையாக நின்றிருப்பான் போல் இருக்கிறது. மதுமிதாவின் ஆழமாய் வெட்டப்பட்ட ரவிக்கைகள் கொடுத்த சுதந்திரத்தில் விடுதலையாகி நின்ற இளமையின் ஒரு பாதிப் பிரதேசங்கள் மேல் வைத்த விழியை விலக்கிக் கொள்ளாமல்,

"பேசி முடித்துவிட்டாயா...பொஸ் பொல்லாதவர். கவனமாய் நடந்து கொள்..."

மதுமிதா அவன் சொன்னதை குறித்துக் கொள்வதை விட, அவன் விழிகள் தன் இளமைகளில் பட்டு படும் பாட்டை ரசித்தாள். கொஞ்சம் யோசித்தாள். அடர்ந்த ரோமக் காட்டுக்குள் கடின உடற்பயிற்சியால் உரமேறிய அவன் மார்பில் விழியோட்டினாள். இப்போது மதுமிதாவின் முறை. மதுமிதா தயாரானாள். மதுமிதா எதிரியின் பலவீனமான தருணம் கணக்கிட்டாள். தருணம் வந்தது. அது அவனால் ஏற்பட்ட தருணம்.

**-இன்னும் வரும்.**

---

## சிந்தியா பதில்கள்

எமது புதிய ஜனாதிபதி புலிகளோடு எப்போது பேச்சுத் தொடங்குவார்.

ஸாஹிரா அரூஸ்
திஹாரிய.

*தொடங்கினால் தானே தொடர்வதற்கு.*

■

நான் நினைப்பது எல்லாம் அநேகமாக நிறைவேறுவதில்லையே ஏன்?

ச.ராமஜெயம்
எட்டியாந்தோட்டை.

*நிறைவேறக்கூடியதாக நினையுங்கள். நினைப்பதோடு நில்லாமல் நடைமுறையிலும் முயலுங்கள்.*

■

சரத்தின் வேடன் குறிதவறியதற்கு என்ன காரணம்?

றிஸ்வி றியாழ்
பறகஹதெனிய.

*ரசிகர்கள்தான் காரணம்.*

■

வாழ்க்கை ஒரு போராட்டம் என்கிறார்கள் எப்படிப் போராடுவது?

செல்வி சுபாசினி வேலாயுதம்
கொழும்பு-7.

*நீங்கள் வாழ்கிறீர்கள் என்பதே எப்படியோ போராடுகிறீர்கள் என்பதற்கு சாட்சிதானே.*

■

அன்பின் சிந்தியா! இனப்பிரச்சினைக்கு எப்போது தீர்வு கிடைக்கும்.

அ.நீதிராஜா
கண்டி.

*பிரச்சினைக்குத் தீர்வுகாணக் கூடியவர்கள் தீர்வு கான உண்மையாக உழைக்கும் போது.*

■

தற்போதைய இளம் பெண்களைப் பற்றி?

தெல்தோட்டை நஸீர்
தெமடகொட.

*இளமை+இனிமை= புதுமை.*

■

மின்மினியின் சின்னச்சின்ன ஆசை பாடல் வரிகளில் உங்கள் ஆசை என்ன?

யு.ரோஸ்மேரி
வெல்லம்பிட்டிய.

*அந்த வரிகளுக்கு சொந்தமானவர் வைரமுத்து. சிறகடிக்க ஆசை. அப்படியானால் தானே உங்களையெல்லாம் ஒரு ரவுண்ட் சுற்றிப் பார்க்கலாம்.*

■

ஹலோ சிந்தியா! இலங்கையில் தமிழ் கட்சிகள் சாதித்தென்ன?

ஏ.எம். இப்திகார்
புத்தளம்.

*இரத்தம்-இரத்தம்-இரத்தம்.*

■

குஷ்புவுக்கும் - பானுப்பிரியாவுக்கும் உள்ள வித்தியாசம் என்ன?

எஸ்.யூ. சர்ஜியாபானு
ஏத்தாளை.

*பேசும் மொழி. கவரும் விழி. கவருவதற்கு நாடும் வழி. இப்படிப் பல மற்றும் பல.*

■

வாழ்க்கை என்பது?

என்.டயஸ்
கல்முனை.

*வாழ்ந்து பார்க்கத்தான்.*

■



கருணாநிதி முதலமைச்சர் ஆவாரா?

ம.ஸ்ரீகாந்தன்
ரயிகம.

*செல்வி அதற்காகத்தான் உழைத்துக் கொண்டிருக்கிறார்.*

■

காதலை எப்படி வெளிப்படுத்தலாம்?

ஜீ.ஜீவராணி
பேலியகொட.

*அனுபவம் தானே வரவேண்டும்.*

■

தமிழ் திரையுலகிற்கு கிடைத்த அறிய பொக்கிஷங்கள்?

என்.சதீஸ்வரன்
கண்டி.

*கலைப்படங்கள் என்று எடுக்கப்பட்டு பெட்டிக்குள் பத்திரமாய் சுருண்டு கிடப்பவைகள்.*

■

டியர் சிந்தியா! கப்டன் மகளில் "எந்த பெண்ணிலும் இல்லாத ஒன்று உன்னிடம் இருக்கிறது" என்று ராஜா வர்ணித்துள்ளாரே. குஷ்புவிடம் அப்படி என்னதான் உள்ளது?

எம்.எச்.எம். பாரூக்
கொலன்னாவ.

*வர்ணித்தது வைரமுத்து. வாயசைத்தது ராஜா. அதே வைரமுத்து "கவிதைக்கு பொய் அழகு" என்றும் எழுதியுள்ளாரே கவனிக்கவும்.*

■

ஹலோ சிந்தியா! உன்னை ஒன்று கேட்பேன். உண்மை சொல்ல வேண்டும். உன்னை பாடச் சொன்னால் என்ன பாடத் தோன்றும்?

கே.குமார்
வெள்ளவத்த.

*யாரிடம் கேட்கிறீர் பாட்டு. நீர் என்ன மாமனா? மச்சானா? ஹ...ஹா...ஹா...*

■

பெண்களை சீண்டும் போது அவர்கள் கண்களை மூடுவது ஏன்?

ஏ.எல்.ஸாஜஹான்
புதிய காத்தான்குடி-6.

*எல்லைமீறும் போது தடுக்கவேண்டும். அல்லது காணாதது போல் இருக்கவேண்டும்.*

■

இலங்கைக்கு அனல் மின் உற்பத்தி சிறந்ததா?

க.ம.ஹரி ராஜேந்திரன்
கல்கிசை.

*அதுதான் இனப்பிரச்சனை இருக்கிறதே ராஜேந்திரன்.*

■

எதிரியை மதிப்பவன் யார்?

சு.மா.ராஜா.
டயகம.

*உண்மையான வீரன்.*

■

சிந்தியாவை சந்திக்கலாமா?

எஸ்.தர்சினி
புத்தளம்.

*உங்கள் கேள்விக்கு பதில் சிந்திக்கவே போதவில்லை நேரம். நேரம் வரும்போது பார்க்கலாமே.*

■

காதல் பெரிதா-காமம் பெரிதா?

கு.வானதி சந்திரசேகரன்
பதுளை.

*இரண்டும் ஒன்றோடு ஒன்று சேர்ந்தது.*

■

சம்பிரதாயம் என்பது என்ன?

என். மஞ்சுளா
கல்பிட்டி.

*ஒருவேலிதான். காலம் மாறும்போது மாறும். எல்லைகள் விரியும் போது வேலிகளும் விலகி-தள்ளி புதிய வேலிகள் போடப்படும். எப்படியோ வேலிகள் தேவைதான்.*

■

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்

சிறுகதை

# சே.. இதுவும் ஒரு வாழ்க்கையா?




-இராஜ குமாரன்-

உதயன் பிறந்து மூன்று வருடங்களாகிவிட்டன. வீடு,வளவு முழுவதும் அவன் புரியும் அட்டகாசம் வார்த்தையில் அடங்காது. எந்தப் பொருளையும் ஒரே இடத்தில் இருக்க விடமாட்டான்.

தெருக்கோடியில் குடியிருக்கும் சீதாவீட்டில் உள்ள அருமையான ரோஜாச் செடியில் ஒரு துண்டை எடுத்து வந்து போன மாதம் தான் முற்றத்தில் நாட்டிவைத்து, எரு போட்டு தினசரி தண்ணீரும் வார்த்து வந்தேன். அது வளர்ந்து அழகழகான பூக்களைத்தரும்-தலையில், ஆசையோடு சூடிக் கொள்ளலாம் என்றிருந்தேன். நேற்று பகல் முன்புறம் உதயன் அழும் குரல் கேட்டு ஓடிப்போய்ப் பார்த்தேன். ரோஜாச்செடியை பிடிங்கியிருக்கிறான். முள்ளு ஒன்று அவன் கையைப் பதம்பார்த்து விட்டது. வேதனையால் துடித்த அவனின் முதுகில் நானும் ஒன்று வைத்தேன். ஆசையோடு வளர்க்கும் ரோஜாதான் எனக்கு உதயனை விட அப்போது பெரிதாகத் தெரிந்தது.

"பொறுடா அப்பா வரட்டும் உனக்கு சரியான அடிவாங்கித் தாறேன்" ஆத்திரம் மேலிட அவனைத் திட்டி விட்டு மீண்டும் மரத்தை நட்டு வைத்தேன். எனக்கு ஆத்திரம் தணியவில்லை. அவன் அழுகையை நிறுத்திவிட்டுச் சிரிக்கிறான். "ஏண்டா சிரிக்கிறா? அப்பா வரட்டும் பார்......"

அப்பா என்று கூறியதும் அவன் கன்னம் குழிவிழ மீண்டும் சிரிக்கிறான். பலத்த சப்தத்துடன் சிரிக்கிறான். அவனுக்கே சிரிப்புக்கிடமாகி விட்டேன். அப்பா என்றால் அத்தனை சிரிப்பு-ஆமாமா நான்தான் செல்லாக் காசாகிவிட்டேனே. பெற்ற பிள்ளையே நான் அதட்டினாலும் சிரிக்கிறது. இனி கொண்ட கணவனைக் கேட்க வேண்டுமா? எதைச் சொன்னாலும் சிரிப்புத்தான். பல்லு முப்பத்திரண்டும் தெரிய இளிப்பதைத் தவிர வேறு என்ன?

அவனுக்கென எடுத்து வைத்த உணவை சாப்பிட்டான்.

குழாயடிக்குச் சென்று கையை அலம்பினான். துண்டை எடுத்துத் துடைத்தான். போய் அவனுடைய படுக்கையில் சாய்ந்து கொண்டான். ரோஜாச் செடியைப் பிடுங்கிய கோபம் இன்னும் தீரவில்லை. அவர் வரும்வரை காத்திருந்தேன்.

உதயனும் எழுந்து கோப்பையிலிருந்த கோப்பியைக் குடித்தான். வீட்டிலுள்ள சகல பொருட்களையும் தலைகீழாகப் புரட்டினான். பொருட்படுத்தாமல் அவரையே எதிர்பார்த்துக் காத்திருந்தேன். மாலை 6.00 மணி. அவரும் வந்து விட்டார். கதவைத் திறந்து விட்டேன். எனக்கு முதல் உதயன் அவர் காலைக் கட்டிப்பிடித்துக் கொண்டான். தூக்கிவாரி அணைத்துக் கொண்டார்.

"அப்பா அப்பா.....அம்மா அடிச்சா"

"அடடா அப்படியா...எங்க அடிச்சா?"

"இங்கே அப்பா..."

முள்ளுக்குத்திய சிறு காயத்தைக் காட்டினான். "அப்பாடா...அம்மா முள்ளுக்கம்பாலா அடிச்சாங்க.... ஐயையோ முள்ளு உள்ளே இருக்கே! உனக்கு நோகல்லியா கண்ணு...?"

"ஊ...நோகுதப்பா...ஊ...."

எனக்கு ஆத்திரம் தான் மேலோங்கியது...

"செய்யிறதயும் செய்துபோட்டு ரோஜாமுள்ளால குத்தப்பட்டுட்டு நான் அடிச்சதாகப் பொய் சொல்லுறானே! ஏண்டா டேய் நான் முள்ளுக்கம்பாலா அடிச்சேன். உனக்கு...?"

பளார் என்று ஒன்று விட்டேன். அது அவனைத்தாக்கவில்லை. அவருடைய புயத்தில் தான் விழுந்தது.

அப்போதாவது இந்த மனுசனுக்கு ரோசம் வந்ததா? சே என்ன வாழ்க்கை இது?

எங்களுக்கும் பொருத்தம் பார்த்துத்தான் கலியாணம் நடந்தது. 'மணமக்கள் எல்லா நலன்களோடும் சிறப்பாக வாழட்டும்' என்று பஞ்சமில்லாத வாழ்த்துக்கள் குவிந்தன. இதுவும் ஒரு வாழ்க்கையா? உப்புச் சப்பில்லாத வாழ்க்கை. எனக்குச் சப்பென்று சலித்துப் போய்விட்டது.

போன மாதம் அவருடைய சிறியதாயாரின் மகளுக்கு திருமணம். ஊருக்குப் போக ஒரு மாதத்துக்கு முன்பே திட்டமிட்டிருந்தார். பரிசுப் பொருளும் வாங்கி வந்து விட்டார். போவதற்கு சகல ஆயத்தங்களும் செய்திருந்தும் புறப்படுவதற்கு முதல் நாள், நான் தலைவலி என்று படுத்துக்கொண்டேன். "நீங்கள் மட்டும் போய் வாருங்கள். நான் வரவில்லை. வேண்டுமானால் உங்கள் பிள்ளையையும் உடன் அழைத்துச் செல்லுங்கள்" என்றேன்.

"பூரணம் நீ வரமுடியாத இடத்தில் எனக்கென்ன வேலை? நானும் போகவில்லை" என்று கூறிக்கொண்டே பனடோலும் சித்தலேபாவும் ஏந்திக் கொண்டு கட்டிலருகே வந்துவிட்டார். தோல்வியைக் கண்டு துவண்டவள் போல் நானும் ஊருக்குப் புறப்பட்டேன்.

என் சினேகிதிகள் தங்கள் குடும்ப வாழ்வின் இன்ப துன்பங்களை-ஏற்றத்தாழ்வுகளை எல்லாம் வர்ணித்தார்கள். எனக்குப் பொறாமையாக இருந்தது. பொன்னி கண்ணீர் கதை கூறினாள். அவள் கணவன் பொல்லாத குடிகாரராம். நாள்தவறாமல் அடியும் உதையும் தானாம். முதுகில் அவள் கணவன் போட்ட சூட்டினால் ஏற்பட்ட காயத்தின் வடுவையும் காட்டினாள். ஒவ்வொருத்தரும் தங்கள் தங்கள் கதையை அளந்த போது என் குடும்பத்தின் கதை என்று எதைச் சொல்லுவது? எரிச்சலும் பொறாமையும் என்னைத் தின்ன பெருமூச்சு விட்டேன். அப்போது தான் மடியில் வந்து தொப்பென்று விழுந்த உதயனின் முதுகில் வைத்தேன் ஒன்று. ஓவென்று கத்தினான் எங்கிருந்தோ ஓடி வந்த அவர் மகனைத் தூக்கினார். "அம்மா அடிச்சுட்டா அப்பா...."

"அப்பிடியா கண்ணு... அழாதே... வா நான் ஐஸ்கிறீம் வாங்கித்தாறேன்." அத்துடன் மட்டுமா என்னைப் பார்த்து கண்ணடித்துவிட்டு நகர்ந்தார். அருகிலிருந்தவளுகளெல்லாம் 'களுக்'

"பாருடி! நம்ம ஆளுண்ணா நமக்குத்தான் உதை விழுந்திருக்கும். இம்....எதுக்கும் கொடுத்து வைச்சிருக்க வேணுமே!" இப்படி அங்கலாய்த்தாள் சின்னாத்தா. எனக்கு வயிறு எரிந்தது.

இரண்டு நாளில் ஊர் திரும்பினோம்: ரயிலிலும் நான் அவருடன் பேசவில்லை. வீட்டுக்கு வந்தும் 'டூ'தான். காரணத்தைக் கேட்டு முன்னும் பின்னும் திரிந்தார். சுணை கெட்ட மனிதர்.

காலையில் வழமைபோல் எழுந்து காரியங்களை முடித்தேன். உணவினை மேசையில் எடுத்து வைத்தேன். அன்று போட வேண்டிய உடைகளையும் எடுத்து வைத்துவிட்டு, உதயனைத் தேடினேன். குளியலறையில் குழாயைத் திறந்து விட்டு தொப்பட்டமாக நனைந்தபடியிருந்தான். வேறு என்ன? முதுகில் இரண்டு வைத்தேன். அவர் வேலைக்குக் கிளம்ப அதுதான் வழியனுப்பும் கீதமாக இருந்தது.

அந்த ஈரத்தோடு அவனை அணைத்து முத்தம் கொடுத்துவிட்டு கைக்குட்டையால் முகத்தைத் துடைத்துக் கொண்டு அதனையே அசைத்து டாட்டா சொல்லிவிட்டு கேட்டைத் தாண்டினார்.

மாலை வழமைபோல் வீடுதிரும்பினார். பாத்ரூம் சென்று முகம் அலம்பிக்கொண்டு சாமி அறைக்குச் சென்று திருநீறு பூசிக்கொண்டு அறையை விட்டு வெளியேறவும் நான் கோப்பியைக் கையிலெடுத்து வரவும் சரியாக இருந்தது.

"படீர்"

கோப்பிக் கோப்பை அவருடைய வயிற்றில் முட்டி நிலத்தை முத்தமிட்டது. தூள்தூளாக நொறுங்கியது. அவருடைய பாதங்களிலும் சுடுகோப்பி பட்டிருக்கிறது.

"பளார்"அவருடைய வலது கை எனது இடது கன்னத்தைப் பதம் பார்த்தது. குனிந்து அவர் காலைத்துடைத்தேனா கும்பிட்டேனா தெரியாது. கண்கள் கண்ணீரைச் சொரிந்தன. ஓடிப்போய் கட்டிலில் விழுந்து விம்மி விம்மி அழுதேன். அன்றுவரை என்மனதோடு தேக்கி வைத்திருந்த ஏக்க மெல்லாம் கரையுமட்டும் விக்கி விக்கி அழுதேன்.

அவர் வந்தார். அருகிலிருந்தார். என்னை வாரி அணைத்தார். "அடடே கன்னம் என்னமா கண்டிப் போயிருக்கு?" தடவினார். ஆறுதல் வார்த்தைகள் சொல்லச் சொல்ல எனக்கு மீண்டும் மீண்டும் ஆத்திரம்தான் தலையெடுத்தது. கொஞ்ச நேரமாவது ஆனந்தக் கண்ணீர் விட இடம் தரமாட்டார் போல இருக்கே....என்ன மனிசன் இவர்?

"இந்தாபார் பூரணம். நான் வேணுமென்று தான் நீ கோப்பி கொண்டு வரும் தருணத்தை சாமியறை கேட்டினுக்குள்ளால பார்த்தபடி நின்று, நீயும் வர நானும் வந்து உன்மேலே வேணும் என்றுதான் மோதினேன். ஒரு நாளாவது நீ அழுது-உன் சிவப்புக் கன்னம் மேலும் சிவப்பதைப் பார்க்க வேண்டும் என்று ஆசைப்பட்டேன். முரட்டுக்கை-மெதுவாகத்தான் தட்டினேன். அது உரமாகப்பட்டு விட்டதே. அழாதே அம்மா... அழாதே...."

இப்பொழுதுதான் நான் மீண்டும் தோற்றுப் போய்விட்டேன் என்பதனைக் கண்டேன்.

இந்த ஐந்து வருடங்களில் எப்போதாவது ஒரு நாள் அவருடைய கோபத்தைக் காணமாட்டோமா, அவருடைய வாயால் திட்டு வாங்கமாட்டோமா என்று எண்ணி ஏங்கினேன். அவரிடம் திட்டுவாங்குவதற்காகவே பல பிரயத்தனங்களைச் செய்தேன். ஆனால் எதுவும் பலிக்கவில்லை.

இன்றாவது திட்டுவாங்கவேண்டும் என்று கோப்பிக் கோப்பையால் வயிற்றிலிடித்தேன். திட்டுடன் மட்டுமல்லாமல் அடியும் கிடைத்தது. பூரித்துப்போனேன். வாழ்க்கையில் புனிதமானதோர் இலட்சியம் ஈடேறி விட்டதாக ஆனந்தக் கண்ணீர் விட்டேன். ஆனால் என்ன ஏமாற்றம்! என் கனவுக் கோட்டையே சிதைந்து மண்ணோடு மண்ணாகிவிட்டது. அவரே திட்டமிட்டு என்னை ஏமாற்றியிருக்கிறார். இப்பொழுது உண்மையாகவே நான் அழுகிறேன்.

# வாடைக் காற்றில்.... ........வாடிய காதலி

இலக்கிய நயம்



கலைஞர் மு. கருணாநிதி

"கண்ணல்லவோ, கனியல்லவோ-எழுதாத
பண்ணல்லவோ-என் நெஞ்சம்,

விண்ணல்லவோ; அதில் நீ
வெண்ணிலவல்லவோ! என்றென்னை

அழைத்திட்டபோது, அவன் வடித்திட்ட வார்த்தைகளோ;
அருவி தவழ்ச் சோலை அழகு மலர்க் கூட்டம்!

மதுக்குடங்கள் அழுந்தட்டும் மார்பில் என்று-அவன்
மணிக்கரத்தால் குறும்பு செய்து,

புதுச் சுவையை இதழுக்கு அளித்த போது,
புவி முழுவதும் தலைகீழாய்ச் சுழலக் கண்டேன்.

உச்சி முதல் உள்ளங்கால் வரையில் உன்னை
'இச்' சென்ற ஒலியோடு உதட்டால் சுவைக்கத்

தடையொன்று இருக்கலாமா? அன்பே!
உடையென்று அதற்குப் பேரா?-உடன்

விடை கொடுத்து அனுப்பு என்றான்--அந்தப்
படைமுகத்துப் பெரு வீரன் பேச்சுக்குப்

பதில் பேச்சுப் பேசவில்லை நானும்! அதனால்
பஞ்சு பஞ்சாய்ப் போனதுவே மஞ்சம்!

'இகல்' என்றால் 'பகை'என்று பொருளாம்;
'பகல்'வந்தால் எமக்கு 'இகல்' தானே அன்று!

"அகல் விளக்கே! ஆருயிரே!
புகல்வது கேள்; பூங்குயிலே!

போர்முனையில் வில், வேல்,வாள் எனும்
ஏர்பூட்டி வெற்றி விளைச்சல் நடத்திவிட்டு

வாடைநாள் தொடங்குமுன்னர், வடிவழகே!
ஓடைமலர் உனைக்காண ஓடிவருகின்றேன்- என

நாள்குறித்து நான் மகிழ உறுதி மொழி
வாள்மீது ஆணையிட்டு அடித்துச்

சொன்னார்.

"நாக்கு நுனியிரண்டும் பிணைந்து மீண்ட பின்னர்
வாக்குத் தவறாதீர் அத்தான்" என்று

கண்ணிரண்டின் கடை விழியும்;
மின்னுகின்ற துளிகளுடன்-அவனை

வழியனுப்பி வைத்த காட்சிக்கு;
வான்பிறை போல்
வடுக்களாய் நிலைத்துவிட்ட அவன்
நகக்குறி பற்குறியே சாட்சி!

சாட்சிகள் இத்தனை இருந்தென்ன;
சத்தியம் அத்தனை செய்தென்ன;

கோடையில் இளநீர் போன்றவளை
கூடிக் களித்திடக் கோமகனும்,

வாடைநாள் வந்தும் வரவில்லை-அவளோ
ஆடை நழுவிடப் புரளுகின்றாள்.

"பிரிந்திருக்க அவன் நாள் குறித்தபோதே,
பிடிவாதமாய் மறுத்துரைத்துத் தடுத்திருந்தால்;

**காதல் நோயால்**
எரிந்திருக்கப் போவதில்லை இந்த மேனி-அது
தெரிந்திருக்க வேண்டாமோ அப்போதே
என் கண்களுக்கு?"

**இவ்வாறு,**
தங்கச் சிலையாள் தன் கண்களைச் சினந்ததை
சங்கத் தமிழாய் இங்கே காண்போம்!

"நாண் இல மன்ற
எம்கண்ணே-நாள்நேர்பு
சினைப்பசும் பாம்பின் சூல்முதிர்ப் பன்ன
கனைத்த கரும்பின் கூம்பு பொதி அவிழ
நுண்ணுறை அழிதுளி தலை இய
தண் வரல் வாடையும்,
பிரிந்திசினோர்க்கு அழலே"

**(குறுந்தொகை: பாடல் 35
பாடியவர்: கழார்க் கீரன் எயிற்றி)**

"விழியிரண்டுக்கும் வெட்கமில்லை என்பேன்
விரல்விட்டு நாள் எண்ணி வரும் வேளைகுறித்து-அவன்
விடை கேட்ட போது

சரியென்று ஒப்பிவிட்டு; இன்று-இமய
கிரி விட்டு வழிகின்ற நதிபோல
அழுதென்ன பயன்?

குறித்த நாளுக்குள் வருவேன் என்றும்-குளிர்
வருத்தும் வேளையில் கூடியிருப்பேன் என்றும்-நீரில்

பதித்த வார்த்தைகள் நிற்காததாலே-பிரிவில்
கனத்தது நெஞ்சம்-தகித்தது காமம்!

கருக்கொண்ட பச்சைப்பாம்பின் உடல் போன்று-பருத்த
கணுக்கொண்ட கரும்பின் அரும்பு மடல் அவிழ

துகில் போல வானமங்கையின் மேலாடும்
முகில் கூட்ட மழைத்துளிகள் படைக்கின்ற

வாடையெனும் குளிர்க்காற்றால் வாடுகின்றேன்-என்
ஆடையினை அகற்றிடினும், வெப்பம் மூளும்; அவன்
அருகிருந்தால்!

**அவ்வாறு**
இல்லாமல் அவன் பிரிந்திருப்பதற்கு-என்
பொல்லாத கண்களே விடையளித்தன அன்று!

நில்லாத அருவி போல அழுவதேனோ இன்று?
கல்லாத கண்களே! கவிழ்ந்திடுக
நாணத்தால் பூமி நோக்கி!"

மொழியழகி-விழியழகி-முத்துநகைப் பேரழகி-
பொழிலழகை வெல்லுகின்ற புவியழகி;

அழுதழுது முகம் வீங்கியதால்
விழுதனைய நீர் இறங்கும் கன்னத்தில் கைவைத்துக்

"கண்களே! நாணம் கொள்க!" எனக்
கடுமையாய்ச் சொல் உதிர்த்த நிகழ்ச்சிக்குக்

கவிதை வடித்திட்ட புலவர் நெஞ்சம்
கற்பனையின் ஊற்றன்றோ!

தென்தமிழின் மணம்பரப்பும்-இளந்
தென்றல் காற்றன்றோ!

**பொருள் விளக்கம்:**
நாண் இலமன்ற=நாணமில்லாதனவாயின. நாள்நேர்பு= குறித்த நாளில் வருவதாகக் கூறியதை ஒப்புதல். நுண்ணுறை அழிதுளி= முகிலில் இருந்து கரைந்து தூவுகின்ற மழைத்துளி. பிரிந்திசினோர்க்கு அழல்= பிரிந்து சென்ற தலைவன் பொருட்டு அழுதல். கனைத்த கரும்பு=பருத்த கரும்பு

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்

# தாய் நாடு எனும் தொட்டில் பறிபோனபோது

ரசூல்கம்சதோவ்



இதுவரை கிழக்கு அரேபியாவிற்கு பல முறைசென்றிருக்கிறேன்; ஒவ்வொரு தடவையும் மனதில் புதுப்புது எண்ணங்கள் திரள திரும்புவேன்; ஆனால் 'அந்த எண்ணங்கள்' இப்போது முக்கியமல்ல; அந்த அரபுநாடுகளை விடாது கவ்வியிருக்கும் கனத்த சோகத்திற்கு அவை எந்தவிதத்திலும் பாடம் கற்பிக்க முடியாது.

"ஆ துப்பாக்கிச் சத்தம்! அங்கே ஏதோ ஆபத்து!"

நான் டாமஸ்கஸ்ஸிற்கு சென்று கொண்டிருந்தபோது, ஒரு சிறிய மாணவன் இப்படி ஆ!ஆ! என்று கிலிகொண்டு கத்தியபடி தன்சக மாணவர்களோடு வீட்டை நோக்கி ஓடிக் கொண்டிருந்தான். பார்க்கப் பரிதாபமாக இருந்தது.

இந்த நேரத்தில் எனக்கு நான் பிறந்த ஸ்தலமான டாகெஸ்தானின் ஞாபகம்தான் வருகிறது; அங்கே 'அகுல் கோக்' என்றொரு மலை; மக்களனைவருக்கும் அது பீதியைத் தருவதாக இருந்தது; ஏனென்றால் சண்டைகள் அங்கேதான் அடிக்கடி நடக்கும்.

அந்த மலையை நோக்கி எதிரிகள் முன்னேறும்போது அதிலிருந்து தீப்பந்தங்கள் மேலுயர்ந்து 'எச்சரிக்கை' விடுக்கப்படும். மக்களும் உடனே பந்தோபஸ்து தேடி ஓடுவார்கள்.

இன்று உலகின் பயம், பீதி கலந்த பார்வைகள் யாவும் மத்தியக் கிழக்கு நாடுகளின்மேல் படிந்துள்ள நிலைமையில், இந்நாடுகளை அந்த 'அகுல்கோக்' மலைக்கு நாம் ஒப்பிடலாம் அல்லவா!

இந்தக் காலத்தில் எது நடந்தாலும், எங்கே இடி அதிர்ந்தாலும் மழை எல்லோரின் தலைகளிலும் பெய்கிறது; இயற்கையின் சீற்றத்தால்தான் இப்படி நேர்கிறது என்பதில்லை. பல வருஷமாய் எழுப்பப்படும் யுத்த இடிகளின் பேரிரைச்சல்களும், செத்து விழுவோரின் ஓலங்களும்கூட இதற்கு காரணங்களாக இருக்கலாம்.

என் வரையில் உலகின் மத்திய கிழக்கு நாடுகள் தாம் என்னில் சீழ் வடியும் புண்ணாய் உறுத்திக் கொண்டிருக்கிறது.

அந்த நாடுகளில் நான் செய்த ஒவ்வொரு பிரயாணத்தைப் பற்றியும் நீண்ட கதையாக என்னால் சொல்ல முடியும்; ஆனால் இப்போது சொல்லப் போவதெல்லாம், எக்கணமும் என் ஆத்மாவை இம்சிக்கும் நினைவுகளைப்பற்றியே.

ஜப்பானின் ஹிரோஷிமாவில் என் நெஞ்சொித்த நிகழ்ச்சி நடந்தேறியதை நான் பார்த்தேன்; ஆனால் "எல் குனெய்த்ரா" நகரம் ரத்தத்தில் மிதந்த போது, சிரியா தேசத்தவரின் மரண ஓலங்கள் நினைவில் அந்த நிகழ்ச்சியை மீண்டும் ஞாபகப்படுத்தும் என்று நான் சற்றும் எதிர்பார்க்கவில்லை.

1973ல் தான் நடந்தது அது; அந்த ரம்யமான நகரம் இஸ்ரேல் கட்டவிழ்த்துவிட்ட திடீர் போரால் தரை மட்டமானது; வீடுகள் மட்டுமல்ல; கல்லறைகள், மசூதிகள், சர்ச்சுகள்யாவும் இடித்துத் தள்ளப்பட்டன;

அதன்பின் 'ஜோர்டான் நதி' புனித நீர் நிரம்பியது எனவும் எந்தப் பாவத்தையும் அதில் கழுவிக்கொள்வோம் என்றும் இஸ்ரேலியர்கள் சொல்லிக் கொண்டார்கள்.

ஆனால், அட்டூழியங்கள் பல புரிந்து, பாலஸ்தீனர்களின் நிலங்களை அபகரிக்கும் ஆக்கிரமிப்பு வெறியை கழுவிக்கொள்ள அவர்களின் நதியில் போதுமான நீரில்லையா என்ன! பாலஸ்தீனர்களை அவர்களின் சொந்த தாயகத்திலிருந்து விரட்டியடித்தார்களே! அந்த நிலங்களை இப்போது யார் வைத்துக்கொள்ளப் போகிறார்களாம்.

பெய்ரூட் நகரமே! என்னை மன்னித்துவிடு; முன்னைப்போல் கிழக்கிலேயே மிகவும் வசீகரமிக்க நகரமாய் உன்னை இப்போது என்னால் அங்கீகரிக்க முடியாது.

நாம் சந்திக்காமல் இருந்த இந்த இடைப்பட்ட வருஷங்களில் என்ன நேர்ந்தது உனக்கு?

உனது சௌகரியம் நிலவிய ஸ்தலங்களனைத்தும் சூறையாடப்பட்டுக் கிடக்கின்றன; உனது மகத்தான வசிப்பிடங்களனைத்தும் பாழ்படுத்தப்பட்டுள்ளன.

முன்னொரு சமயம், ஆசிய-ஆபிரிக்க கவிஞர்களெல்லாரும் ஒன்றுகூடி, உன்னிடத்தில் புரட்சிக் கவிதைகள் படித்தபோதிருந்த நிலைமையை, லெபனானின் அழகு களைசொட்டும் தலைநகராக விளங்கிய பெருமையை நிச்சயம் நீ திரும்பப் பெற முடியாது.

எப்போதும் பீதி, பயம், குழப்பம் யாவும் நிறைந்த, பகைமை உணர்வால் கூறுபட்டுப் போன, ஒரு நகரமாகத்தான் உன்னை இன்று என்னால்பார்க்க முடிகிறது.

பூமியை நிலைகுலையச் செய்யும் சூறைக் காற்றைப் போல் ராட்சஸத்தனமான தாக்குதல்களை நடத்தும் இஸ்ரேலியர்களால் உன் அழகின் அற்புதங்களனைத்தும் துடைத்தெறியப்பட்டுவிட்டன.

அன்று நான் லெபனானில் பாலஸ்தீனர்களின் அகதிகள் முகாமில் தங்கியிருந்தேன். அங்கிருந்த ஆண்-பெண் அனைவர் முகங்களிலும், தாளமுடியாத சோகம்; தார்மீக கோபம்; கண்ணீர்; அனைத்தும் அகற்ற முடியாத பளபளப்போடு தேங்கியிருந்தன.

அவர்களில் பலர் பெற்றோர்களை, சொந்த-சகோதரர்களை, சகோதரிகளை, குழந்தைகளை 'இழந்தவர்கள்'. இவையெல்லாம் ஆழ்ந்த வருத்தத்தை அளிக்கிற-மீட்டுத்தர முடியாத இழப்புகள்தாம்;

ஆனால் ஒருவனின் தாய்நாடு பறிபோனதை எந்த இழப்புக்கு நிகராகச் சொல்ல முடியும்? அது சகிக்க முடியாத ஒன்று; தனித்துவிடப்பட்ட அவனின்ஆவேச உணர்ச்சி அவனுள் நீண்ட காலம் அடங்கியிருக்காது.

ஒருவனின் தாய்நாடு என்பதை பூமி, செடி கொடிகள், பூக்கள், நதிகள் என்றெல்லாம் இலகுவாக சொல்லி விளக்கிவிட முடியாது; அது அவனுக்கு ரத்தமும் சதையும் போல்; இதயமும் ஆத்மாவும் போல்.

என் குழந்தைப் பருவ நாட்களில், டாகெஸ்தான் மலைப் பகுதிகளில் தண்டனையின் மிகக் கொடூரமான வடிவமொன்று வழக்கில் இருந்தது; தண்டனை இப்படித்தான்:

தாயிடமிருந்து குழந்தை உறங்கும் தொட்டிலை பிடுங்கிக் கொண்டு சென்று விடுவார்கள்; குழந்தையோ தொட்டிலின்றி தூங்காது; அழும், கதறிக் கதறி.

இன்று என் தாய் நாடான ரஷ்யாவை விட்டுப் பிரிந்து வாழும் சொற்பகால வாசத்தின் போதும் கூட என்னால் சரிவர தூங்க முடிவதில்லை.

ஆனால் தாய்நாடு எனும் தொட்டிலே பறிபோன நிலையில் பரிதவிக்கும் மக்களைப் பற்றி என்ன சொல்லலாம்?

சிரியா தேசத்தவர் தங்கள் பூர்வீக நாட்டின் ஒரு பகுதியான 'கோலன் குன்றை' பறிகொடுத்த பின்னாலும், பல்லாயிரக் கணக்கான அகதிகள் அவர்களது சொந்த வீடுகளின் வாசலைக்கூட காண முடியாமல் இருக்கிற சூழ்நிலையிலும், அவர்கள் மௌனத்துள் மூழ்கிப் போவார்களா? வாய்மூடி வாழ்ந்து முடிப்பார்களா? அப்படியானால் அதைவிட எதிர்காலத்திற்கு எதிரான அநியாயச் செயல் வேறென்ன இருக்க முடியும்!

நெரிசல் மிகுந்த பாலஸ்தீனர்களது மருத்துவமனை ஒன்றில் இஸ்ரேலியர்களின் தொடர்ச்சியான குண்டுவீச்சுகளால் பாதிக்கப் பட்டவர்கள் அனுமதிக்கப்பட்டிருந்தார்கள்.

அங்கிருந்த ஒருவரிடம் "இப்போது எப்படி உணர்கிறீர்கள்" என்று நலம் விசாரித்தேன்; வலியால் துடித்துக் கொண்டிருந்த போதிலும் அவர் உறுதியுடன் பேசினார்.

"குதிரையை இழந்த யாரும் சாட்டையை நினைத்து அழமாட்டார்கள்; சக மனிதர்கள் படுகிற அவஸ்தைக்கு முன்னால் என் தேக வலி ஒரு அற்ப விஷயம்; அலங்கோலமாகிக் கிடக்கும் மொத்த பாலஸ்தீனத்திற்கும் முன்னால் எனது ரத்தக்காயங்கள் வெகு சாதாரணமானவையே! ஒருகால், இப்படியே புது உதயத்தைக் காணாமலேயே நான் இறந்துபோகலாம். ஆனால் விடுதலைச் சூரியன் விரைவில் என் தாய்த்திரு நாட்டில் எழுவான் - ஒளி பரப்புவான்" என்ற வார்த்தைகளால் அவர் தன் தேசப்பற்றின் உச்சத்தைக் காட்டினார்.

நான் தங்கின பாலஸ்தீனரது முகாமொன்றில் நிறையகுழந்தைகள்இருந்தார்கள்; பாவம், நடந்து முடிந்த போர்களில் அவர்களின் பெற்றோர்கள் கொல்லப்பட்டுவிட்டார்கள். அந்த அனாதைக் குழந்தைகளுக்கு அங்கு அமைக்கப்பட்ட பள்ளி ஒன்றில் சித்திரப் பயிற்சி அளிக்கப்படுவதை நான் பார்த்தேன்.

முகாமில் இருந்த பலருக்கு, அவர்களின் உறவினர்களது முகங்களைக்கூட அடையாளம் கண்டுகொள்ள முடியவில்லை; ஆனால் அந்த 'குழந்தை-ஓவியர்கள்' தூரிகைகளால்தடவி தடவிச்சரியாக முகம் கண்டு பிடித்தார்கள்; மேலும் வாழ்நாளில் பார்த்தேயிராத தங்களின் ஜென்ம பூமியை அவர்களது கற்பனை ஓவியங்களால் காட்சியளிக்கச் செய்தார்கள்.

இரக்கமற்ற வாஷிங்டனின் யுத்த வெறியர்கள், பெற்றோர்களையும், தாய்நாட்டையும் இழந்து வெறும் மனிதப் பிறவிகளாய் உழல்கின்ற, ஒரு பாவமும் அறியாத இந்தக் குழந்தைகளின் கண்களால் உலகத்தை நோக்க துணிவார்களா!

அங்கிருந்தபோது, ஒரே ஒரு பாடலை திரும்பத்திரும்ப கேட்க நேரிட்டேன்; பாலஸ்தீன விடுதலை இயக்கத்தின் தலைவர் யாசர் அராபத் என்னை பள்ளி விழாவொன்றுக்கு அழைத்திருந்தார்; அங்குதான் அந்தப் பாடலை முதன் முறையாக கேட்டேன். குழந்தைகளும், இளைஞர்களும், சேர்ந்து பாடினார்கள்; அந்தப்பாடல் "சொந்த வீட்டுக்குத் திரும்புதல்" பற்றி சொல்வதாக இருந்தது.

தங்களுடைய சொந்த தேசத்தை அமைத்துக் கொள்ள சுதந்திர மாநிலங்களை நிர்மாணிக்கத் தேவையான எல்லாமும் பாலஸ்தீனர்களிடம் இருக்கிறது; அவர்கள் அறிவுள்ள, துணிவுள்ள மக்கள்; ஒரு ஒளி நிரம்பிய எதிர்காலம் அவர்களுக்காக காத்திருக்கிறது.

அவர்களிடையே, அரேபியாவிலே புகழ்பெற்ற இலக்கிய உலகை சிருஷ்டித்துள்ள வியக்கத்தக்க கவிஞர்கள் இருக்கிறார்கள்; பயிற்சி பெற்ற மருத்துவர்களும் ஆசிரியர்களும் இருக்கிறார்கள்.

அனைத்து முற்போக்குச் சக்திகளும் அவர்களுக்கு உறுதுணையாக உள்ளன; அவர்களின் ஒற்றுமையை உடைத்துப் பிரிக்க முடியாது என்பதை அங்கிருந்த நாட்களில் நான் தெளிவாக உணர்ந்தேன்.

காற்று சுழன்றடிக்கும் நேரத்திலும் கூட குழந்தைகள் பள்ளிக்கு தொடர்ந்து சென்று கொண்டிருந்தார்கள். திருமண வைபோகங்கள் தடை ஏதுமின்றி நடந்து முடிகின்றன; நான் கூட பாலஸ்தீன சமூகத்தில் இன்னுமொரு நியூக்ளியஸாய், பாலஸ்தீன குடும்பத்தில் மேலுமொரு ஜனனமாய் உருவெடுத்த 'திருமண விழா' ஒன்றில் கலந்து கொண்டேன்.

என் காகஸிய மலைப் பிரதேசமக்கள் சொல்வார்கள்; "உலகின் நலனுக்காக எவற்றை நீ உனக்கு செய்யக்கூடாது என்று நினைக்கிறாயோ, அவற்றை மற்றவர்களிடமும் நீ செய்யாதிருக்க வேண்டும்" என்று.

பிறகு ஏன் இஸ்ரேலியர்கள் கொலைவெறி தாண்டவமாடும் ஆக்ரமிப்புகளை இன்னும் செய்துகொண்டிருக்கிறார்கள்?

ஒரே நிலத்தில் அமைதியோடும் நட்போடும் என் இரண்டு இன மக்களான பாலஸ்தீனர்கள்-இஸ்ரேலியர்கள் சேர்ந்து வாழ சாத்தியமற்றுப் போனது.

எண்ணமுடியாத நட்சத்திரங்களுக்கு வானில் இடமுள்ள அளவு, கணக்கில் அடங்காத அலை வரிசைகளுக்கு சமுத்திரத்தில் இடமுள்ள அளவு, உலகின் எல்லா மக்களும் இணைந்து வாழ பூமியிலும் இடம் இருக்கிறது.

ஆனால் இந்த பிரகாசமான இருபதாம் நூற்றாண்டு மத்திய கிழக்கில் வாழ்கின்ற அரபுக்கள், இஸ்ரேலியர்கள் இவர்களின் சந்ததிகளுக்கென்று எதனை விட்டுச் செல்லும்?

ஒவ்வொருவருடனும் நட்புறவு, சமாதான சகவாழ்வு என்ற கோட்பாடுகளுக்கு மாறாக பகைமை பாராட்டும் பண்பையா?

அப்படித்தானென்றால் அந்தப் பகைமை உணர்ச்சியை மக்கள் மனதில் இருத்தி வளர்த்து வருவது யார்?

போர் நிறுத்தத்திற்கான 'கேம்ப் டேவிட்' ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டவர்களா? ஆதிக்கப் பேயர்களின் ரத்தவெறிக் கைகளிடம் தங்களின் உறவு பாராட்டும் தோள்களை பறி கொடுத்தவர்களா?

அல்லது அயலான் வீட்டில் அனுமதியின்றி நுழைந்ததோடல்லாமல் அந்த வீட்டின் சொந்தக்காரர்களாய் தங்களைக் கற்பிதம் செய்து கொண்டு அகந்தையுடன் கட்டளை பிறப்பிப்பவர்களா?

அதிகரித்து வரும் ஏகாதிபத்தியத்தின் 'ஆக்கிரமிப்பு விழைவுகள்' தான் போரை எதிர்த்தல்; என்ற உணர்வை மக்களுக்கு ஊட்டின. இது மிகவும் இயல்பானதாகும்; இன்றுவரை இதில் மாற்றமும் இல்லை; பாலஸ்தீனர்களது போர்-எதிர்ப்பு நடவடிக்கைகள் நாளுக்கு நாள் வலுத்தே வருகின்றன.

'வெகுஜனப் பேரழிவைத் தடுத்தல்'; அதற்காக உத்வேகத்தோடு எதிர்த்துபோர்புரிதல் இவையே பாலஸ்தீனர்களின் தேசிய முன்னணி இன்று மேற்கொண்டு வரும் நடவடிக்கைகள்.

இவர்களின் இந்த போர் முறையை நான்மிகவும் நேசிக்கிறேன்; அனைத்து அரபு மனங்களிலும் இதுவே எதிரொலிக்கிறது.

அங்கு வாழ்கின்ற எகிப்தியர்களை நான் சந்தித்தேன்; அவர்கள் தங்களை சமாதானத்தின் விரோதிகளாக காட்டிக் கொண்டார்கள்; வெகுஜன இயக்கத்திற்கு எதிரான' கருத்துக்களை உடையவர்களாக இருந்தார்கள்; அரபு மக்கள் அன்பான(?) ஆதிக்க நெஞ்சர்களுக்கு ஒத்துழைக்காததை கடுமையாக சாடினார்கள்.

அவர்கள் சொன்னதில் சிறிது உண்மையும் இருந்தது. அதாவது அரபுகளிடையேயும் உராசல்கள் நிலவின; செயல்பாடுகளில் தவறுகள் நேர்ந்தன; பலபல கஷ்டங்களுக்கு ஆளானார்கள்; ஆனாலுமென்ன? அனுபவங்கள் அவர்களுக்கு மனித ரத்தம் சிந்தப்படுவதை எதிர்க்கவே சொல்லித்தருகின்றன.

அந்நிய தேச ஆக்ரமிப்பாளருக்கு ஒத்து ஊதும் நியோ- கலோனியலிஸ்டாகவும், சர்வாதிகாரத்தின் தலைமையாசனத்தில் திமிரோடு வீற்றிருப்பவராகவும் உள்ள எந்த ஒரு கவிஞரையும், எழுத்தாளரையும் என்னால் அங்கு பார்க்க முடியவில்லை.

கவிதை, இசை இரண்டும் எதிரிகளை பழிதீர்க்கும் வெறிகொண்ட மனித நேசத்தின் ஆயுதங்கள்; விரைவில் நிகழப்போகும் உன்னதங்களுக்கு காரணமாக இருப்பவை.

இந்த விதத்தில் கலை-இலக்கியத்தை கைகொண்டு, மனிதகுலத்தை முன்னோக்கி கூட்டிச் செல்லும் கலைஞர்களையே நான்அங்கு பார்த்தேன்; அவர்களின் வெற்றி நிச்சயமானது; ஏனென்றால் அவர்கள் நீதியின் பக்கத்தில் நிற்கிறார்கள்.

**தமிழில்: ஜே. சாந்தாராம்**
**வெளித்தந்தது—பாலம்.**

---

### நண்பன்!

நான் சந்தோஷப்பட
வேண்டும் என என்
குற்றங்களைக் கூட
நியாயப்படுத்துபவனல்ல
அவன்!
என் சோகமான
இருட்டறையில் அவனும்
ஒரு மூலையில்!
எனது சந்தோஷங்களில்
என்னையும்
முந்திக் கொள்பவன்!
உறவினர்களின்
பாசத்தை
பார்த்திராத நான்
அவன் அன்பில் தான்
உறவுகளைத் தினம்
கண்டுக் கொள்கிறேன்!
என் சுவாசங்கள் கூட
அவனுடைய
நண்பர்களாக
ஆசைப்படுகின்றன!

*ரம்ஷீன் ராஜா.*

### நானிருக்க...?

காட்டில்
ஊழிக் கூத்து
ஆடிய
காட்டுத் தீ
நகரத்தை நோக்கி
தன்-
நாக்கை நீட்டியது
அவசரமாக!
வேண்டாம் உனக்கு
அந்த வேலை...
உன் வேலையை
உன்னை விட
கச்சிதமாக
செய்ய
நானிருக்கிறேன்
பெருமிதமாய்
சொன்னான்
மனிதன்.

ரத்தி
திருகோணமலை.

### சில கேள்விகள்....

அடி,
எம் நாட்டுப்
பிரச்சனை ஏன்
வந்தது?
கனேடிய தேசத்தின்
அகதியாக
உன்னை பதிவு
செய்து என்னை
அநாதையாக்கவா...
இப் பிரச்சனை
வந்தது....?

தொடரும்
பேச்சுவார்த்தை போல்
அர்த்தமற்று போன
கடிதப்
பரிமாற்றங்களைகூட
திடீரென நிறுத்தி
யுத்த பிரகடனம்
செய்தது ஏன்?

கண்மணி,
உன் விழி
ஏவுகணைகளின்
தளமாக இருந்த
என் இதயத்தின்
மீதே பிரிவுக்
குண்டுகளை வீசி
எறிவது நியாயமாகுமா...?

நீ
அமுலாக்கிய
உணர்வடங்கு
உத்தரவினால்
என் நாடி, நாளம்
ஸ்தம்பித்து
குருதி ஓட்டமும்
தடைப்பட்டு...
தளத்திவிடு
என் கலங்கள்
உண(ர்)வற்று
இறக்குமுன்
தளர்த்திவிடு

இறுதியாக...
மீள பேச்சுவார்த்தை
புரிய நானினைக்கையில்
நீ
இன்னொரு நாட்டுடன்
ச(ம)ரசம்
செய்து என்னை
அகற்ற நினைக்கிறாயே...
இப்போது
தொடர்புகளற்ற
யாழ் குடாபோல
நானிங்கு
தனியாக......

*அ.றஜீசன்.*

### கடன்காரர்கள்

மரம்
பழுத்தால் தான்
வௌவால்கள்
தேடிவரும்.
பழுக்காத மரத்தையும்
வௌவால்கள்
தேடுகிறது.

*பாரதி நேசன்*
*அக்கரப்பத்தன.*

### மொழிபெயர்ப்பாளன்

மொழியை
நாவினால்
தகர்ப்பவன்.

*அற்புதா அற்புதராஜா.*
*அக்கரப்பத்தன.*

### தமையன்

ஊதியமற்ற
பாதுகாப்பு
பணம்
தேவையில்லாதவன்
சேர்த்து வைப்பது
அற்புதா அற்புதராஜா.
அக்கரப்பத்தன.

## தேன் கிண்ணம்



### (சந்)தோஷம்!

வாழ்க்கை
புத்தகத்தில்
பதியப்படாத
வாசகம்!

இதய ஓரத்தை
தடவியும்
பார்க்காத
நெருப்புக்
காற்று!

உதட்டுக் குழந்தை
உச்சரிக்க மறுத்த
கசப்பு வார்த்தை!


காலத் தபாற்காரன்
தந்து விட்டுப் போன
கருப்புக் காகிதம்!

*நிஸ்வா ஸலாம்*
*தர்கா நகர்.*

### விபத்து

அன்பே!
உன் முகத்தெருவில்
பார்வை வாகனத்தை
வேகமாகச்
செலுத்தினேன்.
இப்பொழுது...
காதல் விபத்து
ஏற்பட்டு விட்டது.

*சில்மிதாசன்*
*கிருலப்பனை.*



### உன்னைப் படித்ததால் எனக்குப் பிடித்தவைகள்

ராத்திரியிலும்
உன் உள்ளங்கை
வியர்வையால்
பிசுபிசுக்குமே
அது பிடித்திருக்கிறது.

•

பழுக்காமலிருந்தும்
உன் மார்பு
விழப்பார்க்குமே
அது பிடித்திருக்கிறது.

•

உயிரில்-
முள் தெறிக்கும்படி
சிரிப்பாயே-
அது பிடித்திருக்கிறது.

•

விரல்களால்
மார்புக் கட்டையை
இழுத்து இழுத்து
மெல்ல நடப்பாயே-
அது பிடித்திருக்கிறது.

•

கொலுசு சங்கீதமாய்
கைகளில் குலுங்குமே
தங்க வளையல்கள்
அது பிடித்திருக்கிறது.

•

உன் மௌனம்
உன் வார்த்தை
நீ கொடுக்கும்
குளிர்ந்த தண்ணீர்
பிடித்திருக்கிறது.

•

பூக்களைக் கண்டால்
ஒரு வினாடி
மௌனமாய் நிற்பதும்
தாவரங்களில்-
இலையுதிர்வதைக் கூட
வெறுத்துப் பார்ப்பதும்
பிடித்திருக்கிறது.

•

நீ உறங்கும் இரவு
விழித்திருக்கும் பகல்
ஒட்டடை மாதிரி
தலைமுடி எல்லாம்
பிடித்திருக்கிறது.

•

உன் பெயர்
என் மூச்சைப் பொத்தி
வலித்து வலித்து
சிறிது சிறிதாய்
வெளியேற்றுகிறதே
அது பிடித்திருக்கிறது.

•

மரத்தின்அடியிலிருந்து
வேர்கள்
நிலத்துக்குள் வளருமே
அதுமாதிரி

•


உன் மனசின்
அடியிலிருந்து
என்னுயிர் வளர்கிறது
என்றெழுதிய கடிதம்
பிடித்திருக்கிறதா?

*எம்.ஏ.றியாஸ்*
*அக்கரப்பற்று.*

### சிலை

மனிதாபிமானத்திற்கு
ஒரு சிலை
மரித்துப் போனதற்காக.

*ஜெ.ஆனந்தகுமார்*
*கொழும்பு-6.*



### விபசாரிகள்

ஆடவ அஞ்சற்பெட்டிகளைத்
தேடும்,
சிவப்பு முத்திரை குத்தப்பட்ட
முகவரியில்லாக் கடிதங்கள்!

ஒருவனை
உடுத்திக்கொள்வதற்காக
தங்கள் உடைகளை(யே)க்
கழற்றிக் கொள்ளும்
வள்ளல்கள்!

இரவுப் போர்வையை
அதிகம் நேசிக்கும்
இருட்டின் காதலிகள்!

நிர்வாண ராஜ்யத்திடமிருந்து
வாழ்க்கைக்கான,
நிவாரணங்களைப் பெற்றுக்
கொள்ளும்
உள்வீட்டு அகதிகள்!

வாழ்வின் விடியலை
வரவேற்க,
இரவுவீட்டில்
பாய்முற்றங்களில்
படுக்கைக்கோலம் போடும்
பசிவிரதைகள்!

ஷயாரோ
-திருமலை-

### "அமைதிக்காக"......

இரவே நீ
புலரக்கூடாது
காற்றே நீ-
குளிரக்கூடாது
சூரியனே நீ-
சுடக்கூடாது...!
மனிதா நீயும்
இறந்து போ....
இந்த-
பிரபஞ்சம்
ஓய்வு பெறட்டும்

*பொத்துவில்.ஏ.மஜீத்*
*அக்கரைப்பற்று*

www.padippakam.com

நன்றி - நூலகத்திட்டம்

# தூரத்து நாகரிகம்

# மடோனாவின் மனதிலும் மறக்க முடியாத சோகங்கள்!

மேலைய நாடுகளில் இளம் உள்ளங்களை கவர்ந்த பாடகியார் என்று ஒரு போட்டி வைத்தால் அறுதிப் பெரும்பான்மையால் வெற்றி பெறக்கூடிய ஒரே ஒரு பாடகி–

'பொப்ஸ்டார்' மடோனா

மடோனாவுக்கு இன்று முப்பத்தி மூன்று வயது. யாரும் நம்பமாட்டார்கள். அத்தனை இளமை. வசீகரமான உடல்வாகு.

மேடையில் தோன்றிவிட்டால் பாடிக்கொண்டே குறும்புகள் செய்யும் வித்தையில் மடோனாவுக்கு போட்டியே கிடையாது.

மத்திய அமெரிக்காவில் மடோனாவை தங்கள் வீட்டில் உள்ள உறவினர்களில் ஒருவராகக் கருதும் அளவுக்கு பிரபலமாகியிருக்கிறார்.

மடோனாவின் அந்தரங்க வாழ்க்கை பற்றிப் பல புத்தகங்கள் வெளிவந்திருக்கின்றன. ஆனாலும் அவரது பிரபல புகழ் சற்றும் குறையவில்லை.

போதாக்குறைக்கு மடோனாவே காதல் லீலைகளை விளக்கும் புத்தகம் ஒன்றை எழுதியிருக்கிறார். அதற்கு தானே விதம் விதமான போஸ் கொடுத்து எல்லோரையும் அதிரவைத்தார்.

சில நாடுகளில் அந்தப் புத்தகத்துக்கு கடுமையான தடைவிதிக்கப்பட்டது. சில நாடுகளில் அந்தப் புத்தகம் வாங்குவதற்கு நீண்ட கியூவில் ரசிகர்கள் காத்துக் கிடந்தனர். கறுப்புச் சந்தையிலும் கூடிய விலையில் வாங்கிச் செல்ல ஆட்கள் இருந்தார்கள்.

மடோனா மேடையில் பாடும் போது நாசூக்காக ஆடைகளை களைந்து அணிந்து சாகசம் காட்டுவதுண்டு.

இப்படியெல்லாம் கனவுக் கன்னியாகக் கருதப்படுமளவுக்கு பிரபலம் பெற்றுவிட்ட மடோனாவுக்குள்ளும் சோகங்கள் இருக்கின்றன.

தன்னுடைய இளமைக் காலங்கள் மறக்க முடியாதவை. தனது தாயாரை சிறுவயதில் புற்றுநோய் பலியெடுக்க, தந்தையார் மறுமணம் செய்து கொள்ள–

குடும்பப் பொறுப்பை மடோனா சுமந்தார். அப்போது 17 வயது.

தனது பதினைந்தாவது வயதில் காருக்குள் வைத்து பலாத்காரம் புரியப்பட்டதை இப்போது ஒரு விபத்தாகவே கருதுகிறாராம்.

தனது தாயாரை இழந்த துயரத்தில் இருந்து இப்போது கூட மடோனாவால் விடுபட முடியவில்லை. இடைக்கிடையே மனநோய் மருத்துவர்களை சந்தித்து சிகிச்சை பெறுகிறார்.

மடோனா வறுமையில் இருந்த போது ஒரு நிர்வாண படத்திற்கு ஆறு பவுண்டு ஊதியம் கொடுத்து அவரது நிர்வாணப் படங்களை வெளியிட்ட பத்திரிகைகளான. ப்ளேபோயும் பென்அவுஸும் அதன் மூலமாக சம்பாதித்தது. 60.000 பவுண்டுகள்.

மடோனா திரைப்படங்களில் நடித்தபோதும் அவை பெரும் வெற்றி பெறவில்லை. பேரழகி மர்லின் மன்ரோவைப் பற்றிய



படமொன்றில் மடோனா மர்லினாக நடித்தார். அன்று முதல் மர்லின் போலவே உடையணிவதிலும் தோற்றமளிப்பதிலும் ஆர்வம் காட்டுகிறார்.

மர்லின் மன்றோவுக்கும் தனக்கும் உள்ள ஒற்றுமை என்று மடோனா சொல்வது:

மர்லினும் சிறு வயதில் தாயை இழந்தவர்.

இன்னொரு ஒற்றுமையும் இருக்கிறது.

மர்லின் மன்றோவுக்கு அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி கென்னடியின் சகோதரரோடு உறவு இருந்தது.

மடோனாவுக்கும் கென்னடியின் சகோதரரோடு தொடர்புண்டு.

மடோனாவுக்கும் ஒரு முக்கிய குறிக்கோள் இருக்கிறது.

அதுதான் இறந்தபின்னர் மர்லினின் கல்லறைக்கு அருகில் தன்னை புதைக்க வேண்டும் என்பதே அந்தக் குறிக்கோள்.

கனவுக்கன்னிக்கும் கனவு இருக்கிறது!

# "கலைஞர் படையெடுப்பும் மட்டரக விளம்பரமும்"

## விமர்சிப்பது அஸ்வதி

அண்மைக்காலங்களில் நடைபெற்ற இந்தியக் கலைஞர்களின் குறிப்பாக சினிமாக் கலைஞர்களின் படையெடுப்பு எமது நாட்டுக் கலைஞர்களையும் ரசிகர்களையும் பெரிதும் பாதித்திருந்தது. எமது குடியரசுத் தலைவரின் படுகொலைக்குப்பின் ஏற்பட்ட பதட்டங்களால் இவர்களின் ஆக்கிரமிப்பு பெரிதும் குறைந்து சிறிது ஓய்வுக்கு வந்துள்ளது.

இந்த இசைக் கலைஞர்களினதும் சினிமா நடிகர், நடிகைகளினதும் வரவு எமது நாடு என்றுமே காணாத அளவு விளம்பரங்களுடன் மிகப் பிரமாண்டமாக குட்டி முதலாளிகளால் இந்த வருட ஆரம்பத்தில் அறிமுகப்படுத்தப்பட்டது. இதற்கு முன்பும் இந்தக் காய்ச்சல் இருந்தது என்னவோ உண்மை. ஆனால் வருட ஆரம்பத்தில்தான் வீரியம் பெற்றது.

சாதாரணமான சினிமாப் பாடல்களைப் பாட இந்தியாவிலிருந்து கலைஞர்கள் வர வேண்டுமா?

அதே பாடல்களை எமது நாட்டுக்கலைஞர்கள் அட்சரம் பிசகாமல்பாடவோ, இசைக்கவோ மாட்டார்களா?

விளம்பரம் வேண்டுமாயின் அதனை எந்த வழியிலும் பெற்றுக் கொள்ளலாமா? போன்ற கேள்விகள் எழத்தான் செய்கின்றன.

எமது நாட்டுக்கலைஞர்கள் பலர் எவருக்கும் இளைத்தவர்களல்ல. பாடுவதிலும் சரி, இசையமைப்பதிலும் சரி அசலைப் போலவே இவர்களால் நகலையும் தரமுடிகின்றது. நல்ல பாடல்களைச் சொந்த யுக்தியுடன் பாடி, இசையமைக்கிறார்கள். (ஓரங்கா... ஸ்ரீலங்கா... கொப்பரத் தேங்காய்....." போன்ற கருத்துச் செறிவான பாடல்களை இவர்களால் ஆக்கமுடியாதது துர்அதிஸ்டமே) வளர்ந்த அல்லது வளர்ந்து வரும் கலைஞர்களைக் கௌரவிக்கவோ அன்றிப் பெருமைப்படுத்தவோ எமது குட்டி முதலாளிகளுக்கு மனமில்லை. ஆனாலும் இடையிடையே, வருமான வரித் தொல்லையைச் சரிக்கட்ட உள்ளூர்க்கலைஞர்களின் நிகழ்ச்சிகள் ஒழுங்கு செய்யப்படுகின்றன.

ஸ்ரீமுரளீதரன், குமாரி மணிமேகலை, குமாரி ஸ்ரீநிதிரங்கராஜன் போன்ற பரத நாட்டியக் கலைஞர்களும், பத்மஸ்ரீ கே.ஜே. யேசுதாஸ், டாக்டர் சேலம் ஜெயலட்சுமி போன்ற கர்நாடக சங்கீத வித்வான்களும், கலைஞர்கள் என்ற வட்டத்தினுள் அடங்காது விட்டாலும் கூட திருமுருக கிருபானந்த வாரியார், திருமதி. இளம்பிறை மணிமாறன் ஆகியோரும் இந்த மண்ணிற்கு வரவேண்டிய கட்டாயம் இருக்கிறது. (சினிமா சங்கீதக் காரன் கே.ஜே. யேசுதாஸ் இப்பட்டியலில் அடங்கவில்லை) ஏனென்றால் இந்த வகையான கலைப்படைப்புகளை இவர்களைத் தவிர வேறு யாரும் வழங்க முடியாது. நகல் செய்து



கொள்ளவும் முடியாது. ஆனால் எவரும் சினிமா சங்கீதத்திற்காகவும் வேறு சில களியாட்டங்களுக்காகவும் இந்தியக் கலகைஞர்கள் இங்கு வந்து எமது பணத்தைச் சூறையாடிச் செல்வது சகிக்க முடியாத விசனத்திற்குரிய சங்கதியாகும்.

சாமானியமான ரசிகனின் மட்டரகமான ரசனைகளில் ஒன்றுதான் சினிமா நட்சத்திரங்களை நேரில் பார்ப்பது. அதிக பட்சமானஆசை அவர்களை ஒரு முறையாவது தொட்டுவிட வேண்டும் என்பது. அது ஒரு புறமிருக்க... இந்த ஆசைகளை நிவர்த்தி செய்ய நூற்றி ஐம்பது ரூபா முதல் இரண்டாயிரம் ரூபா வரை செலவு செய்வது எமது பொருளாதாரமும் வாழ்க்கைச் செலவும் இருக்கும் நிலையில் கேலிக்கூத்தாகவே படுகின்றது.

அண்மையில் மிகப் பிரபலமான ஒரு இசையமைப்பாளர் தனது பரிவாரங்களுடன் இங்கு வந்திருந்த போது மிகக் குறைந்த பெறுமதியுள்ள நுழைவுச்சீட்டு ஐந்நூறு ரூபாவாக இருந்தது. உண்மையில் தமது நிறுவனத்தின் விளம்பரத்திற்காக அல்லது ரசிகர்களைக் குதூகலப்படுத்துவதற்காக(.......?) இவர்களைச் சுங்கத் தீர்வையின்றி இறக்கும் தரகர்கள் செய்வது சுத்தமான வியாபாரம் என்பது தெளிவாகின்றது. ஏனெனில் சாதாரண ரசிகர்கள் இவர்களை ரசிக்கும் அளவிற்கு அல்லது வழிபடும் அளவிற்று மற்றவர்கள் கீழ் இறங்குவதில்லை. அதி கூடிய நுழைவுக் கட்டணம் அடிமட்ட ரசிகர்களை அரங்குகளின் பக்கத்தில் கூட நெருங்க விடுவதில்லை. மேற்படி நிகழ்ச்சி ஆலய நிதிக்காக என்று அறிவிக்கப்பட்டது.

இசையமைப்பாளருக்கும் பரிவாரங்களுக்கும், விளம்பரத்திற்கும் போக ஆலயத்திருப்பணிக்கென ஏதாவது மிஞ்சியிருக்கும் என்பதும் சந்தேகமே.

'கட் அவுட்' கலாசாரமும் தனிநபர் வழிபாடும் இந்தியாவுக்கே உரிய கொடிய நோய்கள். இந்த நோய்கள் இங்கேயும் நுழைய முயலுகின்றன. அண்மையில் இளையராஜா வந்திருந்தபோது நட்டப்பட்ட பாரிய 'போஸ்டர்கள்' நல்ல உதாரணமாக அமைகின்றன. யாரும் ரசிகர்களாக இருக்கலாம் அதற்குத் தடையில்லை. ஆனால் பகுத்தறிவுள்ள எவனும் பக்தனாக மாறக்கூடாது.

இவ்வளவு பெருந்தொகை பணத்தைப் பெற்றுக் கொள்ளும் இந்திய இசைஞர்கள் அல்லது இடைத்தரகர்கள் தமது நிகழ்ச்சிகளையும் ஒழுங்காகத் தருவதில்லை. கங்கை அமரன் என்பவர் மட்டரகமான ஜோக்குகளை உதிர்க்கும் ஒரு திறமைசாலி. சுயபுராணம் அவருக்கு கைவந்த கலை. (மூக்குப்பொடி போடுபவர் தான் தும்ம வேண்டும். டப்பிகள் தும்மக் கூடாது) வேறு சிலர் உதிர்ப்பவை எல்லாம் விரசமான மூன்றாந்தர ஜோக்குகள். வசூலை எதிர் பார்க்கும் சினிமாவில் இவை தவிர்க்க முடியாதவை, மேடையிலும் அப்படியா? கேட்டால்......

ஜனரஞ்சகம், கலை, திறமை என்று சால்ஜாப்புக் காட்டுகிறார்கள். ஆனால் கலாசார சீரழிவின் ஆரம்பம் இதுதான் என்பதை மூடிமறைக்கிறார்கள்.

கலையை வளர்க்க செந்தில் எனப்படும் ஒரு கலைஞனும் (........?) மிகப் பிரமாதமான விளம்பரங்களுடன் இங்கே அழைக்கப்பட்டார். இந்த மாதிரியாக விசர்க்கூத்துக்களை விடுத்து தலைநகரில் அழிந்து கொண்டிருக்கும் நாடகக் கலையைத் தூசு தட்டி பழைய நிலைக்குக் கொண்டுவர யாருக்கும் தைரியமில்லை. அல்லது சிங்கள 'ரெலிட்ராமா' போன்ற தரமான நாடகங்களைத் தயாரிக்கவும் எமது வசதியானவர்களுக்கு தைரியமில்லை. 'இங்கே விளம்பரமும், லாபமும், வருமான வரியிலிருந்து குத்தி விலத்துதலுமே பெரு நோக்கமாக இருக்கிறது. யார் கெட்டுப் போனால் யாருக்கென்ன என்ற நிலை.

பிரசாந்தும் வருவதாக பெரிய விளம்பரங்கள். குடியரசுத் தலைவரின் அகாலமரணம், பிரசாந்த் மேடையிற் தோன்றி கொடுக்கவிருந்த தரிசனத்தைப் பின்போட வைத்து விட்டது. இந்தக் கால இடைவெளியில் விளம்பரம், பிரச்சாரம் என்பன கொடிகட்டிப் பறக்கின்றன. நுழைவுச் சீட்டு ரூபா ஆயிரமும் இரண்டாயிரமும் மட்டுமே. அதிகமில்லை. பிரசாந்திற்காகத் திட்டமிட்டு ஏற்படுத்தப்படும் விளம்பர வியூகம் அல்லது 'இமேஜ்' தரகர்களுக்குத் தரகுப் பணத்தையும் பெற்றுக் கொடுக்கலாம்.

பல தேசிய விருதுகளை வென்ற அர்ச்சனா அண்மையில் இலங்கை வந்ததை ஆங்கிலப் பத்திரிகைகளும் ஒரு சில சிங்களப் பத்திரிகைகளும் தான் கண்டு கொண்டன.

எது எப்படியிருப்பினும்,

பகுத்தறிவுள்ள எந்த ஜீவராசியும் சுயமாகச் சிந்திக்கத்தான் தலைப்படும். அந்த வகையில்........

★ கலை வளர்க்கப்படுகிறதா? அல்லது கலாசார சீரழிவின் ஆரம்பமா?

★ நாட்டின் ஒரு பகுதி மக்கள் மத்தளமாயிருக்க அதே இனத்தைச் சேர்ந்த இன்னொரு பகுதி மக்கள் களியாட்டத்தில் இறங்கியிருப்பது ஆரோக்கியமானதா?

★ திறமையுள்ள உள்நாட்டுக் கலைஞர்கள் புறக்கணிக்கப்படுவது நியாயமா?

★ தனிமனித வழிபாடு பத்திரிகா தர்மமா?

★ சில லட்சங்கள் விமான மேறியும் இலட்சியங்கள் கப்பலேறியும் உள்ளூர்ப் பொருளாதாரம் 'சிறிது' சரிய வழிகோலாதா?

போன்ற கேள்விகள் சுய சிந்தனையாளர்கள் மனதில் கட்டாயம் ஜனிக்கும். இவற்றுக்கான பதில்களை........

"அறிந்தவர் அறிவாராக"

பி.கு:இது ஒரு இலக்கியவாதியின் கோபம். இந்தக் கோபத்தில் நியாயமில்லை என்று கண்டால் எழுதுங்கள். உங்கள் பதில் ஆரோக்கியத்தனமாக இருந்தால் பிரசுரிப்போம்.

(ஆர்)


# எத்தனை எளிமை

பிரபல வங்காள எழுத்தாளராக விளங்கியவர் சரத் சந்திரர்.

அவரது வீட்டில் சில நண்பர்கள் கூடியிருந்தனர். அவரைப் புகழ வேண்டும் என்பதற்காக அதில் ஒருவர் சொன்னார் -

"சரத் பாபு! நீங்கள் எழுதுவது எவளவு எளிமை. ரவீந்திரநாத் தாகூரும் எழுதுகிறாரோ, அதுவும் ஒரு எழுத்தா. ஒன்றுமே புரியவில்லை.

உடனே சரத்சந்திரர் உச்சிகுளிந்து போகவில்லை. அவர் சொன்னார். "ரவீந்திரநாத் தாகூர் என்போன்றவர்களுக்காக எழுதுகிறார்- நான் உங்களுக்காக எழுதுகிறேன்".





# பெண்ணுரிமைக்கே முன்னுரிமை



இன்று பேசப்படும் பெண்ணுரிமையை அன்றே இறைவனும், இறைவியும் மக்களுக்கு உணர்த்திய பெருமையைச் சுட்டிக் காட்டுகிறது இந்து மதம்.

மதுரையை ஆண்ட மன்னன் மலயத்வஜன். அவன் மனைவி காஞ்சனமாலை. இவர்களின் தவப்புதல்வியாக வந்துதித்தாள் பரமேஸ்வரி. அவளே மீனாட்சி. ஒரு அரசிளங்குமரனுக்கு என்னென்ன பயிற்சிகளை அளிக்க வேண்டுமோ அத்தனை பயிற்சிகளையும் மகள் மீனாட்சிக்கு வழங்கினான் மன்னன். மீனாட்சி தக்க வயதை அடைந்ததும் அவளுக்கு மகுடம் சூட்டினான். ஆட்சிப் பொறுப்பை முழுமையாக அவளிடம் ஒப்படைத்து விட்டான். மண்ணை ஆண்ட அந்தப் பெண்ணின் ஆட்சி பெருமைக்குரிய ஆட்சியாக இருந்தது.

காலங்கள் உருண்டன. ஒரு நாள் காலன் வந்தான், மன்னன் மாண்டான். முறைப்படி ஈமக்கடன் செய்ய மகன் இல்லை. மகனாக வளர்த்த மீனாட்சி, மகனாக மணிமுடிசூடிக் கொண்ட மீனாட்சி, இப்போதும் மகனாக நின்று தந்தையின் இறுதிக் கடன்களைச் செய்து முடித்தாள்.

மீனாட்சியின் ஆட்சி தொடர்ந்தது. திக் விஜயம் செய்ய வேண்டிப் புறப்பட்டாள், அந்த மங்கை. உலகங்களை வென்றாள். பரமேஸ்வரனைக் கண்டதும் காதல் வயப்பட்டாள். அழகுக்கே அழகு சேர்க்கும் அந்த சுந்தரணையே தன் கணவனாக வரித்தாள். திருமணநாள் நிச்சயிக்கப்பட்டது. மங்கள முழக்கங்களோடு ஊர்வலமாக வந்து மணமகன் மதுரை அரண்மனையை அடைகிறார். அப்போது அவரை வரவேற்றது யார் தெரியுமா?

மீனாட்சியின் அன்னை, கணவனை இழந்து, விதவையாகிய காஞ்சனமாலை. உடன்கட்டை ஏறுவது பெண்ணுக்குக் கட்டாயமாக விதிக்கப்பட்ட விதியல்ல. மன்னன் இறந்த பின் காஞ்சனமாலை உடன் கட்டை ஏறவில்லை. தசரதர் இறந்த பின் கோசலையோ, சுமித்திரையோ கைகேயியோ உடன்கட்டை ஏறவில்லை. உடன் கட்டை போன்ற தீயவழக்கங்களை இந்து மதம் ஏற்றுக் கொண்டதில்லை.

# ஆன்மீகம்

## அன்பு வழி

நான் உங்களுக்குச் சொல்கிறேன். உங்கள் சத்துருக்களைச் சிநேகியுங்கள். உங்களைச் சபிக்கிறவர்களை ஆசிர்வதியுங்கள். உங்களைப் பகைக்கிறவர்களுக்கு நன்மை செய்யுங்கள். உங்களை நிந்திக்கிறவர்களுக்காகவும், உங்களை துன்பப்படுத்துகிறவர்களுக்காகவும் ஜெபம் பண்ணுங்கள்.

இப்படிச் செய்வதனால் நீங்கள் பரலோகத்தில் இருக்கின்ற உங்கள் பிதாவுக்குப் புத்திரராயிருப்பீர்கள். அவர் தீயோர் மேலும் நல்லோர் மேலும் தமது சூரியனை உதிக்கப்பண்ணி, நீதியுள்ளவர்கள் மேலும், அநீதியுள்ளவர்கள் மேலும் மழையைப் பெய்யப் பண்ணுகிறார்.

உங்களைச் சிநேகிக்கிறவர்களையே நீங்கள் சிநேகிப்பீர்களானால் உங்களுக்குப் பலன் என்ன? உங்கள் சகோதரரை மட்டும் வாழ்த்துவீர்களானால் நீங்கள் விசேஷித்துச் செய்கிறது என்ன? ஆயக்காரர்களும் அப்படிச் செய்கிறார்கள் அல்லவா!

(மத்தேயு 5:44-48)

# யாரும் அனாதை இல்லை

அன்று ரம்ழான் பெருநாள். மதீனா நகரமே விழாக்கோலம் பூண்டிருந்தது. மக்கள் அனைவரும் புத்தாடை உடுத்தி, வாசனைத்திரவியங்கள் பூசி, விதவிதமான உணவுப் பொருட்களை உண்டு, மகிழ்ந்தார்கள். நகர் முழுக்க களிப்பும் இன்பமும் பொங்கிக் கரைபுரண்டது.

பெரியவர்-சிறியவர், ஏழை-பணக்காரர், கற்றவர்-கல்லாதவர், உற்றார்-உறவினர் எனப் பேதமில்லாமல் அனைவரும் ஈத்கா பள்ளிவாசலை நோக்கி தொழுவதற்காகச் சென்று கொண்டிருந்தார்கள்.

ஆனால் அந்த ஆனந்தச் சூழ்நிலையில் ஒரு சின்ன மாற்றுக் குழைவு. ஒரு பச்சிளம் பாலகன் தனியனாக நிற்கிறான். கண்ணீர் அவன்கன்னங்களில் உப்புக்கோடு கிழிக்கிறது. பெருமூச்சு விட்டபடி நிற்கும் அவனைக் கவனிப்பார் யாருமில்லை.

அந்த வழியாக கருணைக்கடலான நபிகள் நாயகம் அவர்கள் வந்தார்கள். அந்தச் சிறுவனைக் கண்டார்கள். அன்பொழுக அவனை அழைத்து விசாரித்தார்கள்.

"எனக்குத் தந்தையில்லை எல்லாப் பிள்ளைகளும் அவரவர் தந்தையுடன் பள்ளிவாசலுக்குச் செல்கிறார்கள். என்னை அழைத்துப் போவார் யாருமில்லை" என்றான் சிறுவன்.

நாயகம் அவர்கள் அந்தச் சிறு அனாதையின் அபயக்குரலில் நெகிழ்ந்துபோனார்கள். அப்படியே அந்தச் சிறுவனை நெஞ்சாரத் தூக்கிக் கொண்டார்கள்.

"மழலையே நீஅனாதையில்லை. ஆண்டவனின் படைப்பில் யாரும் அனாதையில்லை. நான் உன்னை பள்ளிவாசலுக்கு அழைத்துச் செல்கிறேன்" என்றபடி அவனைத் தூக்கிச் சென்றார்கள்.

"அனாதைக் குழந்தையை அன்போடு பாதுகாக்கும் வீடே ஒரு உண்மையான முஸ்லிமின் மேலான வீடு."

-நபிமொழி-

# இலங்கையில்-இந்தியா எப்படி வீசும் பந்து?



இந்திய கிரிக்கெட் அணிக்கு இப்போது மனேஜராக இருப்பவர் அஜித் வடேகர்.

இவர் இந்திய அணியின் முன்னாள் கப்டன். வெற்றிக் கோப்பைகளை கைப்பற்றிக் கொடுத்தவர்.

இந்திய கிரிக்கெட் அணியின் மனேஜராக வடேகர் நியமிக்கப்பட்ட மூகூர்த்தமோ என்னவோ இந்திய அணி பிடரியைச் சிலுப்பிக் கொண்டு வெற்றி நடை போடத் தொடங்கியிருக்கிறது.

இலங்கை வருவதற்கு முன்னர் திரு.அஜித் வடேகர் தமிழக சஞ்சிகை ஒன்றுக்கு அளித்த பேட்டியில் இருந்து-

கே:சிறீலங்காவுக்கு எதிராக எந்த மாதிரி பந்து வீச்சு முறையை பயன்படுத்த உள்ளீர்கள்!

வடேகர்: வேகப்பந்து வீச்சு, சுழற்பந்து வீச்சு இரண்டையும் சேர்த்து பயன்படுத்த உள்ளோம். எனக்கு சிறீலங்கா பிட்சைப் பற்றி நன்கு தெரியும். முதல் மூன்று நாட்கள் பட்ஸ்மனுக்கு உறுதுணையாக இருக்கும். கடைசி இரு நாட்கள் பந்து வீச்சாளர்களுக்கு சாதகமாக இருக்கும்.

கே: உலக சாதனையை நெருங்கும் கபிலுக்கு கப்டன் அசாருதீன் அதிக வாய்ப்பு கொடுப்பதில்லை என்று கூறப்படுகிறதே?

வடேகர்: இது முற்றிலும் தவறான குற்றச்சாட்டு. அசாருக்கும், கபிலுக்கும் எவ்வித கருத்து வேறுபாடும் கிடையாது. பிட்ச் யாருக்கு சாதகமாக இருக்கிறதோ அவருக்குத்தான் வாய்ப்புக் கொடுக்கப்படுகிறது. ஸ்பின்னருக்கு ஏற்ற தளமாக இருந்தால் கபிலுக்கு வாய்ப்புக் கொடுக்க முடியாது.



கே: இந்தச் சுற்றுப் பயணத்தில் புதியவர்களுக்கும் இளைஞர்களுக்கும் வாய்ப்புக் கொடுக்கவில்லை?

வடேகர்: நமது அணியில் கபிலைத் தவிர ஏனையோர் முப்பது வயதுக்கும் குறைந்தவர்களே. சச்சின், ஆம்ரே, வினோத்காம்ளி அனைவரும் இளைஞர்கள்.

கே: வீரர்களிடம் ஒற்றுமை இல்லை என்று குற்றம் சாட்டப்படுகிறதே?

வடேகர்: அதெல்லாம் சுத்தப் பொய். ஒற்றுமை இல்லாவிட்டால் தலைச்சிறந்த அணியான இங்கிலாந்தை எப்படி நம்மால் வென்றிருக்க முடியும்.

கே: சிறீலங்காவிலும் வெற்றித் தேவதையை அழைத்து வருவீர்களா?

ப: (பலத்த சிரிப்பே பதிலானது)



சிறுகதை

# ரூமுக்கு வா

ஸ்டெனோ, டைப்பிஸ்ட் இண்டர்வியூவிற்கு வந்திருந்த ஆறு பெண்களும் அந்த அலுவலகத்தில் வைத்திருந்த நோட்டீஸ் போர்ட்டைப் பார்த்து ஏக்கப் பெருமூச்சு விட்டனர். அந்த வேலைக்கு அவர்கள் கொடுக்கப் போகும் சம்பளம் மாதம் நான்காயிரம். வேண்டாமென்று சொல்ல யாருக்கு மனசு வரும்? இருப்பது ஒரு இடம் தான் வந்திருப்பது ஆறு பேர். ஒவ்வொருவரும் அந்த வேலையை அடைய என்ன என்ன செய்ய வேண்டுமென்று மனதிற்குள் உடனே திட்டமிட்டுச் செயலில் இறங்கினர்.

ராதிகாவிற்கு குறுக்கு வழி தெரியும். தன் போய் பிரண்டிற்கு போன் செய்து வரவழைத்து மற்ற ஐந்து பெண்களையும் கிண்டலடித்துத் துரத்திவிட நினைத்தாள். போன் செய்ய அவளை அனுமதிக்கவில்லை. கறார் ஆசாமி ஒருவர் வெளியே போய் போன் செய்து கொள்ளச் சொல்லிவிட்டார்.

ரஞ்சனி சென்டிமென்டாக மற்ற ஐந்து பெண்களிடம் பேசிப் பார்த்தாள். தன் குடும்பம் பெரிசு. தான் சம்பாதித்துத்தான் எல்லாரையும் காப்பாற்ற வேண்டும். ஆகவே இந்த வேலையைத் தனக்காக விட்டுக்கொடுக்க வேண்டும் என்று கேட்டுப் பார்த்து விட்டாள். யாரும் அவளுக்காகச் செவி சாய்க்கவில்லை.

கோமதி தான் வைத்திருந்த பேர்ஸைத் தொலைத்துவிட்டதாகவும் மற்ற ஐந்து பெண்களில் யாராவது எடுத்திருக்க வேண்டும் என்று கூறி ஒவ்வொருத்தர் ஆடைக்குள்ளும் சோதனை செய்து ரகளை செய்தாள். ஆனால் ஒருத்தருக்கு ஒருத்தர் விட்டுக்கொடுக்கவில்லை. எல்லாரும் எதற்கும் மசியாதவர்கள் தான்.

"என் தாய் மாமன் இந்தக் கம்பனியில் வேலை பார்க்கிறார். ஆகவே இந்த வேலை எனக்குத்தான்" என்று கூறி மற்றவர்கள் மனதில் தோல்வி மனப்பான்மையை ஏற்படுத்த நினைத்தாள் பார்வதி. ஆனால் யாரும் அதற்கு ஆட்படவில்லை.

எல்லாருடைய சேர்ட்டிபிகேட்டுக்களையும் வாங்கிக் கிழித்துப் போட்டுவிடலாமா என்று யோசித்தாள் அனுசூயா, ஆனால் அவளுக்கு ஐடியாதான் வரவில்லை.

ஆக இது சரியான போட்டி. இண்டர்வியூ என்னும் நேர்காணலில் அவரவர் திறமையைக் காட்டி வெற்றிபெற வேண்டும். வேறு வழியில்லை. திறமை எல்லாரிடமும் தான் இருக்கிறது. இண்டர்வியூ செய்பவர் யாருக்கு அதிகத் திறமை இருப்பதாக நினைக்கிறாரோ அவளுக்குத்தான் இந்த வேலை. அவர் பார்வையில் நாம் உயர்ந்து நிற்க வேண்டும் என்று எல்லோருமே நினைத்தனர்.

மணி பத்தடிக்கும் முன்பு ஒஃபீஸ் களை கட்டியது. சரியாகப் பத்து மணிக்கு ஸ்டைலாக உடையணிந்த, கண்களாலேயே பேசும் ஒரு அழகிய அதிகாரி அவர்கள் முன் வந்து நின்று "ஐ ஆம் ராஜ்கிரன் உங்களை இண்டர்வியூ பண்ணப் போகிறவன் நான்தான். இண்டர்வியூவை மத்தவங்க செய்யறது போலில்லாமல் புதுவிதமாகப் பண்ண வேண்டுமென்பது என் விருப்பம். இதுக்கு யாராவது எதிர்ப்புத் தெரிவிச்சா அவங்க இப்பவே போயிடலாம். எல்லா சோதனைகளுக்கும் தயார்ன்னு யார் யார் நினைக்கிறாங்களோ அவர்கள் என் அறைக்கு வரலாம்" என்று கூறி விட்டு நடிகர் நடையில் உள்ளே நுழைந்தார்.

ஆறு பெண்களும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர். அவன் பேசிய வார்த்தைகளில் இரண்டு அர்த்தம் இருப்பதைக் குறிப்பிட்டனர். புதுமாதிரியான இண்டர்வியூ... எல்லாத்துக்கும் தயார்ன்னா... அறைக்கு வரலாம். ஆனால் வேலை கிடைத்துவிட்டால் சம்பளம் நான்காயிரம் ஆயிற்றே அனைவருக்கும் ஒரு பக்கம் ஆசையாயிருந்தாலும் இன்னொரு பக்கம் பயம்.

கோமதி தான் துணிந்து உள்ளே நுழைந்தாள். அவளைத் தொடர்ந்து மற்ற ஐந்து பேர்களும் உள்ளே நுழைந்து விட்டனர். எல்லாரையும் கவரும் விதத்தில் அமைந்திருந்த ராஜ்கிரனின் அலுவலகம் குளுகுளு வசதி கொண்டது. குளிர்ந்த காற்றை அனுபவித்த பெண்கள் அனைவரும் ஒயிலாக அமர்ந்திருக்கும் ராஜ்கிரனையே பார்க்க அவன், "எல்லாரும் ரெடியா? இட்ஸ் குட். முதலில அழகு டெஸ்ட்.. நான் யாரைக் கூப்பிடுகிறேனோ அவங்க வந்து என்முன்னால நின்னு மெதுவா மூன்று சுற்றுச் சுற்றி தங்கள் உடல் அழகைக் காட்ட வேண்டும். ஸ்டெனோ டைப்பிஸ்டிக்கு கவர்ச்சிகரமான உடல் இருக்க வேண்டும் என்று நாங்கள் நம்புகிறோம்" என்றார்.

ஆறு பெண்களும் அதற்கு உடன்பட்டு ராஜ்கிரன் முன் நின்று மூன்று சுற்றுச் சுற்றிக் காட்டி தங்களுக்கு அழகு இருக்கிறது என்பதை நிரூபித்தனர். ஆனால் இதில் உடல் பெருத்த கோமதியையும், சப்பை உடல் கொண்ட பார்வதியையும் "நீங்கள் வெளியே உட்கார்ந்திருங்கள்" என்று அனுப்பிவிட்டார்.

இரண்டாவது டெஸ்ட். நான்கு பெண்களுக்கும் ஒரு காதல் கடிதத்தை வேகமாகப் படித்து சுருக்கெழுத்தில் எழுதிக்கொள்ளச் செய்து பிறகு அதனை தப்பில்லாமல் அழகுபடுத்தி டைப் செய்து கொண்டுவரச் செய்தார். இதில் நான்கில் இருவரே தேறினர். சீத்தாவும், ரஞ்சனியும் மட்டுமே மிஞ்சினர்.

அடுத்த டெஸ்ட்-கேள்வித்தாளை இருவரிடமும் நீட்டினார் ராஜ்கிரன். பதிலை அதிலேயே எழுதித் தரவேண்டும் இருவரும் பதிலளிக்க கேள்விகளைப் படித்தபோது.. முகமெல்லாம் சிவந்துவிட்டது. கேள்விகள் அப்படி.. இரவில் எவ்வளவு நேரம் இருக்க முடியும்? வெளியூர் சென்றால் கூடவே வரமுடியுமா? இடம் கிடைக்காத பட்சத்தில் ஒரே அறையில் தங்க முடியுமா? பகலில் கூப்பிட்ட இடத்திற்கு வரமுடியுமா? போன்ற கேள்விகள். தங்களால் முடியும், முடியாது என்பதை மட்டுமே எழுதியிருந்ததால் அவரவர் தங்கள் வசதிக்கேற்ப பதில் அளித்தனர்.

சீத்தா "பகல் நேரத்தில் கூப்பிட்ட இடத்திற்கு வர முடியும்" என்று பதிலளித்ததினால் அவளை மட்டும் இருக்கச் சொல்லி ரஞ்சனியை அனுப்பி விட்டார் ராஜ்கிரன்.

தனியாக இருந்த சீத்தாவிற்கு திக் திக் என்று அடித்துக் கொண்டது. தான் ஏதோ யோசிக்காமல் பதில் அளித்து விட்டதாக அவள் நினைத்தாள். அடுத்து என்ன கேட்கப்படுமோ?... அவளுக்கு கை, கால் உதறியது. ராஜ்கிரன் அவளருகில் வந்து நின்றான். "இப்போ நீ என்னுடன் வருகிறாய்" என்று கூறி நடந்தான். எதுவும் சொல்ல முடியாதவளாகச் சீத்தா அவன் பின்னே நடந்தாள். நேராக அலுவலக முற்றத்தில் நின்றிருந்த காரில் ஏறி டிரைவிங் சீட்டில் உட்கார்ந்த ராஜ்கிரன், "கம் ஒன்... கெட் இன் சைட்" என்றான். சீத்தா பின் சீட்டில் அமர்ந்து கொண்டாள்.

அவளின் இதயத்துடிப்பு இரட்டிப்பாகியது. வாய் உலர்ந்து போனது. எதுவும் பேசவில்லை. காரோ அலுவலகத்தை விட்டு வெளியேறி வேகமாகப் போய் ஒரு ஃபைவ் ஸ்டார் ஹோட்டலின் முன் நின்றது.காரை விட்டிறங்கிய சீத்தாவை "கம் ஃபலோ மீ" என்று கூறி ஹோட்டலிற்குள் நுழைந்தான்.

"ஹோட்டலுக்கா..." என்று கூறிய சீத்தாவை அவன் முறைத்துப் பார்த்த வண்ணம் காரின் பின் கதவைத்திறந்து "யெஸ் இறங்கி வா" என்று கூறினான். சீத்தா காருக்குள்ளும் உட்கார முடியாமல் வெளியேயும் நிற்க முடியாமல் அவன் பின்னே நடந்தாள். ஏதாவது அசம்பாவிதமாக நடந்தால் கூக்குரலிட்டு கத்தி ஓடி வந்துவிட முடியும் என்கின்ற நம்பிக்கையோடு நடந்தாள். வேலை கிடைக்க வேண்டுமே....மாதம் நான்காயிரம் வாங்க வேண்டுமே.. இருந்தாலும்?

சீத்தாவின் கால்கள் பின்னலிட, உடல் நடுங்க அவன் பின்னால் நடந்தாள். ரூம் நம்பர் 108. அறைக்கதவை அவன் திறந்தான். உள்ளே...

வயதான ஒரு மனிதர் கட்டிலில் உட்கார்ந்தவாறே ஏதோ யோசனையில் இருந்தார். அவர் பக்கத்தில் பெரிய பெரிய புத்தகங்கள் சிதறிக் கிடந்தன. ஒரு பக்கத்தில் மருந்துப் போத்தல்கள் வகைவகையாக கிடந்தன. ராஜ்கிரனை அவர் புன்முறுவலுடன் வரவேற்றார்.

"சேர் இவங்க மிஸ் சீத்தா. ஸ்டெனோவிற்கு வந்தவர்களில் செலக்ட் ஆனவர்" என்று சீத்தாவை அறிமுகப்படுத்தினான். சீத்தா அந்தப் பெரியவருக்கு வணக்கம் செலுத்தினாள். அந்தப் பெரியவரின் முகத்தைப் பல பத்திரிகைகளில் பார்த்த ஞாபகம் அவளுக்கு வந்தது. அவர் அன்பாக "கம் மை சைல்ட் நான் ஒரு சிறிய எழுத்தாளன். வேகமாக கதைகளையும், நாவல்களையும் நான் சொல்லச் சொல்ல நீ எழுத வேண்டும். அந்த உதவியை நீ செய்வியா? என்று வேகமாகக் கேட்டார்.

சீத்தா அந்தப் பெரியவரின் அருகில் சிதறிக் கிடந்த புத்தகங்களை அடுக்கியவாறே "சந்தோஷமாகச் செய்கிறேன் சார்" என்றாள். ராஜ்கிரன் தனக்கிட்ட வேலையைச் செய்து முடித்த மகிழ்ச்சியில் அவளை அழைத்துச் சென்றான். அலுவலகத்திற்கு. சீத்தாவின் பக்கம் திரும்பி "இவர் தான் நம் கம்பனியின் பொஸ்" என்றான்.

நெஞ்சத்தில் அழுத்திக் கொண்டிருந்த பாரம் தணிந்தது.

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்


பிரசன்னா ஜுவலர்ஸ்
தங்க நகைகளுக்கு
வெள்ளவத்தையில்
பிரசன்னா ஜுவல்லர்ஸ்
நங்கையர் விரும்பும்
தங்க நகைகளுக்கு
இல. 57-B, காலிவீதி
கொழும்பு-6
போன்: 587107



வாரமலர்
தினமுரசு




புன்னகை சிந்திடும்
பெண்ணவளின் மேனியில்
அழகுக்கு அழகூட்டும்
காலத்தால் அழியாத
கலைநுணுக்கம் கொண்ட
தரமான தங்கநகைகளுக்கு
வெள்ளவத்தை பிரசன்னா ஜுவலர்ஸ்
வாருங்கள்-இல.57B.
காலிவீதி, வெள்ளவத்தை
கொழும்பு-6.



# அலங்காரமான இல்லம்

[illegible]



# விம்பிள்டன் சம்பியன் ஸ்டெஃபி கிராஃப்

டென்னிஸ் உலகின் மாபெரும் திருவிழா விம்பிள்டன்.

நேரடியாகவும்-தொலைக்காட்சி வழியாகவும் பல கோடி ரசிகர்கள் இம்முறை விம்பிள்டன் போட்டிகளை கண்டு ரசித்தனர்.

விம்பிள்டன் உலகின் பெண் ஆட்டக்காரர்களில் வெற்றி நாயகி மோனிகா செல்ஸ் இம்முறை களம் காணவில்லை. கத்திக்குத்தால் பட்ட காயத்தை ஆற்றிக் கொண்டிருக்கிறார்.

மோனிகாவை குத்தியவர் ஸ்டெபிகிராப்பின் ரசிகர். ஸ்டெபி வெற்றி பெறுவதற்காகவே மோனிகாவை குத்தினேன். தொடர்ந்து மோனிகாவே வெற்றி பெற்றால் ஸ்டெபி எப்போது வெற்றிக் கனியைச் சுவைப்பதாம்" என்று அவர் கேட்டதும் சரிதான்.

மோனிகா இல்லாமல் ஆடி இம்முறை ஸ்டெபி கிராப் வெற்றி பெற்றுவிட்டார்.

ஆண் ஆட்டக்காரர்களில் வெற்றிக்கரம் உயர்த்தியிருப்பவர் பீட்சாம்ப்ராஸ். வேகம், வேகம், அசுரவேகம். அதுவே அவரது வெற்றிக்கு மூலதனம்.





## சமைப்போம் சுவைப்போம்

## பச்சைப் பட்டாணியும் சிறு காரட்டும்

தேவையானவை


[illegible]

வெங்காயம் - [illegible]

தயாரிப்பு முறை.

காரட்டுகளைத் தோல் சீவி ஒரு சொஸ்பானில் வைத்து வெங்காயத்தை தோலுரித்து துண்டுகளாக்கிப் போடவும். அத்துடன் 1 கரண்டி சீனியையும் சேர்த்து இவற்றை மூடக்கூடிய அளவு தண்ணீரை விடவும். பாத்திரத்தை மூடி 5 நிமிடங்கள் அடுப்பில் வேக வைக்கவும். பின்னர் [illegible] சிறு துண்டுகளாக அரிந்து, நன்றாகக் கழுவிய பச்சைப் பட்டாணியுடன் சேர்த்து பாத்திரத்துள் போடவும். பச்சைக் கற்பூரத்துடன் வெண்ணெய் [illegible] சேர்த்து. தேவைப் பட்டால் மேலும் கொஞ்சம் சீனியையும் [illegible] இத்தனை வையும் மூடக்கூடிய அளவில் மீண்டும் தண்ணீர் ஊற்றி 5 முதல் 10 நிமிடங்கள் [illegible] அடுப்பில் வேக விடவும். பட்டாணி நன்றாக வெந்ததும் நீர் ஆவியாக வெளியேற விடுங்கள். அடுப்பிலிருக்கும் போதே ஒரு கரண்டியால் அடிக்கடி கிளற வேண்டும்.

தேவையான அளவு உப்பு, மிளகுத்தூள் [illegible]. இது ஆறுபேருக்குப் போதுமானது.





வசந்த வாழ்த்துக்களுடன் மீண்டும் "சந்திப்போம்





இப்பத்திரிகை கொழும்பு கிருலப்பனை சோமாதேவி பிளேஸ், 88/14ஆம் இலக்கத்தில் டி.டி. என்டர்பிரைசஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தினரால் 25, வெல்பாரா, நாவலையில் உள்ள சமனல அச்சகத்தில் ஜுலை மாதம் 18ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்படுகிறது.